23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம் ™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

நதி 23 | பாலம் 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2013

# இலங்கையின் வடமாகாண சபை தேர்தல்

இலங்கையிலுள்ள ஒன்பது மாகாண சபைகளில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21, 2013 இல் நடைபெற உள்ளது.

இதில் வடமாகாண சபை தேர்தல் 25 வருடங்களுக்கு பின்னர் நடைபெறுவதாக கூறும் ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகை இத்தேர்தல் ஐக்கியநாடுகள் சபையின் வற்புறுத்தலாலேயே நடைபெறுகிறது என்கிறது. யூலை 1987 கைச்சாத்திடப்பட்ட இலங்கை, இந்திய ஒப்பந்தப்படி நொவெம்பர் 1987 இல் இலங்கை நாடாளுமன்றத்தில் அமல்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டமூலமே இந்த மாகாணசபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குகிறது. இதன் மூலம் ஓரளவு பிராந்திய சுயாட்சியை (Regional autonomy) மாகாணங்களுக்கு கிடைக்க இச்சட்ட மூலம் வழிவகுத்தது என ரொறொன்ரோ ஸ்ரார் கூறுகிறது.

செப்ரெம்பர் 21 இல் நடைபெறவுள்ள வடமாகாணசபை, மத்திய மாகாணசபை மற்றும் வடமேல் மாகாணசபைகளுக்கான தேர்தலில் 142 உறுப்பினர்களை 44 இலட்சம் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தெரிவு செய்ய உள்ளனர். இந்த 142 உறுப்பினர்களை தெரிவு செய்ய 126 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் குழுக்களும், 75 சுயேட்சை குழுக்களுமாக மொத்தம் 201 குழுக்கள் போட்டியிடுகின்றன.




வடமாகாண சபையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைதீவு என ஐந்து மாவட்டங்கள் உள்ளன. இவற்றிற்கு முறையே 16, 4, 5, 6, 5 என மொத்தமாக 36 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். மத்திய மாகாணசபையில் கண்டி, மாத்தளை, நுவரெலியா என மூன்று மாவட்டங்கள் உள்ளன. இவற்றிற்கு முறையே 29, 11, 16 என மொத்தமாக 56 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். வடமேல் மாகாண சபையில் குருணாகல், புத்தளம் என இரண்டு மாவட்டங்கள் உள்ளன. இவற்றிற்கு முறையே 34, 16 என மொத்தமாக 50 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

வடமாகாண சபைக்குரிய 36 உறுப்பினர்களை வடமாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட 714,488 வாக்காளர் தெரிவு செய்ய இருக்கின்றனர். வடமாகாண சபைக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 கட்சி குழுக்களும் 9 சுயேட்சை குழுக்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 11 கட்சி குழுக்களும் 2 சுயேட்சை குழுக்களும், மன்னார் மாவட்டத்தில் 1 2 கட்சி குழுக்களும் 8 சுயேட்சை குழுக்களும், வவுனியா மாவட்டத்தில் 12 கட்சி குழுக்களும் 7 சுயேட்சை குழுக்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 கட்சி குழுக்களும் 2 சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றன.

வடமாகாண சபைக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் 16 உறுப்பினர்களை தெரிவு செய்ய போட்டியிடும் 11 கட்சிகளும் பின்வருமாறு.

1. தமிழ் தேசிய கூட்டமைப்பு (இலங்கை தமிழரசுக்கட்சி)
2. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி
3. ஐக்கிய தேசியக்கட்சி
4. ஜனநாயக ஐக்கிய முன்னணி
5. ஐக்கிய சோசலிச கட்சி

தொடர்ச்சி 02ஆம் பக்கம்




MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி

TOYOTA
MARKVILLE
905.294.8100

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022







# இலங்கையின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

6. மக்கள் விடுதலை முன்னணி
7. ஜன சேத பெரமுனை
8. ஜனநாயக கட்சி
9. சிறீலங்கா தொழிலாளர் கட்சி
10. சிறீலங்கா மகாஜன பக்சஜா
11. சோசலிச சமத்துவ கட்சி

மற்றும் 9 சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றன.

மேற்குறிப்பிட்ட 11 கட்சிகள் உட்பட 9 சுயேட்சை குழுக்களும் தனித்தனியே 19 பெயர்களை உள்ளடக்கிய பெயர் பட்டியலை சமர்ப்பித்துள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் 426,703 பதிவு செய்யப்பட்ட வாக்குகள் உள்ளன.

தமிழ்தேசிய கூட்டமைப்பில் தற்போது பின்வரும் ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சி
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)
தமிழீழ விடுதலை இயக்கம் (TELO)
தமிழர் விடுதலைக் கூட்டணி
தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (PLOTE)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரை விட மற்றைய 18 வேட்பாளர்களும் மேற்கூறிய ஐந்து கட்சிகளிலும் இருந்து முறையே 7, 4, 3, 2, 2 என தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட தமிழர் தேசிய கூட்டமைப்பின் 19 வேட்பாளர்களின் பெயர் பட்டியல் பின்வருமாறு.

1. சி.வி. விக்னேஸ்வரன்
2. சீ.வீ. கே. சிவஞானம்
3. பா. கஜதீபன்
4. ச. சுகிர்தன்
5. எ. ஆனந்தி
6. எஸ். சயந்தன்
7. எஸ். பரம்சோதி
8. எஸ். சிவயோகம்
9. ஆர். ஆர்னோல்ட்
10. எம். கே. சிவாஜிலிங்கம்
11. விந்தன் கனகரத்தினம்
12. எஸ். குகதாஸ்
13. த. சித்தார்த்தன்
14. த. தம்பிராசா
15. க. தர்மலிங்கம்
16. எஸ். சர்வேஸ்வரன்
17. எஸ் ஐங்கரநேசன்
18. ஆர். ஜெயசேகரம்
19. என். வி. சுப்பிரமணியம்

இதில் முதன்மை வேட்பாளரான சி.வி.விக்னேஸ்வரன் முன்னாள் உயர்நீதி மன்ற நீதியரசர் ஆவர். த. சித்தார்த்தன் மற்றும் எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். எஸ். சயந்தன் சாவகச்சேரியை சேர்ந்த சட்டத்தரணி. எஸ். சிவயோகம் வடமராட்சியை சேர்ந்த பொறியியலாளர். எஸ். ஐங்கரநேசன் ஒரு சூழலியலாளர். விந்தன் கனகரத்தினம், எஸ். பரம்சோதி மற்றும் சீ.வீ. கே. சிவஞானம் ஆகியோர் யாழ். மாநகரசபை உறுப்பினர். எ. ஆனந்தி விடுதலை புலிகளின் திருகோணமலை அரசியல்துறை பொறுப்பாளராக இருந்தவ ரான எழிலனின் மனைவி. பா. கஜதீபன் தமிழரசுக்கட்சி இளைஞர் அணி யாழ். மாவட்ட தலைவர். எஸ். வி. சுப்பிரமணியம் வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர். ஆர். ஜெயசேகரம் வர்த்தக சங்க தலைவர்.

## கனடாவில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர்

ரொறன்ரோவில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் கலந்து சிறப்பித்த இராப்போசன விருந்துபசார நிகழ்வு ஸ்காபரோவில் ஒகஸ்ட் 11, 2013 இல் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு. இரா. சம்பந்தன் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம். ஏ.



சுமந்திரன் ஆகியோருடன் வர்த்தகப் பிரமுகர்கள் நலன் விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வு Jaasmin Banquet Hall இல் நடைபெற்றது. இதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனடாக்கிளை ஒழுங்கு செய்திருந்தது. இந்நிகழ்வில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் தமது தற்போதைய அரசியல் செயற்பாடுகள் பற்றியும் வட மாகாணசபைத் தேர்தலை தாம் எதிர்கொள்ள வேண்டியிருப்பதன் கட்டாயத்தையும் விரிவாக விபரித்து உரை நிகழ்த்தினர். கலந்துகொண்ட மக்களால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கும் பதிலளித்தனர்.

கூட்டமைப்பினரது கனடாக்கிளையினர் ஏற்பாடு செய்திருந்த மேற்படி நிகழ்விற்கு ரொறன்ரோவிலுள்ள தமிழர் அமைப்புகளான கனேடிய தமிழர் தேசிய அவை (NCCT), கனேடிய தமிழர் காங்கிரஸ் (CTC), நாடு கடந்த தமிழீழ அரசு (TGTE) மற்றும் கனடா நாம் தமிழர் அமைப்புகளது பிரதிநிதிகள், கனேடிய தமிழர் வர்த்தக சங்கம், தமிழர் சட்டத்தரணிகள் சங்கம் ஆகியனவும் கலந்து கொண்டு தமது ஆதரவினை தெரிவித்திருந்தனர்.

## ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்ற இடைத்தேர்தல்களின் முடிவுகள்

### 1. ஸ்காபரோ - கில்வூட்

| | | |
|---|---|---|
| லிபரல் கட்சி | Mitzie Hunter | 8,852 |
| பழமைவாத கட்சி | Ken Kirupa | 7,606 |
| புதிய ஜனநாயக கட்சி | Adam Giambrone | 7,010 |

இத்தேர்தலில் லிபரல் கட்சி கடந்த தேர்தலைவிட 13% வாக்குகள் குறைவாகவும், பழமைவாத கட்சி 2% அதிகப்படியான வாக்குகளையும் பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| பழமைவாத கட்சி | Dough Holyday | 16,130 |
| லிபரல் கட்சி | Peter Milczyn | 14,513 |
| புதிய ஜனநாயக கட்சி | P.C. Choo | 2,705 |

### 2. எற்ரோபிக்கோ - லேக்சோர்

இத்தேர்தலில் லிபரல் கட்சி கடந்த தேர்தலைவிட 9% வாக்குகள் குறைவாகவும், பழமைவாத கட்சி 17% அதிகப்படியான வாக்குகளையும் பெற்றுள்ளது.

### 3. ஒட்டாவா தெற்கு

| | | |
|---|---|---|
| லிபரல் கட்சி | John Fraser | 14,925 |
| பழமைவாத கட்சி | Matt Young | 13,631 |
| புதிய ஜனநாயக கட்சி | Bronwyn Funiciello | 5,030 |

இத்தேர்தலில் லிபரல் கட்சி கடந்த தேர்தலைவிட 6.5% வாக்குகள் குறைவாகவும், பழமைவாத கட்சி 5% அதிகப்படியான வாக்குகளையும் பெற்றுள்ளது.

### 4. வின்சர் - ரெகம்சி

| | | |
|---|---|---|
| புதிய ஜனநாயக கட்சி | Percy Hatfield | 15,693 |
| பழமைவாத கட்சி | Robert de Verteuil | 5,149 |
| லிபரல் கட்சி | Jeewen Gill | 3,057 |

இத்தேர்தலில் லிபரல் கட்சி கடந்த தேர்தலைவிட 31% வாக்குகள் குறைவாகவும், புதிய ஜனநாயக கட்சி 28% அதிகப்படியான வாக்குகளையும் பெற்றுள்ளது.

### 5. இலண்டன் மேற்கு

| | | |
|---|---|---|
| புதிய ஜனநாயக கட்சி | Peggy Sattler | 15,503 |
| பழமைவாத கட்சி | Ali Chahbar | 15,122 |
| லிபரல் கட்சி | Ken Coran | 5,866 |

இத்தேர்தலில் லிபரல் கட்சி கடந்த தேர்தலைவிட 30% வாக்குகள்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலை-நகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. ,*
   *5215 Finch Ave. E. #201,*
   *Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: www.vlambaram.com*
   *www.tamilvanakkam.com*




# கனடா ஒரு கண்ணோட்டம்

### கடந்த இதழ் தொடர்ச்சி

## கனடிய நீதி முறைமை

ஒவ்வொருவருக்கும் சட்ட உரிமைகளும்



சமத்துவமும் கிடைப்பதற்கு கனடிய நீதி முறைமை உத்தரவாதம் அளிக்கிறது. ஒவ்வொருவருக்கும் சம நீதி வாய்ப்பு உண்டு.

எங்கள் சமூகத்தில் வாழும் மக்களுக்கு வழிகாட்டும் நோக்குடன் வரையப்பட்ட விதிகளே கனடியச் சட்டங்கள் ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் பிரதிநிதிகளே அவற்றை ஆக்குகிறார்கள். காவல் துறையும் நீதி மன்றுகளும் சட்டங்களை நிலைநிறுத்துகின்றன.

கனடிய உரிமைகள் - சுதந்திரங்கள் பட்டயத்துக்கு அமைய கனடியர்களின் உரிமைகளும் சுதந்திரங்களும் கனடிய நீதி முறைமை ஊடாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. நீதி முறைமை ஊடாகப் பாதுகாக்கப் பட்டுள்ள உரிமைகள், சுதந்திரங்கள் சில பின்வருமாறு:

- மத, சிந்தனை, நம்பிக்கை, கருத்துரைப்பு, எடுத்துரைப்புச் சுதந்திரம் போன்ற அடிப்படைச் சுதந்திரங்கள்,
- ஒருவரின் வாழ்வு, விடுதலை, பாதுகாப்பு உரிமைகள் உட்பட்ட சட்ட உரிமைகள்,
- சட்டத்தின் முன் சமத்துவம். காவல் துறை, நீதி மன்றுகள் அளிக்கும் பாதுகாப்பையும் சேவைகளையும் சரிநிகராகப் பெற்றுக்கொள்ளும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

## சட்டதிட்ட உதவி பெறுதல்

சட்டப் பிரச்சனைகள் குறித்து வழக்குரைஞர்களின் உதவி உங்களுக்கு உண்டு. அவர்கள் நீதி மன்றுகளில் உங்களுக்காக வாதாடுவார்கள். உங்களால் ஒரு வழக்குரைஞருக்கு கட்டணம் செலுத்த முடியாவிட்டால், நீங்கள் இலவசமாகவோ குறைந்த செலவிலோ சட்டதிட்ட உதவி களைப் பெற்றுக்கொள்ளலாம். அநேகமான சமூகங்களில் இவ்வசதிகள் கிடைக்கின்றன.

## குடிமக்களின் உரிமைகளும் பொறுப்புகளும்

## குடியுரிமைத் தேர்வு

ஒரு கனடியப் பிரசையின் உரிமைகள், பொறுப்புகள் பற்றி உங்களிடம் வினவப்படும்.

கனடியர்கள் என்றவகையில் எமக்குரிய உரிமைகள் கனடிய உரிமைகள் - சுதந்திரங்கள் பட்டயத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.



## தேர்தல்களில் வாக்களிப்பது

கனடியர்கள் அனைவருக்கும் சில உரிமைகளும் பொறுப்புகளும் உள்ளன. அவை கனடியச் சட்டங்கள், மரபுகள், பொது விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டவை.

மேற்படி உரிமைகள் பலவும் கனடிய உரிமைகள்-சுதந்திரங்கள் பட்டயத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. இப்பட்டயம் கனடிய அரசியல் யாப்பில் இடம் பெற்றுள்ளது. கனடாவில் வசிக்கும் ஒவ்வொருவரின் அடிப்படை உரிமைகளை யும் சுதந்திரங்களை யும் கனடிய உரிமைகள்-சுதந்திரங்கள் பட்டயம் கட்டிக் காக்கிறது. மேற்படி உரிமைகள், சுதந்திரங்கள் சில பின்வருமாறு:

- வாக்குரிமை போன்ற மக்களாட்சி உரிமைகள்,
- நீதியான விசாரணைக்கு உள்ளாகும் உரிமை போன்ற சட்ட உரிமைகள்,
- பாகுபாட்டுக்கு உள்ளாகாவாறு பாதுகாக்கப்படும் உரிமை போன்ற சமத்துவ உரிமைகள்,
- கனடாவில் எந்த இடத்திலும் வாழ்ந்து, உழைக்கும் உரிமை போன்ற இடம்பெயர்வு உரிமைகள்,
- பழங்குடி மக்களின் உரிமைகள்,
- சிந்தனை, பேச்சு, மதச் சுதந்திரம், அமைதியாகக் கூடும் சுதந்திரம் போன்ற அடிப்படைச் சுதந்திரங்கள்.

பிரசையின் உரிமைகள் சில கனடியச் சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ளன. கூட்டாட்சி அரசாங்கப் பதவிகளுக்கு முன்னுரிமை பெறும் உரிமை அத்தகைய உரிமைகளுள் ஒன்று.

மேற்படி உரிமைகள், சுதந்திரங்கள் பலவும் முந்திய சட்டங்களில் இடம்பெற்றவை. எனினும், 1982ல் உரிமைப் பட்டயம் தோற்று விக்கப்பட்டதும் அவை நன்கு வரையறுக்கப் பட்டு, கட்டிக்காக்கப்பட்டு வருகின்றன.

அத்தகைய உரிமைகளுடன் கனடியர் ஒவ்வொருவருக்கும் பொறுப்புகளும் உள்ளன. தனிப்பட்ட கனடியர்கள் அனைவருக்கும், கனடிய ஆட்சிக் கூறுகள் அனைத்துக்கும் கனடியர்கள் அனைவருடைய உரிமைகளை யும் சுதந்திரங்களையும் மதித்து நடக்கும் பொறுப்புண்டு. எனினும், கனடியர் ஒருவரின் அல்லது கனடியக் குழுமம் ஒன்றின் உரிமைகள் இன்னொரு கனடியரின் அல்லது குழுமத்தின் உரிமைகளில் குறுக்கிடக் கூடாது என்பதை உணர்வது முக்கியம். அந்தவகையில் இந்த உரிமைப் பட்டயம் எல்லாச் சூழ்நிலைகளிலும் நீதியான முறையில் நிலைநாட்டப்படுவதை உறுதிப் படுத்தும் வண்ணம் இப்பட்டயத்துக்கு நீதி மன்றுகள் அவ்வப்பொழுது விளக்கமளிக்க வேண்டும்.

தொடரும்...

*- மணி வேலுப்பிள்ளை*

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# எனக்கு தியானம் வருமா?

ஐயோ என்னால ஒரு நிமிடம் கூட கண்ண மூட முடியலயே, என் மனம் என் கட்டுப்பாட்டுலேயே இல்லை, எனக்கு போய் தியானம் வருமா? இதுபோன்ற கேள்விகள் இல்லாமல் தியானம் கற்றுக் கொள்ள வந்தவர்கள் வெகு குறைவு. ஆனால் அனைவருக்கும் தியானம் சாத்தியமே என்கிறார் சத்குரு. பதில் உள்ளே

கேள்வியாளர் - தியானம் என்றால் ஆசையற்ற நிலையா, எண்ணங்கள் அற்ற நிலையா?

சத்குரு: கண்களை மூடிக் கொண்டு அமர்வதை தியானம் என்கிறார்கள். கண்களை மூடிக் கொண்டு நீங்கள் பல விடயங்களைச் செய்ய முடியும். சிலவற்றின் மீது கவனத்தைக் குவிக்க முடியும், ஒரு மந்திரத்தை தொடர்ந்து உச்சரித்துக் கொண்டிருக்க முடியும். இப்படி பல விடயங்கள் உள்ளன.

'நீங்கள்' என்பது என்ன? தற்போதைய நிலையில் உங்களுக்கு உடல் இருக்கிறது, எண்ண ஓட்டங்கள் உள்ளன, உணர்ச்சிகள் உள்ளன. இந்த மூன்று அடிப்படைத் தன்மைகளைத் தான் 'நான்' என்று சொல்லிக் கொள்கிறீர்கள், இல்லையா?

இந்த உடலை நீங்கள் எங்கிருந்து பெற்றீர்கள்? நீங்கள் பிறக்கும் போது இவ்வளவு சிறிதாக இருந்தீர்கள். இப்போது இவ்வளவு பெரிதாய் வளர்ந்திருக்கிறீர்கள். எப்படி? சாப்பாட்டின் மூலமாகத்தான், இல்லையா? எனவே உடல் என்பது ஒரு சாப்பாட்டுக் குவியல்தான். நீங்கள் சாப்பிட்ட சாப்பாடு தான் இங்கே ஒருவித உடலாக அமர்ந்திருக்கிறது. மனம் என்று எதைச் சொல்லுகிறீர்கள்?

மனம் என்பது நீங்கள் பார்த்த, கேட்ட, நுகர்ந்த, சுவைத்த, தொட்டதன் மூலமாக பதிந்த பதிவுகளின் குவியல்தான். ஐம்புலன்களின் மூலமாக சேர்ந்தவற்றை மனம் என்கிறீர்கள். எனவே 'மனம்' என்று நீங்கள் சொல்வதும் உண்மையில் உங்கள் மனமல்ல. இவை வெளியிலிருந்து சேகரமாகும் பதிவுகள் தான். உங்கள் உணர்ச்சியென்பது உங்கள் தலையில் நீங்கள் சேகரித்து வைத்துள்ளவற்றின் வெளிப்பாடுதான்.

எனவே தியானம் என்பதன் நோக்கம் எது நீங்கள் இல்லையோ அவற்றிலிருந்து உங்களை தனியே பிரித்தெடுப்பதுதான். இந்த உடல் என்பது உணவின் குவியல், இது நீங்கள் அல்ல. எனவே தியானத்தில் அமர்ந்திருக்கும் போது, நான் உடல் அல்ல என்பதைத் தெளிவாக உணர்கிறீர்கள். மனம் என்பதும் வெளியிலிருந்து சேர்ந்த பதிவுகளின் குவியல் தான்.



எந்தவிதமான சூழ்நிலையில் நீங்கள் இருக்கிறீர்களோ உங்கள் குடும்பம், பெற்றோர், சென்று வந்த பள்ளி, செய்யும் வேலை என்பவற்றைப் பொறுத்தே உங்கள் மனம் இருக்கிறது. இது உங்கள் மனமல்ல. இது நீங்கள் சமூகச்சூழலின் மூலம் சேகரித்த ஒன்று. எனவே நீங்கள் மனமல்ல என்ற தெளிவான இடைவெளியைக் காண்கிறீர்கள்.

எந்த ஒரு பாதிப்பும் உங்களுக்குள் உடலின் மூலமாகவோ மனதின் மூலமாகவோ தான் வருகிறது. பலவிதமான துன்பங்களை மனிதர்கள் அனுபவிக்கிறார்கள். மனிதர்கள் தாங்களாகவே எல்லாவிதமான துன்பங்களையும் கண்டுபிடித்து விட்டார்கள். ஆனால் எல்லாத் துன்பங்களையும் உடலின் மூலமாகவோ அல்லது மனதின் மூலமாகவோ தான் மனிதர்கள் அனுபவிக்கிறார்கள். நீங்கள் கண்மூடி தியானத்தில் அமர்ந்திருக்கும் போது நான் உடலல்ல, நான் மனமல்ல என்று தெளிவாக உணர்ந்தால் துன்பம் உங்களைத் தொடமுடியுமா? இதுதான் துன்பங்களுக்கு எல்லாம் முடிவு.

வெளியிலிருந்து சேகரித்த உடல், மனம் இவற்றுக்கும் உங்களுக்கும் இடையில் தெளிவான இடைவெளியை உணர்ந்து நீங்கள் தியானத்தன்மையில் இருந்தால், அவை இரண்டையும் எப்படி உபயோகப் படுத்துவது என்பதைக் கற்றுக் கொள்வீர்கள், அவ்வளவுதான். ஆனால் அதுவே நீங்களல்ல. உங்கள் அனுபவத்தில் இந்த இரண்டோடும் அடையாளம் கொள்ளாமல் இருந்தால், துன்பம் என்பதே இருக்காது. இது ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்தியம். ஒருவர் விருப்பத்தோடு இருந்தால் நிச்சயம் இது சாத்தியம்.

இந்த சூழ்நிலையை நமக்குள் எப்படி உருவாக்குவது என்பதற்கு ஒரு முழு விஞ்ஞானமே உள்ளது. எனவே இதை நாம் எல்லாவகையான மக்களுக்கும் வழங்கிக் கொண்டிருக்கிறோம். குற்றவாளிகள், கிராமமக்கள், படிக்காதவர்கள், மெத்தப் படித்தவர்கள், தொழில்துறைத் தலைவர்கள் என பலருக்கும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

வெளிச்சூழ்நிலை என்று வரும்போது நமது திறமை என்பது வித்தியாசப்படுகிறது. நான் செய்வதை நீங்கள் செய்ய முடியாது. நீங்கள் செய்வதை நான் செய்ய முடியாது. வெளிச்சூழல் திறன் ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படுகிறது. ஆனால் உள்நிலை-யைப் பொறுத்தவரை, எல்லோரும் ஒரேவிதமான திறனுடன் இருக்கிறோம். நீங்கள் அதை பயன்படுத்திக் கொள்ளப் போகிறீர்களா, இல்லையா என்பது உங்களைப் பொறுத்தது.

தியானம் எனும்போது எல்லோருக்கும் சமமான வாய்ப்பு உள்ளது. ஒருவர் அதற்கான விருப்பம் கொண்டிருக்க வேண்டும். அவ்வளவுதான். துன்பத்திலிருந்து விடுபட்டு வாழ யாருக்குத்தான் விருப்பம் இருக்காது? யார் அதை வேண்டாமென சொல்லப் போகிறார்கள்? எல்லோருக்கும் அதுதான் தேவை. ஆனால் பலருக்கும் இதைப்பற்றி தெரியவில்லை என்பதுதான் விடயம்.

எனவே நமது வேலை, தியானம் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவது தான். இது ஏதோ மலைக் குகைகளுக்கு செல்வதைப் பற்றியல்ல. இமயமலைக்குச் சென்று அமர்வதைப் பற்றியல்ல. இது, துன்பங்களில் இருந்து முற்றிலுமாய் விடுபட்டு வாழக் கற்றுக் கொள்வது. நீங்கள் விரும்பும் விதமாக வாழ்வோடு விளையாட முடியும். ஆனால் வாழ்க்கை உங்கள் மீது ஒரு சிறு தழும்பைக் கூட ஏற்படுத்தாது.

தற்போது வாழ்வின் போக்கில் மக்கள் காயம்பட்டுக் கிடக்கிறார்கள். அப்படி என்னதான் செய்துவிட்டார்கள்? தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றவும், ஒரு நாள் இறந்து போகவும் எவ்வளவு வலியையும் வேதனையையும் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்? ஏனென்றால், இன்னமும் உயிர்த்தன்மையோடு எப்படி தொடர்பு கொள்வது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

ஒரு மனிதன் தியானநிலையில் இருந்தால் அந்த மனிதனுக்கு துன்பம் என்பதே இருக்காது. தியானநிலை என்றால்



## சத்குரு வாசுதேவ்

துன்பத்திலிருந்து முற்றிலும் விடுபட்ட நிலை. வாழ்க்கையின் போக்குகள் அவரைத் தொடாமல் அவரது வாழ்வில் அவர் விரும்பியதைச் செய்யலாம்.

கேள்வியாளர் - தியானத்தின் பலன்கள் என்ன?

சத்குரு: பொதுவாக ஒவ்வொரு மனிதரும் விரும்புவது ஆரோக்கியத்தையும் அமைதியையும் சந்தோசத்தையும்தான். ஆரோக்கியம் என்பதை நிச்சயமாக உருவாக்கிக் கொள்ளமுடியும். தியானம் என்ற தன்மை நமக்குள் வந்துவிட்டால், அமைதியும் சந்தோசமும் இயல்பானவை ஆகிவிடும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

தியானம் என்பது செயல் அல்ல, அது ஒரு நிலை. வாழ்க்கையே தியானநிலையில் இருக்கவேண்டும் என்பதுதான் நம் நோக்கம். ஏதோ பத்து நிமிடங்களுக்கு கண்ணை மூடி அமர்வதைப் பற்றி நாம் பேசவில்லை. எதைச் செய்தாலும் தியான நிலையில் செய்வதைப் பற்றி பேசுகிறோம். இந்தத் தன்மையையே நமது வாழ்வில் கொண்டுவர விரும்புகிறோம். அப்படி நடந்தால் ஆரோக்கியமாக இருப்பது, அமைதியாக இருப்பது, ஆனந்தமாய் இருப்பது என்பதெல்லாம் முயற்சியின்றி நடக்கும்.

தியானத்தின் தன்மை அப்படிப்பட்டது. ஒரு மனிதன் இப்படி இருந்தால் அவனது உடல், மன செயல்பாடுகள் ஒருமுகப்பட்டும் கூர்மையுடனும் இருக்கும். ஒரு மனிதர் அமைதியாகவும், ஆனந்தமாகவும் இருக்கும் போது மட்டுமே அவரது புத்திசாலித்தனம் சிறந்த முறையில் செயல்படும்.




விளம்பரம்
பத்திரிகையை
இணையத் தளத்தில்
வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# மோட்கேஜ் கிளினிக்

கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமேன்டையும் ஒரே பேமேண்டாக மாற்ற வேண்டுமா?

லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேண்டுமா? ரீபைனான்ஸ் செய்ய வேண்டுமா?

2 வது மற்றும் 3வது மோட்கேஜ் தேவையா? பாங்க்ரப்சி செய்தோருக்கான மோட்கேஜ் தேவையா?

உரிய நேரத்தில மோட்கேஜ் தவணைப் பணத்தினை செலுத்தமுடியாது பவர் ஒப் சேலினை எதிர்நோக்குகிறீர்களா?



தயா (PK) கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
Cell : 416-716-8707



ஜெ (Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843



உதயன் (Utha) மாணிக்கவாசகர்
Mortgage Agent
FSCO Lic # M 11001140
Cell : 647-282-8842



நிஷாந்தன் சுவர்ணராஜா
Mortgage Agent
FSCO Lic # M 10001830
Cell : 647-385-2710

இலவச ஆலோசனைக்கு தயக்கமின்றி அழையுங்கள்



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-644-3555

rapid realty inc.

# தமிழ் வீரன் சரன் சத்தியசீலனின் சாதனை!

## விளையாட்டுத் தகவல்கள் 353

கனடாவில் தமிழ் வீர வீரங்கனைகள் விளையாட்டுத்துறையில் முன்னோக்கிய பாதையில் சென்று கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. இந்த வளர்ச்சிப் பாதையில் அடுத்த மைல்கல்லாக சரன் சத்தியசீலன் அவர்களுடைய சாதனை அமைந்திருப்பது தமிழ் சமூகமே கனடாவில் பெருமைப்படக் கூடிய ஒரு விடயமாகும்.

சென்ற வாரம் 'Scarborough Mirror' பத்திரிகையில் சரன் சத்தியசீலனின் படத்துடன் கூடிய இரண்டு பக்க கட்டுரை பிரபல எழுத்தாளர் David Grossman அவர்களால் வரையப்பட்டது. ஸ்காபரோவில் உள்ள பாடசாலையான West Hill Collegiate இல் உள்ள HONOUR ROLL OF ATHLETES பட்டயத்தில் உள்ள கனடாவில் பிரபல்யம் வாய்ந்த வீரர்கள் வரிசையில் கார் பந்தய சம்பியன் (Auto Racer) - Paul Tracy, NHL Players - Chirs Stewart and Al Second, Basketball Players - Denham Brown, Jevohn Shepherd and Rowan Barrert மற்றும் Football Player - Delroy Clarke வரிசையில் சரன் சத்தியசீலனும் பந்துடன் வருவதும் சேர்க்கப்பட்டு இந்தப் பட்டயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழர் சமூகம் அனைவருமே பெருமைப்படக்கூடிய ஒரு விடயமும் அதேநேரத்தில் இனி வளர்ந்து வரும் வீர வீரங்கனைகளும் திறமை இருந்தால் முன்வரலாம் என்பதற்கும் இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

### *Top Scarborough Athletes Of the year*

இவ் விருது West Hill பாடாசாலை சார்பாக சரன் சத்தியசீலன் அவர்களுக்கு 3 விளையாட்டுத்துறைகளில் வழங்கப் பட்டுள்ளது. மெய்வல்லுனர் போட்டிகள் (Track And Field), உதைபந்தாட்டம் (Soccer) மற்றும் Badminton ஆகிய துறைகளாகும். ஸ்காபரோவில் 22 வீரர்களுக்கு 12 பாடசாலைகள் சார்பாக ஒன்றாறியோ அரசாங்கம் மற்றும் ஒன்றாறியோ மேல்நிலை இடையே தொழிலாளர் சங்கம் ஆகியவற்றினால் ஸ்காபரோவில் உள்ள கல்லூரிகளில் இருந்து வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.




பல வெற்றிக்கிண்ணங்களை வென்ற Jarvis Sports Club விளையாட்டு கழகத்தில் திறமைமிக்க உதைபந்தாட்ட காப்பாளராக தற்சமயம் சரன் சிறந்து விளங்குகிறார்.

Canadian Soccer League இன் விளையாட்டுக்கழகமான North York Astoros விளையாட்டுக்கழகத்தில் பந்து காப்பாளராக சிறந்து விளங்கும் சரன் சத்தியசீலன் தமிழ் மாணவர்களுக்கு West Hill கல்லூரியில் Soccer பயிற்சியாளராகவும் கடமையாற்றி உள்ளார். 18 வயதுடைய இந்த தமிழ் வீரன் விளையாட்டுத்துறையில் மட்டுமல்லாமல் கல்வியிலும் சிறந்து விளங்கி (Academically Gifted) தற்போது University of Toronto பல்கலைக்கழகத்தில் Neuroscience துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளார்.

மூன்றாவது தடவையாக West Hill கல்லூரியில் Male Athlete of the year விருதை தொடர்ந்து வென்ற ஒரேயொரு தமிழ் வீரர் ஆவார். 10 ஆம் வகுப்புப் படிக்கும் போது West Hill Top Athletic award for boys (Junior Title) விருதை வென்ற சரன் சத்தியசீலன் தொடர்ந்த அடுத்த வருடம் Senior Title யும் வென்று Scarborough Mirror பத்திரிகையில் Spirit of Sportsmanship பாராட்டுதலை பெற்றுள்ளார். Scarborough Mirror பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் கடுமையான பயிற்சியினால்தான் பல தடைகளைத்தாண்டி தன்னால் Athletic of the year விருதை வெல்லமுடிந்தது என்று கூறினார். உதைபந்தாட்டத்தில் மட்டு மல்லாது Badminton துறையிலும் விருதுகளை வென்ற சரன் பல தடகள போட்டிகளில் உயரம் பாய்தல் (High Jump), Triple Jump போட்டிகளில் பல விருதுகளை வென்றுள்ளார்.

சென்ற வருடம் MVP விருதை உதைபந்தாட்டத்தில் West Hill "Warrior" சார்பாக வென்றதோடு மட்டுமல்லாமல் " Most Dedicated and Most Improved" விருதுகளையும் Toronto District School Board மூலம் வெற்றி பெற்றுள்ளார். விளையாட்டு வீரனாக மட்டுமல்லாமல் கல்வியில் சிறந்து விளங்கும் இவர் இசைத்துறையில் புல்லாங்குழல் வாத்திய கலைஞனாகவும் திகழ்கிறார். இவற்றுடன் நின்று விடாமல் எமது தமிழர் சமூகத்திற்கும் தொண்டராக பல வீரர்களுக்கு பயிற்சியும் அளித்து வருகிறார்.

இவருக்கு எமது 'விளம்பரம்' பத்திரிகை சார்பாக பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**எஸ். கணேஷ்**




## *LOTUS KID'S EARLY LEARNING*




*WE PREPARE AN EARLY EDUCATION FOR YOUR CHILDREN.*

**Ages From 3 - 6**

*We Help Prepare Your Children With an*
**EARLY EDUCATION**
*Allowing Them to Play and Learn Together*
*Focusing On Co-Operation and Team Work!*

***Starting On September 2013***

**உங்கள் மழலைகளின் கல்வி எதிர்காலத்துக்கு நாங்கள் வித்திடுகின்றோம்.**

***FOR EARLY ADMISSIONS CALL : 416.738.8824***
***3011 MARKHAM ROAD UNIT 58 M1X 1L9***



## பாச்செண்டு

**முன்பள்ளிச் சிறுவருக்கான பாடல்கள் C.D.**

பாடல்கள்: கவிஞர் சபா. அருள்சுப்பிரமணியம். M.A
இசை: சங்கீத, மிருதங்க, கலாவித்தகர் இசைக்கலைமணி வர்ண இராமேஸ்வரன்
இடம்: Scarborough Civic Centre
காலம்: ஆகஸ்ட் 23, 2013 வெள்ளிக்கிழமை (23.08.2013)
நேரம்: மாலை 6.00 – 9.00 (நிகழ்ச்சி குறித்த நேரத்திற் தொடங்கும்)

வெளியீட்டு நாளன்று இறுவட்டுடன் பாடல்கள் அடங்கிய கையேடும் அன்பளிப்பாக வழங்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்:
905.479.5375 / 647.378.3006

அன்புடன்,
தங்கள் ஆதரவை நாடும்,
சபா. அருள்சுப்பிரமணியம். யோகா. அருள்சுப்பிரமணியம்.

# அடமானக்கடனில் புதிய கட்டுப்பாடு

ஜுலை 2012இல் (கடந்த ஆண்டு) இன்றைய மத்திய நிதிமந்திரி திரு. ஜிம் ஃபிளஹெற்றி ஆதன வியாபாரத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக இறுக்கமான சில நிபந்தனைகளை அடமானக்கடன் பெறுபவர்கள் மீது திணிந்திருந்தார். அதன் பயன்பாடு உடனடியாக ஏற்பட்டது. ஆதன வியாபாரம் இறங்குமுகமாக இருந்தது. குறிப்பாக அடுக்குமாடி மனைகளின் வியாபாரம் மந்த நிலையை அடைந்தது. இருந்தபோதிலும், மற்றைய வீடுகளின் விலையிலும் வியாபாரத்திலும் எதிர்பார்த்தளவு மாற்றங்களை காணமுடியவில்லை.

இதற்கு மாறாக, தனிவீடுகள், இருவீடுகள், தொடர்வீடுகளின் விலையில் அதிகரிப்பே ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக, இந்த வருடத்தின் (2013) ஓகஸ்ட் மாதத்தின் தொடக்கத்தில் அடமானக்கடன் பெறுவதில் மேலும் இறுக்கமான நிலையை நிதி அமைச்சர் ஏற்படுத்தியுள்ளார். அதாவது கனடா மோட்கேஜ் மற்றும் கவுஷிங் கோப்பறேசன் (Canada mortgage & housing corp. - CMHC) ஒவ்வொரு நிதி நிறுவனங்களால் கொடுப்பனவு செய்யும் அடமானக்கடனிற்குரிய அதிகூடிய தொகையினை $350 மில்லியனாக ($350 Million) வரையறுத்துள்ளளார்.

2013 இற்குரிய அதிகூடிய மொத்தமான காப்புறுதி செய்யப்படக்கூடிய அடமானக்கடன் 85 பில்லியனாக உச்சமட்டம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த தொகை சகல நிதிநிறுவனங்களும் உட்பட இவ்வருடத்தில் ஏற்பட்ட அதீத அடமானக்கடன் அதிகரிப்பை தடுத்து நிறுத்துவதற்காக இவ்வாறு வரையறுக்கப்பட்டதாக CMHC இன் ஆய்வாளர் தெரிவித்துள்ளார். இவ்வாண்டு, யூலை மாதம் ஆதன வியாபாரத்தில் 15% வியாபார அதிகரிப்பும் 8% ஆதனவிலை அதிகரிப்பும் கடந்த ஆண்டு ஜுலை உடன் ஒப்பிடும்போது ஏற்பட்டுள்ளது.



கடந்த ஆண்டு கொண்டு வந்த அடமானக்கட்டுப்பாடுகளுடன் இவ்வாண்டும் புதிதாக இந்த நிபந்தனையும் அடமானக்கடன் பெறும்முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அடமானக்கடன் பெறுவதில் இவ்வாறான இறுக்கமான நிலைப்பாட்டை, மத்திய அரசு தொடர்ந்து ஏற்படுத்துவதற்கு என்ன காரணமாகலாம்?

தொடர்ச்சியான ஆதனவிலை அதிகரிப்பு எதிர்காலத்தில் அமெரிக்காவில் ஏற்பட்டது போன்ற, பாரிய விலை இறக்கம் ஒன்று கனடாவில் ஏற்படலாம் என்பதனை தடுப்பதற்காகவே இவ்வாறான இறுக்கமான நிலைமைகளை ஏற்படுத்துவதாக என்று விளக்கம் கொடுக்கப்படுகின்றது. இதுபோன்ற இறுக்கமான சட்டதிட்டங்கள் கனடாவில் பாரிய ஒரு விலை இறக்கம் ஏற்படுவதை தடுக்கும் என்றே

## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்

## தொடர் - 396

கொள்ளலாம்.

கனடாவில் நாம் வாழும் இல்லத்திற்குரிய (Principal Home) வட்டி கொடுப்பனவிற்கு (Interest Payment) வருமானவரி விலக்கு கொடுக்கப்படுவதில்லை. ஆனால் அமெரிக்காவில் கொடுக்கப்படுகிறது என்பதனையும் கவனிக்க. இருந்தபோதிலும் Canadian Real Estate Association எதிர்வு கூறலின்படி இந்த வருடம் 1.2% விலை இறக்கம் ஏற்படலாம் என கூறப்படுகிறது. இது சாத்தியமா?


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



**Raja Mahendran,** P.Eng.
Broker / Owner

**5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969**

## CONVENIENCE STORE FOR SALE

Over 10 years in business. convenience / Grocery / Audio /CD/ video/ Lotto/Stamps.
Asking only $99,900

## CONDO FOR RENT
### KENNEDY & HWY 401

2 Bedroom condo. for rent. 2 Washrooms, 1 parking. Avail. September 01, 2013
Rent $1400

## LESLIE & BLOOMINGTON

Over 5000 Sq.ft. 3 Parking. Custom built home. Golfcourse + Natures area. Gated house. Only 74 neighbours. Avail. Summer 2014.

## HOUSE FOR SALE
### NEILSON & SHEPPARD

4 Bedroom house for sale. Single garage. 3 Washrooms. Close to all facilities.
Asking price $209,900

## CONDO FOR SALE
### LAKE VIEW

2 Bedroom condo for sale. 2 Washroom. Balcony. Close to all facilities. 2 Years old
Price $399,900.

## HOUSE FOR SALE
### EGLINTON & MIDLAND



Free hold 2 storey town house for sale. Over 1600Sq.ft.
3 Bedroom finished bsmt. Close to RH King School.
Asking Only $419,900

## HOUSE FOR SALE
### NEILSON & SHEPPARD



Semi detached 4 bedroom house for sale. 2 Storey.
Asking Only $299,900

# அமெரிக்கா - கனடா எல்லையினை கடக்க அனுமதிக்கும் விசேட சாரதி அனுமதி பத்திரம்

## கனடிய தகவல் தொடர் 201

***ENHANCED DRIVER'S LICENSE***

கனடாவின் பிரஜை ஒருவர் முன்னர் தரைமார்க்கமாக எல்லை கடந்து அமெரிக்கா சென்று வரவேண்டுமானால் இதுவரை காலமும் கையில் கனடாவின் பிரஜா உரிமை அட்டையினை எடுத்துச் சென்றால் மட்டும் போதுமானது என்ற நிலைமை மாறி யூன் 01, 2009 இலிருந்து கடவுச்சீட்டு (பாஸ்போட்) இல்லாது தரை மார்க்கமாக எல்லையினை கடந்து செல்ல முடியாது என்ற சட்டமூலம் நடைமுறையில் உள்ளது.

இக்கடவுட்சீட்டினை எந்நேரமும் வாகனத்தில் கொண்டு திரிதல் என்பது அடிக்கடி சென்று வருபவர்களுக்கு சிரமமாக இருக்கும் என்பதால் மேலதிகமாக ஒரு விசேட சாரதி அனுமதி பத்திரத்தினை (Enhanced Driver's License) தாங்கள் விரும்பினால் ஒன்ராரியோ மாகாண அரசில் விண்ணப்பித்து பெற்று வைத்திருந்தால் இலகுவாக இம்மேலதிக சாரதி அனுமதி பத்திரத்துடன் அமெரிக்கா சென்று வரலாம் என்ற சட்டமூலம் நடைமுறையில் உள்ளது. ஒன்ராரியோ மாகாணத்திலிருந்து வருடம் ஒன்றுக்கு 35 மில்லியன் வாகனங்கள் எல்லையினை கடந்து தரை மார்க்கமாக அமெரிக்காவினுள் செல்வதால் அடிக்கடி பிரயாணம் செய்பவர்களுக்கு என உருவாக்கப்பட்டுள்ளது.

### இவ்விசேட சாரதி அனுமதி பத்திரத்துக்கு (Enhanced Driver's Licencse) விண்ணப்பம் செய்து பெற தகுதியானவர்கள் யார்?

1. கனடாவின் பிரஜையாக இருந்தல் வேண்டும்.
2. கனடாவில் ஒன்ராரியோ மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
3. ஒன்ராரியோவின் வலிமையான சாரதி அனுமதி பத்திரம் வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

[இது G -1 அல்லது G-2, ஆகவும் இருக்கலாம்.]

4. பிரயாணம் செய்ய சட்டரீதியான தடை இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

### எப்படி இப்பத்திரம் இருக்கும்? எப்படி இதனை பெறுவது? தகவல்களை எப்படி பெறுவது?

ஒன்ராரியோ மாகாணத்தில் வழங்கி வரும் சாதாரண சாரதி அனுமதி பத்திரம் போலவே எதுவிதமான வித்தியாசமும் இல்லாது தங்களின் படத்துடன் இது இருக்கும். இதில் "Enhanced Driver's Licencse" என ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும் எழுதப்பட்டு இருக்கும். சாரதி அனுமதிப்



பத்திரம் மாதிரி எந்நேரமும் இலகுவாக கொண்டு திரியலாம். யூன் 01, 2009 இலிருந்து இதனை அமெரிக்க எல்லையினை கடப்பதற்கு கடவுச்சீட்டுக்கு பதிலாக பயன்படுத்தப்படுகிறது. ஒன்ராரியோ மாகாண அரசு தங்களின் இம்மாகாணத்தின் விசேட சாரதி அனுமதிப்பத்திரத்தினை பயன்படுத்தி அமெரிக்காவுக்கு சென்றுவர கனடிய, அமெரிக்க மத்திய அரசுடன் ஒப்பந்தங்கள் செய்து சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதனை பெறவேண்டுமாயின்

றொறொன்ரோவில் பின்வரும் இரு மாகாண அரசின் அலுவலகங்களில் மட்டும் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். சாதாரணமாக சாரதி அனுமதிப் பத்திரம் பெறும் இடங்களிலோ அல்லது போக்குவரத்து அமைச்சின் காரியாலயங்களிலோ இதனை பெறமுடியாது.

1. Service Ontario
   777, Bay Street
   Suite M212, Market Level
   Toronto, ON M5G 2C8

2. Service Ontario
   47, Sheppard Ave., East, 4Th Floor
   Toronto On M2N 7E7

மேலதிக தகவல்களை பெற வேண்டுமாயின் 416.235.2999 அல்லது 1.800.387.3445 என்ற தொலைபேசிக்கு அழைக்கலாம். இதேபோல் www.serviceontario.ca என்னும் இணைய தளத்தினுள் சென்றும் தகவல்களை பெறலாம்.

ஆரம்பத்தில் $40 டொலர் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். அத்துடன் மேலதிமாக குறிப்பிட்ட காலத்திற்கு புதுப்பிக்கும் கட்டணமாக $75 செலுத்த வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் பரிசீலனை செய்யும் போது சுமார் பதினைந்து நிமிடங்கள் நேர்முகபரீட்சை நடத்தப்படும். இங்கு விண்ணப்பத்தில் தகவல்கள் வழங்குவதுடன் மேலதிகமாக

- சட்ட ரீதியான பிரஜா உரிமை பற்றிய நிரூபணம்.
- சட்ரீதியான, வலிமையான மாகாண அரசின் சாரதி அனுமதி பத்திரம் தொடர்பான நிரூபணம்.
- மேலதிக அடையாள அட்டையினூடாக ஆள் அடையாளம் உறுதிபடுத்தல் (கடவுட்சீட்டு, மருத்துவ சுகாதார அட்டை, மாணவர் அட்டை, திருமண அத்தாட்சி பத்திரம் போன்றவை)

ஆகிய மூன்று நிலைகளிலும் நிரூபணம் செய்த பின்னர் ஏதாவது கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டவரா? என்பதனை உறுதிபடுத்தும் முகமாக பின்வரும் மூன்று கேள்விகளுக்கு பதில் வழங்கி கைச்சாத்திடல் வேண்டும். அவையாவன பின்வருமாறு:

**1. Are These outstanding criminal charges against you for an indictable offense in Canada?**
தங்களுக்கு எதிராக கனடாவில் ஏதாவது கிரிமினல் குற்றசாட்டுகள் உள்ளதா?

**2. Are you forbidden to leave Canada based on conditions impose by a Canadian court or a parol board in Canada or by law?**
கனடாவினை விட்டு வெளியேறக் கூடாது என சட்டத்தினால் அல்லது நீதிமன்றத்தினால் கனடாவில் தடை செய்யப்பட்டவரா?

**3. Are you currently subject to a sentence of imprisonment in Canada?**
கனடாவில் சிறையில் இருக்க வேண்டிய தீர்ப்பு வழங்கப்பட்டவரா?

மேற்குறிப்பிட்ட தகவல்களினை உறுதிபடுத்தல் என்பது நேர்முக பரீட்சையில் உறுதிபடுத்தப்பட்ட பின்பு தற்காலிகமான பத்திரம் 90 நாட்களுக்கு வழங்குவார்கள். (தற்காலிகமான பத்திரத்துடன் எல்லை கடக்க முடியாது) பின்னர் நிரந்தரமான சாரதி அனுமதி பத்திரம் போன்ற அட்டையினை தபாலில் அனுப்பி வைப்பார்கள்.

இதனை வைத்து அமெரிக்க எல்லையில் குடிவரவாளர்களின் மின் கணினியில் பரிசோதனை செய்து பார்க்கும் போது எல்லையினை கடப்பவர் பற்றிய விவரங்களையும் தெளிவாக பார்த்து அறிந்து கொள்வார்கள். இப்பத்திரம் கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு தரைமார்க்கமாக பிரயாணம் செய்பவர்கள் எல்லையினை கடப்பதற்கு மட்டும் உபயோகப்படுத்தலாமே தவிர சாரதி அனுமதி பத்திர இலக்கம் அதில் குறிப்பிட்டு இருந்தாலும், சாரதி அனுமதி பத்திரத்துக்கு பதிலாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சில நேரங்களில் ஏதாவது வழியில் சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்பட்டால், இப்பத்திரமும் ரத்துச் செய்யப்பட்டு விடும்.


**WORLD SAIVA COUNCIL, CANADA BRANCH**
**உலக சைவப் பேரவை, கனடாக் கிளை**
***Workshop on Saivism For Kids***

இளந்தலைமுறையினருக்கான சைவமதக்களப்பயிற்சி. சைவ சமயஸ்தாபனங்கள் ஒன்றிணைந்த சேவை.
காலம்: ***August 25, 2013, Sunday.***
நேரம்: 1:30pm to 6.00pm
இடம்: Social Services Network, 8 Shadlock Street, Unit - 5A (Middlefield / Steeles) Markham, ON. L3S 3K9
சைவப்பிள்ளைகள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
416.266.5161 / 905.294.5271 / 416.335.5458




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999



INNSYS
CONNECT YOUR BUSINESS TO THE WORLD

SUMMER SPECIAL

# SRI LANKA UNLIMITED TALK

## 1 Month FREE*

**Absolutely NO CONTRACT**

**$29.99**

**Plus Lot More Exciting! Offers & Discounts**
**OFFER ENDS ON August 31st Dont Miss it!**

SRILANKA UNLIMITED TALK : Activation fee and deposit required. Local call charges apply. Offer available where technology permits. InnSys reserves the right to withdraw or refuse to provide service and/or offer at promo price. InnSys not responsible for any printing errors Taxes Extra

**416-8000-797**
**www.innsys.ca**

4500 Sheppard Ave E. Suite 111,
Toronto, ON M1S 3R6

# முதுகு வலிக்கு முடிவு

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

(THE END TO THE BACK PAIN)

நமது வாழ்வில் அன்றாடப் பணிகளைச் செய்யவிடாமல் பெரிதும் அவஸ்தை தரக்கூடியது முதுகுவலி என்பது தான் உண்மை. கழுத்தை இருபுறமும் திருப்பவே சிரமமாயிருக்கும். குனிந்து நிமிரவே முடியாது. கை கால்களை விரும்பியபடி அசைக்க முடியாத நிலை.



Bhujangasana

நமது முதுகில் இரண்டு தண்டுவட எலும்புகள் உள்ளன. அவற்றிற்கு மத்தியில் அவை இரண்டையும் இணைக்க கூடிய சவ்வு போன்ற ஒரு பகுதி இருக்கிறது. முதுகில் ஏதேனும் அடிபடும் வேளையில் சவ்வுப் பகுதியானது அது இயல்பாக இருக்க வேண்டிய இடத்தை விட்டு நகர்ந்து தண்டுவட நரம்பு மண்டலத்தைத் தாக்கும். இதன்போதுதான் நாம் வலியை உணர்கிறோம்.

மற்றும் எலும்புகளில் ஏற்படும் குறைபாடுகள் குடல், சிறுநீரகம் போன்றவற்றில் ஏற்படும் கட்டிகள், வீக்கம், கல்லீரலில் கல் உண்டாகுதல் போன்றவற்றாலும் முதுகுவலி ஏற்படலாம். மிகவும் பாரமான பொருளைத் தூக்குதல், எதிர்பாராமல் தரையில் விழுதல் இதனாலும் வலி தோன்றலாம். இதுமட்டுமன்றி தொந்தி, தொடைகள் பெருத்திருந்தாலும் இயல்பாக வலி வரலாம்.

இவ்வாறான வலி ஏற்படும் வேளையில் நம்மால் முடிந்தவரை கை, கால்களை அசைப்பது, குனிந்து, நிமிர்வது போன்றவற்றை சற்று சிரமப்பட்டேனும் செய்து பார்க்க வேண்டும். அதைவிடுத்து உடனே வலி நீங்கும் மாத்திரைகளை வாங்கி இஷ்டப்படி சாப்பிடுதல் பெருந்தவறாகும்.

### இலகுவான வைத்திய முறைகள்

1. புதினா இலையின் சாற்றினை எடுத்து அதனுடன் பச்சைக் கற்பூரத்தைச் சிறிதளவு சேர்த்து நன்றாகச் குழைத்து முதுகில் தேய்த்து வந்தால் நாளடைவில் வலி குறையும்.



2. கல் உப்பை சிறிதளவு எடுத்து அடுப்பில் சட்டியில் போட்டு வறுத்து அளவான சூட்டில் எடுத்து ஒரு துணியில் போட்டு முடிந்துகொண்டு அதனை வலியுள்ள இடத்தின் மேல் ஒத்தடம் கொடுக்க வலி குறையும்.

3. முள்ளங்கி கீரையை நன்றாக இடித்து சாறெடுத்து தினமும் 100 மி கிறாம் அளவு காலையில் பருகி வந்தால் பருகுவது சிறந்த பலனை தரும்.

4. கஸ்தூரி மஞ்சள் ஒன்று, சிறிது சாம்பிராணி, ஒரு தேய்கரண்டி கடுகு மூன்றையும் சிறிது நீர் விட்டு அரைத்து எடுத்து அதனை சிறிது சூடாக்கி முதுகில் வலியுள்ள இடத்தில் தடவிவர நாளடைவில் வலி குணமாகும்.

5. தேங்காய் எண்ணெய், விளக்கு எண்ணெய், வேப்பெண்ணெய் மூன்றையும் சம அளவில் எடுத்து முதுகில் தேய்த்துவர வலி குணமாகும்.

6. பொதுவாக முதுகுவலி உள்ளவர்கள் மூட்டுவலிக்குக் காரணமான உணவுகளைத் தவிர்க்க வேண்டும். முருங்கைகாய், வாழைக்காய், உருளைக்கிழங்கு, மாமிசம், முட்டை, எண்ணெயில் பொரித்த பண்டங்கள், கடலை வகைகள் போன்றவற்றை உண்ணாதிருப்பது நல்லது. குளிர்ச்சியான பானங்கள், ஐஸ்கிரீம் போன்றவற்றையும் தவிர்த்து விடுவது சிறந்த பலனைத் தரும்.



எலாவற்றையும் விட மலச்சிக்கல், அஜீரணக்கோளாறு என்பவற்றை முற்றாக நீக்குவது தான் நோயிலிருந்து முற்றாக விடுபட உதவும். இதற்கு தேகப்பயிற்சியும் யோகா பயிற்சியும் தினமும் அரைமணி நேரமாவது செய்துவர வேண்டும்.

### முதுகுவலியும் யோகாசன பயிற்சியும்

முதுகுவலியை முறியடிப்பதற்கு எனது 20 வருடகால அனுபவத்தில் யோகா பயிற்சியைவிட வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்காக பலவிதமான பயிற்சிகள் தேவையில்லை. இதற்கென குறிப்பிட்ட நான்கு ஐந்து ஆசனங்களை தினமும் முறைப்படி ஒரு யோகாசன ஆசிரியரின் வழிகாட்டலில் மேற்கொள்ள வேண்டும்.

### பவன முத்தாசனமும் முதுகுவலியும்

முதுகுவலியனாது அனைவருக்கும் ஒரே விதமான தன்மையைக் கொண்டிருப்பதில்லை. அதற்கேற்றவாறு தான் யோகாசனங்களைத் தேர்ந்தேடுக்க வேண்டும். பவனமுத்தாசனத்தில் 18 பயிற்சிவிதிகள் உள்ளன. அந்த அனைத்தும் முதுகுவலியைக் குணப்படுத்தும் தன்மை வாய்ந்தவை. வலியின் தீவிர தன்மைக்கேற்ப பயிற்சிகளை நெறிப்படுத்துவது முக்கியம்.

அத்துடன் கீழ்க்காணும் ஆசனங்களும் முக்கியமானவை.

1. பஸ்ஸிமொத்தாசனம் - Forward bend
2. ஒட்டக ஆசனம் - Camel Pose
3. மார்ஜாதி ஆசனம் - Cat ose
4. புஜங்காசனம் Snake Pose
5. பிறையாசனம் Star Pose

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாடி சுத்தி என்னும் மூச்சுப்பயிற்சி செய்துவருபவர்களுக்கு எப்போதும் முதுகுவலி, மூட்டுவலிகள் வரக்கூடிய வாய்ப்பே இல்லை. ஏனெனில் நாடிசுத்தி பயிற்சியின் மூலம் இரத்தம் நன்றாக சுத்திகரிக்கப்பட்டு நரம்புகள் புத்துணர்ச்சியடைந்து வலிமையடைகின்றன. நரம்புகள் அனைத்தும் உறுதியடையும் போது முதுகுதண்டு இணைப்பு எலும்புகள் முப்பத்தி மூன்றும் இதனால் வலிமையடைகின்றன. இதன் பின் முதுகுவலி உட்பட உடலிலுள்ள 44



மூட்டுகளில் தோன்றும் வலியும் மறைந்து போவதை உணரலாம். இனி இல்லை முதுகுவலி.


YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033



ஆரோக்கிய வாழ்வு

Diploma in Yoga Therapy (India)

416.289.2033 after 7:00pm

416.617.5721

Nantha Aiyadurai, B.Eng.

Real Estate Broker

Cell: 613 850 9931

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service

Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
TUITION FEES, BOOKS, LIVING EXPENSES
DAY CARE & TRANSPORTATION UP TO $28000
அனைத்தும் இலவசம்
(திருப்பிச் செலுத்தத் தேவையில்லை)
Second Career மறுக்கப்பட்டவர்கள்,
New Immigrants are also Welcome

DIPLOMA PROGRAMS
Accounting & Payroll Admin.
DURATION: 35 WEEKS (CO-OP AVAILABLE)
Business Administration
DURATION: 26 WEEKS
Computerized Accounting
DURATION: 26 WEEKS
Medical Office Admin.(MOA)
DURATION: 32 WEEKS
Personal Support Worker(PSW)
(NACC DIPLOMA)
DURATION: 26 WEEKS

Certificate Courses
MS Office 2010, Quick Books 2011
Simply Accounting 2011, Accpac 5.6
Online Stock Trading
Canadian Securities Course
Bank Teller, First Aid & CPR
Food Handler Certification

☎ 416-291-5155 ☎
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# இலங்கையின்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

குறைவாகவும், புதிய ஜனநாயக கட்சி 20% அதிகப்படியான வாக்குகளையும் பெற்றுள்ளது.

## அகிம்சை வழியிலான உலகம் விரும்புகின்ற போராட்ட வடிவம் தான் வடமாகாணசபைத்தேர்தல்

யாழ். ஆனைக்கோட்டை சனசமூக நிலையத்தின் சிறுவர் விளையாட்டு போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த மண் இது. இதிலே எங்கள் தேசிய உணர்வுடன் கூடிய எங்கள் தாயக மண்ணென்று எமது இருப்பை சிந்திக்கின்றவர்கள் நாங்கள். நாம் தமிழீழம் கேட்டுப் போராடியவர்கள். ஆனால் எங்களால் அதை அடைய முடியவில்லை. போராட்டத்தின் பல சக்திகள் வடிவங்களைத் தேர்ந்தெடுத்து நாம் போராடியிருக்கின்றோம். இப்பொழுது உலகத்தோடு ஒரு அகிம்சை ரீதியான உலகம் விரும்புகின்ற ஜனநாயக ரீதியான போராட்டத்தை முன்னெடுத்திருக் கின்றோம். அதன் ஒரு வடிவம் தான் இந்த மாகாண சபைத் தேர்தல். நாளை இந்த



மண்ணிலே எங்களால் வெளியிலே என்னத்தைச் சொல்ல முடியுமோ அதனைச் சொல்வதற்கான வாய்ப்பாக நாம் இந்த மாகாண சபைத் தேர்தலைப் பார்க்கின்றோம்.

எங்களுடைய மண்ணிலே அதாவது வரலாற்று ரீதியாக நாம் பிறந்து வளர்ந்த மண்ணிலே எமது மரபு வழித் தாயகமும் தமிழ்த் தேசியம் என்கின்ற அடையாளமும் அழிக்கப்படாமல் எங்களுக்கு ஒரு தீர்வு வழங்கப்பட வேண்டும். இதற்காகத் தான் இத்தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். இவர்களுக்கு பதவிகள் தேவையில்லை. அவர்களுக்கு இருப்பது போதும். நாங்கள் பதவிகளுக்காக அலைகின்ற இனமும் அல்ல. எங்கள் இனம் படுகின்ற துன்பங்களை அழிவுகளை வெறுமனே வீதிகளுக்காகவும் கட்டிடங்களுக்காகவும் எங்கள் இனங்களை தெருவிலே விடுகின்ற வர்களாக நாங்கள் வாழ முடியாது. வரலாறு புதியவர்களை பிரசுரித்திருக்கின்றது. அதில் ஒரு பாதையாக விக்கினேஸ்வரன் வந்திருக்கின்றார். இதில் எங்களுக்கு விக்கினேஸ்வரன் கிடைத்துள்ளது நல்லதொரு சந்தர்ப்பம்.

இலங்கையிலேயே உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்தவர் விக்னேஸ்வரன். இந்நிலையில் இவருடைய தெரிவு என்பது தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்கின்ற நல்லதொரு வரப்பிரசாதம். அவர் இந்த மண்ணிலே ஒரு முதலமைச்சராக இருக்கப் போகின்றார் என்றால் ஏதோ எங்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்து விடுவார்கள் என்று நாங்கள் பொய் சொல்லவில்லை. இவர் இந்த மண்ணை அடியாகக் கொண்டவர். இந்த மண்ணுக்கு சொந்தக்காரர். ஆகவே அவரை நாங்கள் எல்லாக் கட்சிகளுமாகத் தேர்ந்தெடுத்தோம். தமிழர்கள் ஒட்டுமொத்தமாக விரும்பியெடுத்தோம். அதனால் தான் இந்த மண்ணுக்கான அறிவாளியை சட்டவாக்க சிந்தனையாளனை நீதியரசரை வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக நாங்கள் நிறுத்தியுள்ளோம்.

இவர்களுக்கு மக்களாகிய நீங்கள் உங்கள் ஆதரவுகளை வழங்க வேண்டும். இந்நிலையில் இன்னுமொருவரும் இங்கே இருக்கின்றார். இங்கு பல முறை அச்சுறுத்தப்பட்ட மாநகர சபை உறுப்பினரான விந்தன் கனகரத்தினம். இவர் இன்று உயிரோடு இருப்பதே ஆச்சரியமானது. ஏனெனில் பல தடவை அச்சுறுத்தப்பட்டும் விசாரிக்கப்பட்டும் இருக்கின்றார். இந்த அராஜகங்கள் இல்லாமல் போக வேண்டும். ஆகவே நாங்கள் இந்த மண்ணிலே வாழ்வதற்கு வாழ்வியல் உரிமையைப் பெறுவதற்காகத் தான் தங்களுடைய உயிரைக் கொடுக்கவும் தயாராக வந்திருக்கின்றார்கள்.

இந்த மண்ணிலே செய்யப் பட்டிருக்கின்ற தியாகங்களை எல்லாம் மறந்து வெறுமனே காப்பெற் வீதிகளுக்காகவும் வெறும் கட்டிடங்களுக்காகவும் விலை போகப் போகின்றோமா? அல்லது தமிழினம் இந்த மண்ணில் வாழ்வதற்கான அடுத்த கட்ட நடவடிக்கையை ஆரம்பிக்கின்ற தேர்தலில் எங்களுக்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத் தேர்தலானது எங்களது கௌரவத்தின் மீதான, இருப்பின் மீதான தேர்தல். இதன் மூலமாக நாங்கள் ஒரு கருத்துக் கணிப்பை உலகத்திற்குச் சொல்ல நினைக்கிறோம். அதாவது எங்களுக்கு நிரந்தரமான கௌரவமான நீடித்து நிலைக்கக் கூடியதொரு தீர்வு தேவை. அந்தத் தீர்வுக்காக தமிழர்கள் ஒரு அணியாக இருக்கின்றார்கள். இதற்காக கூட்டமைப்புடன் இணைந்திருக்கின்றார்கள் என்ற செய்தியை உலகத்திற்கு சொல்வதற்காகவே போட்டியிடுகின்றோமே தவிர இது தீர்வுக்காக அல்ல.

நாங்கள் எங்கள் மண்ணிலே சுதந்திரமாக நீதியாக நிம்மதியாக வாழ்வதற்கு இணைந்த போராடுவோம். அந்த போராட்டத்தின் ஒரு வழியாக, பாதையாக, கருத்துக்கணிப்பாக இந்த வடமாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்கிறோம். இதனை சரியாக பயன்படுத்த வேண்டும் என்றார். இந்த நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன் மற்றும் வேட்பாளார் விந்தன் கனகரத்தினம் மற்றும் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# காலத்தோடு வளரும் கணினிகள் - 27

அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் மைக்கிரோ சொவ்ற் வேட் என்ற சொற்பரிமாற்ற மென்பொருளைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய சில செயன்முறைக் குறிப்புக்களைப் பற்றிக்



குறிப்பிட்டிருந்தேன். இந்த இதழிலும் இவ்விடயம் பற்றித் தொடர்ந்து கவனிப்போம். மைக்கிரோ சொவ்ற் வேட் இனை ஆரம்பித்ததும் ஒரு வெற்றுக் கோப்பு (File) தோன்றும். இதனுடைய பெயர் Document 1 ஆக இருக்கும். இந்தக் கோப்பு திறக்கப்பட்டிருக்கும் பொழுதே இன்னொரு கோப்பினைத் திறக்க முடியும். இதனை Multi Tasking என்று சொல்வார்கள். ஒரே நேரத்தில் பல மைக்கிரோ சொவ்ற் வேட் கோப்புக்களைக் கையாள முடியும். Document 1என்ற கோப்பு திறக்கப்பட்டிருக்கும் பொழுது இரண்டாவது கோப்பு Document 2 என்ற பெயரில் இருக்கும். ஒரு கோப்பில் ஓரிரு வசனங்களைத் தட்டச்சு செய்யத் தொடங்கும் பொழுது கோப்பிற்கு விரும்பிய ஒரு பெயரைக் கொடுத்துச் சேமிக்க வேண்டும். ஒரு கோப்பினை முதலாவது முறை சேமிப்பதற்கு Save As என்ற கட்டளையைப் பயன்படுத்த வேண்டும். மைக்கிரோ சொவ்ற் screen இல் இடது பக்க மேல் மூலையில் வட்ட வடிவில் உள்ள ஐகனை (Icon) கிளிக் செய்ததும் தோன்றும் File Menu இல் Save As என்ற கட்டளையைத் தெரிவு செய்யவும். தோன்றும் பட்டியலில் மைக்கிரோ சொவ்ற் வேட் இனைத் தெரிவு செய்ய வேண்டும். அப்பொழுது Save As Dialog Box தோன்றும். File Name இனைத் தட்டச்சு செய்து விட்டு Save பட்டனை கிளிக் செய்ததும் கோப்பு சேமிக்கப்படும். இதன் பின்பு ஒவ்வோரு ஐந்து அல்லது பத்து நிமிடத்திற்கு ஒரு முறை Save As என்ற கட்டளை இருந்த பட்டியலில் காணப்படும் Save என்ற கட்டளையைத் தெரிவு செய்து மீண்டும் மீண்டும் சேமித்துக் கொள்ளலாம். நாங்கள் தட்டச்சு செய்யப்படும் விடயங்கள் முதலில் தற்காலிக நினைவகமாகிய RAM Chip இல் தங்கியிருக்கும். Save As இனைத் தெரிவு செய்யும் பொழுது மட்டுமே தகவல்கள் நிரந்தரச் சேமிப்பகங்களாகிய இரண்டாந்தரச் சேமிப்பகங்களில் சேமிக்கப்படும். தற்காலிக நினைவகத்தில் தங்கியிருக்கும் தகவல்கள் மின்சாரத் துண்டிப்பு ஏற்படும் பொழுது இழக்கப்பட்டு விடும். எனவே ஒவ்வொரு ஐந்து அல்லது பத்து நிமிடத்திற்கு ஒரு முறை Save கட்டளை மூலம் சேமித்துக் கொள்வது முக்கியமானதாகும்.

தட்டச்சு செய்யப்பட்ட கோப்பு ஒன்றை அச்சுப்பதிவு செய்வதற்கு Save As கட்டளை காணப்பட்ட பட்டியலில் காணப்படும் Print கட்டளையைத் தெரிவு செய்யலாம். இதே பட்டியலில் கோப்பினை மூடுவதற்கான Close கட்டளையும், சேமித்து வைக்கப்பட்டுள்ள கோப்பினை மீண்டும் திறப்பதற்கான Open கட்டளையும் உண்டு. மைக்கிரோ சொவ்ற் வேட் என்ற மென்பொருளைத் திறந்ததும் Home மெனு காணப்படும். இதில் உள்ள சில வசதிகளையும், கட்டளைகளையும் பற்றிக் கவனிப்போம். இடது பக்க மேல் மூலையில் File menu பட்டனுக்குக் கீழ் Copy, Cut, Paste போன்ற கட்டளைகள் (Commands) இருக்கும். தட்டச்சு செய்யப்படும் விடயங்களை இன்னொரு இடத்தில் மீண்டும் கொண்டுவருவதற்கு Copy செய்து விட்டு விரும்பிய இடத்தில் கேசரை (Cursor) வைத்து Paste செய்து கொள்ளலாம். வலது பக்க மேல் மூலையில் செலக்ற் (Select) என்ற கட்டளை மூலம் தட்டச்சு செய்த வசனத்தையோ அல்லது பந்தியையோ அல்லது தட்டச்சு செய்த முழு விடயங்களையும் தெரிவு செய்து கொள்ள உதவும். Select All என்ற கட்டளையைப் பயன்படுத்துவதன் மூலம் கோப்பில் உள்ள எல்லாப் பக்கங்களையும் ஒரே தடவையில் கைலைற் செய்ய முடியும். இதனை கைலைற் (Highlight) செய்தல் என்று கூறப்படும். உதாரணத்திற்கு ஒரு பந்தியில் உள்ளவற்றில் எழுத்துக்களின் அளவு அல்லது நிறம் போன்றவற்றை மாற்ற விரும்பினால் முதலில் அந்தக் குறிக்கப்பட்ட பந்தியை கைலைற் செய்து கொள்ள வேண்டும். தட்டச்சு செய்த விடயங்களில் எந்த மாற்றத்தை செய்யவும் (Editing) கைலைற் செய்யப்பட வேண்டியிருப்பதால் செலக்ற் என்பது மிகவும் முக்கியமானது.



இப்பொழுது சொற்பரிமாற்ற மென் பொருட்களில் காணப்படும் மிகவும் பயனுள்ள இரண்டு கட்டளைகளை அறிமுகம் செய்து கொள்ளலாம் என நினைக்கின்றேன். உதாரணத்திற்கு மைக்கிரோ சொவ்ற் வேட் மென் பொருளைப் பயன்படுத்தி ஒரு கதையை (Story)யினைத் தட்டச்சு செய்துள்ளீர்கள் என்று வைத்துக் கொள்வோம். கதைகளில் ஒரு கதாபாத்திரத்தின் பெயர்கள் பல இடத்தில் வரும். நீங்கள் தட்டச்சு செய்த பின்பு கதாபாத்திரத்தின் பெயரை மாற்ற விரும்பினால் கோப்பில் பல இடங்களில் குறிக்கப்பட்ட பெயரை மாற்ற வேண்டியிருக்கும். இதனைச் செய்வதற்கு Find, Replace என்ற இரண்டு கட்டளை-களைப் பயன்படுத்துவதன் மூலம் மிகவும் இலகுவாகக் கோப்பில் பல இடங்களில் காணப்படும் குறிக்கப்பட்ட பெயரை விரும்பியவாறு மாற்றிக் கொள்ளலாம். இந்தக் கட்டளைகளைப் பயன்படுத்தாது செய்தால் சில இடங்களில் உள்ள பெயர் மாற்றப்படாமல் இருப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. இதனால் இந்த இரண்டு கட்டளைகளும் மிகவும் பயனுள்ளதாகக் கருதப்படுகின்றது. ஒரு குறிக்கப்பட்ட சொல்லைத் தேடிக் கண்டு கொள்வதற்கு குனை என்ற கட்டளை-யப் பயன்படுத்தலாம். இதுவரை குறிப்பிட்ட விடயங்களை மட்டும் வைத்துக் கொண்டே மைக்கிரோ சொவ்ற் என்ற மென் பொருளைப் பயன்படுத்தி பல வேலை களைச் செய்து கொள்ளலாம். மைக்கிரோ சொவ்ற் வேட் மென்பொருளைப் பயன்படுத்தாதவர்கள் இந்த இதழிலும், முன்னைய இதழிலும் குறிக்கப்பட்ட விடயங்களை வாசித்துப் பயன்படுத்தி சிறிது பயிற்சி எடுத்துக்கொள்வது நல்லது.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.

அன்புடன் அகணி தொடரும்...



- அகணி -
authorakani@yahoo.com



# மனக்குழப்பம்

## ஓடும் நீர் உறைவதில்லை 171

ஒயசாதாரணமாக நாம் எல்லோரும் 'மனக்குழப்பம்' என்றால் மனம் குழம்பிப்போய் இருப்பது எனக் கருதுகிறோம். எதனால் குழப்பம் ஏற்படுகிறது? மனத்தைக் குழப்புவது எது? மனம் குழம்புகிறதா அல்லது குழப்புகிறதா? என்னென்ன சம்பவங்கள் அல்லது சந்தர்ப்பங்களில் மனம் குழம்புகிறது அல்லது குழப்பத்தை உண்டாக்குகிறது? ஒவ்வொரு முறையும் குழம்புவதற்கு அல்லது குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு அந்தச் சம்பவம் அல்லது சந்தர்ப்பம் காரணமா அல்லது எல்லாவகையான குழப்பத்துக்கும் ஒரே காரணமா? கேள்வி மேல் கேள்வி கேட்டு உங்களைக் குழப்புவதிலும் ஒரு காரணம் உண்டு.



'மனக்குழப்பம்' என்பது பல வடிவங்களில் வெளிப்படுத்தப்படுகிறது. தடுமாற்றம், திகைப்பு, வெட்கம், கலக்கம், அச்சம், ஆர்வமின்மை, பலவீனம், தெளிவின்மை, அமைதியின்மை எனப் பல வடிவங்களில் அடையாளப்படுத்தப்படுகின்றது. மனக்குழப்பம் என்பது வெவ்வேறான வடிவங்களைப் பெற்றிருந்தாலும் நாம் கவனத்திலும் கருத்திலும் வைத்திருக்க வேண்டிய விடயம் மனம் குழம்புகிறதா அல்லது குழப்புகிறதா? என்பதுதான். இதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு முதலில் "மனம்" என்றால் என்ன என்பதை அறிந்துகொள்வோம்.

மனம் என்பது நினைவுகளின் பண்டக சாலை. நமது நாளாந்த நகர்வில் உள்வாங்கிக் கொண்ட அனைத்தையும் சேகரித்து வைத்துக்கொண்டிருக்கும் பண்டகசாலை. உதாரணமாகக் கூறுவதாயின் இது ஒரு கணினி (computer) போன்றது. ஒரு கணினியில் நாம் சேகரித்து வைக்கும் தரவுகள் போன்று எமது மனமும் தரவுகளைச் சேகரித்து வைக்கும். மனக்குழப்பத்தை மிகவும் இலகுவாகப் புரிந்துகொள்வதற்கு எமது மனத்திற்கும் ஒரு கணினிக்கும் இடையிலான அடிப்படை வேறுபாட்டைக் கவனத்தில் கொள்வது அவசியம். அதாவது நாம் ஒரு தரவை அல்லது பதிலை கணணினியிடம் கேட்டால் அதற்குப் பொருத்தமான தரவு அல்லது பதில் ஏற்கனவே இருக்குமாயின் சரியான விடையைத் தரும். மாறாக பொருத்தமான பதில் இல்லாவிடில் 'பதில் இல்லை' என்று கூறும் அல்லது 'கேள்வியைச் சரிபார்க்கவும்' என்று எங்களைக் கேட்கும். உதாரணமாக, ஒரு கணினியில் ஐந்தும் எட்டும் சேர்ந்தால் பதின்மூன்று என்று பதிவு செய்திருப்போமாயின் ஏழும் ஆறும் எத்தனை என்று கேட்டால் பதில் கிடைக்காது. ஆனால் மனமானது தான் ஏற்கனவே பதிவு செய்துள்ள விடயங்களில் இருந்து பல்வேறு தெரிவுகளைத் தந்து குழப்பிக்கொண்டிருக்கும். இதுவே மனக் குழப்பத்திற்கான அடிப்படையாகும். எப்படி?

மனக்குழப்பம் ஏற்படுவதற்கான காரணமாக அமைவது எமது மனம் எமது கேள்விக்கு இதுதான் விடை என்பதைத் திட்டவட்டமாகத் தராதது தான். திட்டவட்டமான பதிலை மனத்தால் தரமுடியாமல் போவதற்கான காரணம் எமது கேள்விகள் ஏற்கனவே மனம் சேகரித்து வைத்திருக்கும் தகவலுடன் நேரடியான தொடர்பைப் பெறாதிருப்பது தான். வேறொருவகையில் கூறுவதாயின், கேள்விகள் புதிதாக இருக்கும் ஆனால் மனமோ பழைய தகவல்களிலிருந்து விடையைத் தேடும். இந்த நடவடிக்கையே மனக்குழப்பத்திற்குக் காரணமாக அமைகின்றது. அதாவது நமது வாழ்க்கை புதிய கேள்விகளை முன்வைத்துக் கொண்டிருக்கும். ஆனால் மனமோ பழைய தகவல்களில் விடையைத் தேடிக் கொண்டிருக்கும். இந்த முரண்பட்ட செயற்பாடே மனக் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. இந்தக் குழப்பத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கு நாம் கருத்திற் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில், நமது வாழ்க்கை முன்வைக்கும் ஒவ்வொரு கேள்வியும் புதிய கேள்வி என்பதுதான். அதாவது வாழ்க்கை ஒரு பொழுதும் ஒரு கேள்வியை ஒரு முறைக்கு மேல் முன்வைப்பதில்லை என்பது தான். கேள்விகள் புதிதாக இருப்பதால் பதில்களும் புதிதாக இருத்தல் வேண்டும். வாழ்க்கையின் ஒவ்வொரு கேள்விக்கும் பதில் கிடைக்கும். அதுவரை பொறுமையாக இருப்பது தான் மனக் குழப்பத்தை தவிர்ப்பதற்கான ஒரே வழியாகும்.

நன்றியுடன் KG Master

**KG Master**
www.kgmaster.com
www.facebook.com
kgmaster.lifecoach

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

# தன்னேரில்லாத் தமிழ் அறிஞர் தவத்திரு தனிநாயக அடிகள்



அன்னை தமிழின் அருந்தவத்தால்
அருநெடுந் தீவில் அவதரித்த
தன்னே ரில்லாத் தமிழ் அறிஞர்
தவத்திரு தனிநா யகவடிகள்.

அழகு பொழியும் காட்சியினர்
அரசனை யொத்த மாட்சியினர்
பழகுதற் கினிய பண்புடையார்
பைந்தமிழ் இனத்திற் பற்றுடையார்.

உரோமா புரியிற் கற்கையிலே
உலகில் தமிழைப் பரப்புதற்கு
வீர மாமுனி கழகத்தை
மிகவே நிறுவிய வித்தகனார்.

அன்று தூத்துக் குடியில் இவர்
அமைத்த தமிழிலக் கியக்கழகம்
இன்றும் இயங்கித் தமிழ்மொழியை
எங்கும் வளர்த்து வருகிறதே!

மாநா டுகளால் தமிழ் மொழியின்
மாண்பினை உலக அரங்கினிலே
வானார் கதிரவன் போற் பவனி
வரவே செய்த மாமனிதர்.

பன்மொழிப் புலவர் பைந்தமிழின்
பண்டைய சிறப்பைப் பண்பாட்டைத்
தன்வழி ஆய்ந்து தாரணிக்குத்
தந்தவர் தனிநா யகவடிகள்.

மறந்திட வில்லைத் தமிழ்மக்கள்
மன்னவர் தமிழ்ப்பணி மாண்புகளை
மறைந்திட வில்லைத் தமிழ்பெற்ற
மைந்தனும் வையத்தில் வாழியவே!



கவிஞர் வி. கந்தவனம்


அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -



மஹராஜியின் உரைகள்

On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# ஒன்றல் உந்தல் கோளாறு

## OBSESSIVE COMPULSIVE DISORDER (OCD)

‘பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம்’ திரையிசைப் பாடல் என்றாலும் அதில் பொருள் உண்டு. இதனைப் போன்றவர்களே நாமும். ஒவ்வொரு வருடைய போக்குகளைப் பார்த்தால் ஒரேமாதிரியிருப்பதில்லை. விநோதமான செயல்கள், உரையாடல்கள், உடைகள் எல்லாம் சிலவேளைகளில் ஆச்சரியத்தினை யும், கேள்விக்குறியையும் ஏற்படுத்துவன. அவர்களுடைய செயல்பாடுகளைப் பார்த்து அனுதாபமும், ஆத்திரமும் கூட ஏற்படும். எதற்காக இவர்கள் எல்லோரையும் போல் இல்லை என்று எம்மால் பதிலும் கண்டுபிடிக்க முடிவதில்லை! சமூகத்தில் பல்வேறு கோலங்களில் அவர்கள் வாழ்ந்தாலும் நாம் அதனைப்பற்றி கவலைப் படுவதுமில்லை. ஆராய்வதும் இல்லை. எல்லாம் உளவியலின் தூண்டுதல்களே என்று உணர முடிவதில்லை. பொதுவாக ஒருவரது செய்கையை பார்த்து ‘அது அவருடைய சுபாவம்’ என்று தான் சொல்லத்தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. அது ஒரு முக்கிய உளக்குறைபாடு என்றே எடுக்க வேண்டும்.

OCD என்பது ஒரு உளவியல் நடத்தை சார் ஒழுங்கீனமாகும். அசாதாரண பயத்துடன் மனநிலையை மாற்றி தங்கள் பதற்றத்தினைக் குறைத்துக் கொண்டிருக் கின்ற ஒழுங்கீனமற்றவர்களே இவர்கள். காரணமற்ற சிந்தனைகளும், பயமும் இணையும் போது ஏற்படுவது Obsession ஆகும். அதேவேளையில் ஒன்றை திரும்பத்திரும்ப செய்து கொண்டிருப்பது (Compulsion) ஆகும்.



முதலாவது ஒழுங்கீனமான Obsession என்னும் போது சமூகத்தில் இவர்களது நடவடிக்கைகள் அனைத்துமே வியப்பூட்டு பவை, இக்குறைபாடுள்ளவர் பொதுவாக கிருமிகள் (Germs) தமக்குள் போய் விடுமோ, அவை ஏதாவது தாக்கத்தினை ஏற்படுத்திவிடுமோ, அதனால் நோய் வருமோ என பயப்படுவார்கள். அதாவது அழுக்கு, மற்றவர்களை தொடுதல் என்பதற்கு அஞ்சுவார்கள். அத்துடன் மற்றவர்களை அடித்து விடுவோமோ, திட்டிவிடுவோமோ, மற்றவர்கள் மனதினை காயப்படுத்திவிடுவோமோ என்று பயப்படுவார்கள். இதனால் நாம் துன்பப்பட நேருமோ, நம்முடைய நடத்தை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு இருக்குமோ எனவும், கெட்ட எண்ணங்கள் வருகிறதே எனவும், வரக்கூடாத சிந்தனை வருகிறதே எனவும் வருந்துவர். இவர்கள் வன்முறையில் சிந்திப்பவர்களாகவும் பாலியல் வெளிப்பாடும், மதத்தில் அதிகமான உணர்வும் உள்ளவர்களாவர். அத்துடன் எந்த பொருளும் ஒழுங்காக அடுக்கியிருக்க வேண்டும் எனவும் அதிஷ்டத்தில் கூடிய கவனமும் உள்ளவர் களாகவும் இருப்பர். சிலர் சந்தேகம் உள்ளவராக இருப்பர். ஒரே விடயத்தை ‘திரும்பத் திரும்ப உறுதிப்படுத்திக் கொண்டே இருப்பர்’ ‘சரி’ என்று பதில் வந்தால் கூட திரும்பத்திரும்ப அதே கேள்வியை கேட்டுக்கொண்டேயிருப்பார்கள்.

இந்த ஒழுங்கீனம் உள்ளவர்கள் மரத்தினைக் கூட தொட்டுப்பார்க்க பயப்படுவார்கள். இது உடலில் சுணைக்குமோ, கடிக்குமோ என்ற பயமே காரணம். இப்படியே தபால் உறை, தகரத்தில் அடைக்கப்பட்ட உணவு, வாழ்த்து அட்டைகள், மூக்குக்கண்ணாடி பிரேம்கள், பிரகாசமுள்ள அலுமினிய பாத்திரங்கள் என்பனவற்றை தொடவும் குழம்பி விடுவார்கள். இதனால் என்ன பிரச்சினை என்றாலும் கூட பதில் கூறமாட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக குடும்பத்தில் யாராவது இறந்தால் கிட்டவும் போக மாட்டார்கள், தொடவும் மாட்டார்கள்.

அடுத்துள்ள Compulsion என்பது பற்றி நோக்கினால் இந்நோயாளர்கள் எதனையும் அடிக்கடி திரும்ப திரும்ப செய்து கொண்டேயிருப்பார்கள்.

இவர்களது செய்கைகள் மிகவும் வியப்பானவை. விநோதமானவை. எதனை யும் பலதடவை பரிசோதனை செய்வார்கள், இதில் முக்கியமாக வீட்டினை பூட்டிவிட்டு பலதடவை பூட்டை இழுத்து இழுத்து பார்ப்பார்கள். சிலர் கொஞ்சத்தூரம் போய் திரும்பி வந்தும் இழுத்துப் பார்ப்பார்கள். இப்படியே மின்சார உபகரணங்கள், சுவிச்சுகள் (Switches) என்பவற்றை அடிக்கடி சோதனை யிடுவார்கள். உணவு களை கூட நன்றாக அரைத்து அரைத்து உண்பார்கள். வீட்டில் இருப்பவர்கள் சுகமாக, பத்திரமாக உள்ளனரா? என அடிக்கடி பரிசோதிப்பார்கள். நடக்கும் போது கூட தங்கள் பாத சுவடுகளை எண்ணுவார்கள். அத்துடன் எல்லாம் ஒழுங்காக உள்ளதா என எண்ணிப் பார்ப்பார்கள். சுவாமி கும்பிட சென்றால் கூட நீண்ட நேரம் வழிபடுவார்கள். அத்துடன் வேண்டாத பொருட்களை ஓரிடத்தில் குவித்து வைப்பார்கள். குறிப்பாக பழைய பேப்பர்கள், உணவு தகர புட்டிகள், மற்றும் பொருட்களை எறியாது ஓரிடத்தில் குவித்து விடுவார்கள்.

இவ் ஒழுங்கீனம் உள்ளவர்கள் தண்ணீரில் அடிக்கடி குளித்து கொண்டிருப்பார்கள். உடுப்புக்களை திரும்பத் திரும்ப துவைத்துக் கொண்டிருப்பார்கள். சமையலறையில் கைகளை அடிக்கடி கழுவிக் கொண்டிருப்பார்கள். ஒரு அலுமாரியை திறந்தாலும் உடன் கைகளை கழுவுவார்கள். இத்தகையவர்கள் வேறு இடங்களுக்கு சென்றாலும் அங்கு எல்லாம் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறதா என பார்ப்பார்கள். தாறுமாறாக இருந்தால் அதை எண்ணி சரிபார்த்து விட்டுத்தான் மறு வேலையை கவனிப்பார்கள். சாப்பிடுவதும் ஒரு ஒழுங்கில் தான் செய்வார்கள்.

பொதுவாக பார்த்தால் காலையில் எழுந்து குளியலறையில் பல மணிநேரங்கள், சாப்பிடுவதில் பல மணிநேரங்கள், என்றவாறு எல்லா வேளைகளிலும் ஏதாவது வேலை செய்து கொண்டேயிருப்பார்கள். அதனால் வீட்டை விட்டு போகமாட்டார்கள், தொலைபேசியிலும் இருக்கமாட்டார்கள். சிலர் அடிக்கடி தலைமுடிகளை இழுத்துக் கூட சோதனையிடுவார்கள். அதாவது பயத்தின் காரணமாக உந்தல் ஏற்பட்டு மாறாக செயல்படுவதே இந்நிலையாகும். இவ்வகை ஒழுங்கீனம் உள்ளவர்களுக்கு பதட்டக்கோளாறு (Anxiety Disorder) தசைகளை பிடுங்கல் (Dermatillomania) போன்றனவும் இணைந்து காணப்படும்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
BRAND Niru
Niru BRAND
SHERBET Drink with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# தமிழ்ப் பணிசெய்து தமிழோடும் தமிழ் மக்களோடும் இணைந்து வாழும் தனிநாயகம் அடிகளார் பிறந்த நூற்றாண்டு விழாவை யொட்டி அவர் நினைவேந்தி, வாழ்த்தி நிற்போம்!



கனிவான மொழிகொண்ட செம்மலென்றும்,
கருத்தூன்றிச் செயலாற்றும் வீரனென்றும்,
மனிதாபி மானத்தின் சின்னமென்றும்,
மக்களை நேசித்த மனிதனென்றும்,
புனிதமாய் வாழ்ந்திட்ட துறவியென்றும்
பூலோகம் போற்றிட்ட அறிஞரென்றும்,
இனிதான முகங்கொண்ட பிறவியின்றும்
இருந்தமிழோ டிருக்கின்றார், இருப்பாரென்றும்!

தமிழ்த்தூத னென்றுதமிழ் உலகமெல்லாம்
தலைசாய்த்து வணங்கிடும் பேரறிஞன்!
தமிழ்த்தாயின் அருமையைப் பெருமைதன்னை
தரணிக்கு வெளிப்படச் செய்தசான்றோன்!!
தமிழோடு தன்வாழ்வைப் பிணைத்துவாழ்ந்து
தமிழாய்வு பலசெய்த தமிழறிஞன்,
தமிழ்வாழு மட்டுமவர் பெருமைவாழும்!
தலைசாய்த்து அவர்தொண்டை வாழ்த்திநிற்போம்!!

நூற்றாண்டு காண்கின்ற பெருந்தகைக்கு
நூலோர்கள் எடுக்கின்ற விழாவின்போது,
மாற்றானும் தமிழ்மொழியின் சிறப்புணர்ந்து
மகிழ்வோடு அதிலார்வம் காட்டுதற்கு
ஏற்றாற்போல் தமிழாய்வில் ஈடுபட்டு
ஈடில்லாப் பணிசெய்த அடிகளாரின்
ஆற்றலைப் போற்றிநாம் ஏற்றிநிற்போம்!
அழிவற்ற பணிகளை வாழ்த்திநிற்போம்!!

*- சபா. அருள்சுப்பிரமணியம்.*

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா



**தனிநாயக அடிகளார் விழா:**

ஆகஸ்ட் 30, 2013 - வெள்ளிக்கிழமை மாலை 5:30 மணி
ஆர்மேனியன் கலை மண்டபம் - ரொறன்ரோ

**தனிநாயக அடிகளார் ஆராய்ச்சி மகாநாடு:**

ஆகஸ்ட் 31, 2013 - சனிக்கிழமை காலை : 10:00 மணி - மாலை 5:00 மணிவரை.
மார்க்கம் சிவிக் சென்ரர்

தொடர்புகளுக்கு: கலாநிதி இ. பாலசுந்தரம் / திரு. மு. பாக்கியநாதன்

**416.267.5255 / 647.856.6326**

# ஒன்றல்...

மேற்கூறிய OCD வருவதற்குரிய காரணம் யாதெனில் உடல்ரீதியான காரணங்களும் மூளையில் ஏற்படும் இரசாயன மாற்ற காரணங்களும் ஆகும். ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் 2.2 மில்லியன் மக்கள் உள்ளனர் எனின் உலகெங்கிலும் கோடிக்கணக்கானோர் இப்பாதிப்பில் உள்ளனர் என்பது புரியும். இவர்களுக்கு மூளையில் உள்ள செறற்றேனின் (Serotonin) இரசாயன குறைபாடு, குடும்ப வரலாறு, மன அழுத்தம், தற்கொலை எண்ணங்கள், மதுபாவனை, மனச்சோர்வு, உண்ணும் ஒழுங்கீனம், வறுமை போன்ற பல துணைக்காரணிகளும் உள்ளன. எனினும் இதனை அறிவதற்கு பல கோட்பாடுகள் உதவுகின்றன. முதலாவது பிரிவு உளப்பகுப்பாய்வியல் கோட்பாடு (Psychoanalytic Theory) என்பது. இதில் ஒருவருக்கு ஏற்படும் தாழ்வு மனப்பான்மை பற்றி கூறப்பட்டு இதிலிருந்து விடுபடவே இவ்வாறு ஒழுங்கீனம் பெறுவதாக கருதப்பட்டுள்ளது. அடுத்து வருவது நடத்தைகள். அறிவுக் கோட்பாடு (Behavioral and cognitive theories) என்பது இது ஒருவரது தொடர்விளைவுகள் பற்றியது. அதாவது பதட்டத்தை குறைப்பதற்கு ஒருவர் செய்யும் எதிர் செயற்பாடு பற்றியது. அத்துடன் மனஎழுச்சியும் இதில் முதன்மை பெறுகிறது. உயிரியல் காரணிகளாக சில உடற்காயங்கள் காரணமாகலாம். தலையில் காயம், மூளைக்கட்டிகள் மூலமும் இவ் ஒழுங்கீனம் ஏற்படலாம். அத்துடன் நரம்பு இரசாயன ஆய்வில் செறற்றோனின் (Serotonin) முக்கியம் பெறுகிறது.

தற்போது நடைமுறையில் மரபியல் அடிப்படையிலும் ஆய்வு நடைபெறுகிறது. இதில் பல தொழில் நுட்பங்கள் மூலம் பாரம்பரியம், இரட்டையர்கள், பெற்றோர்கள், உடன்பிறந்தோர் பற்றி ஆய்வுகள் உள்ளன. இதில் இரட்டையர்கள் ஆய்வு முக்கியம் பெற்றுள்ளது. இதிலும் ஒருவரது மரபணுக்கள் இவ் ஒழுங்கீனத்தை தொடர்கின்றன என்ற முடிவு உண்டு. உயிரியல் ரீதியில் உள்ள நரம்பியல் மாற்றத்தில் இடம்பெறும் Serotonin, Dopamine, Glutamate, Gaba என்பன இதில் தொடர்பு கொள்வன. மிகவும் சிக்கலான ஆய்வு இதுவாகும். எனினும் ஆய்வுகள் தொடர்கின்றன.

உளவியல் சிகிச்சைகளில் இவ் OCD என்பது மிகவும் கடினமானது. சாதாரண பயம் முதல் அச்சம் வரை இதில் அடங்குவதால் இதனை கண்டுபிடிப்பது மிகவும் கடினம். முதலில் இந்நோயாளியும் மருத்துவரும் மிகவும் பொறுமையை கடைபிடிக்க வேண்டியுள்ளது. அதாவது குறிப்பான ஆய்வகம் இன்றியே சிகிச்சை ஆரம்பிக்கப்படுகின்றது. உளவியல் நிபுணர்கள் பாதிக்கப்பட்டவர்களின் செய்கைகளை முதலில் அவதானிப்பார்கள். அசாதாரண நடவடிக்கை உள்ள இவர்களுக்கு ஆரம்பத்தில் எதுவும் புரிவதில்லை. தாங்கள் செய்வது சரி என்றே எண்ணுவார்கள்.

மிகவும் சிறந்த சிகிச்சை முறை அறிவுசார் சிகிச்சை (Cognitive Behavior Therapy) ஆகும். இதன்மூலம் இவர்களது மூளைவேறுபாடு, சூழல் வேறுபாடு மரபணுசெல்வாக்கு பற்றி தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. அதாவது இந்நோயாளிக்கு உள்ள பயத்தினை நீக்குவது முக்கியமாகிறது. அவர்களுக்கு பதற்றம் கொள்ளக் கூடாது என விளக்கப்படுகிறது. அவர்களை கொண்டு ஒவ்வொரு வேலைகளையும் செய்வித்து அதில் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும். திரும்பத்திரும்ப செய்வதினை நிறுத்த வேண்டும். முற்று முழுதாக நிறுத்துவது கடினமெனினும் ஆரம்பநிலையில் சிகிச்சையளிப்பது முக்கியமானது. இதற்கென பயிற்றப்பட்ட சிகிச்சையாளரையே அணுக வேண்டும்.



குடும்பத்திலுள்ளவர்கள் இந்நோயாளிகளை அறிந்து அவர்களுக்கு சில அறிவுரைகளை வழங்குவது முக்கியமாகும். முதலில் அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தாலும் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். ஒரு பாடம் கற்பிப்பது போல் இது அமையும். நல்ல சொல்லாட்சிகள் மூலம் திருத்த முயலவேண்டும். இதற்கு குழுவாகவும், தனியாகவும் இயங்க முடியும். இப்பயிற்சியில் ஒரு நோயாளி தனது சிந்தனைகளை எழுதலாம். இதன் மூலம் ஒரு தெளிவான மனத்தை உருவாக்கலாம். இத்துடன் நோயாளியை அழைத்து நடைப்பயிற்சி, ஓடுதல், உடற்பயிற்சிகளை செய்விக்கலாம். நூல் வாசித்தல், வீடியோ விளையாட்டில் ஈடுபடல், போன் மூலம் பேசுதல், பின்னல் வேலை செய்தல் முக்கியம். ஒரு ரேப் (Tape) மூலமும் பல வார்த்தைகளை பதிவு செய்யலாம். அத்துடன் யோகா பயிற்சி, ஆழ மூச்சுவிடல், மனஅழுத்த தீர்வு, நல்ல முறையில் உணவு உண்ணுதல், அதிகளவு காபோவைதரேற் உணவு உண்ணல், பழங்கள், மரக்கறிகள் உண்ணுதல் அவசியம். மதுசாரம் நிக்கோட்டின் தவிர்ப்பு, புகைபிடிப்பதை நிறுத்துவது அவசியம். போதியளவு நித்திரையும் இதற்கு அவசியம்.

சுய உதவி திட்டத்தின் கீழ் நல்ல நண்பர்களை உருவாக்குவது முக்கியம். இது சம்பந்தமான குழுவில் இணைதல், எதிர்மறையான சிந்தனை
தவிர்ப்பு முக்கியம். மகிழ்ச்சியாக இருத்தல் மிக அவசியம்.

மருத்துவ ரீதியில் சில சிகிச்சைகள்

**தொடர்ச்சி 17ஆம் பக்கம்**

# ஒன்றல்...

## 14ஆம் பக்கத்தொடர்ச்சி

அவசியம். இவ் ஒழுங்கீனம் மூளையுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் பலவகை ஊக்கி மருந்துகள் அவசியம்.

மிக முக்கியமாக செறற்ரோனின் இரசாயன அதிகரிப்பு அவசியம். எனவே இதனை அதிகரிக்க கூடிய Fluoxetine மருந்து அவசியம். உளச்சோர்வு. எதிர்ப்பு மருந்துகள் ஆகிய Paroxeline, Sertraline என்பனவும் உளச்சத்திர சிகிச்சையும் உதவுகிறது. எல்லாமே நரம்பியல் கடத்திகளை வலுவூட்டுவன. ஒப்பியல் சார்பான மருந்துகளும் அழர்ச்சி எதிர்ப்பு மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் உளச்சிகிச்சை (Psychotherapy) மூலம் ஒருவரின் பிரச்சினைகள் பகுத்தறியப்படுகின்றன. இதில் கோபம், தாழ்வு மனப்பான்மை, எதிர்மறை எண்ணங்கள் சரி செய்யப்படுகின்றன.

தற்போது Psychosurgery மூலம் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. 2-3 செ.மீட்டர் Cingulum என்ற மூளைப் பகுதியில் நோய் உள்ள பகுதி அழிக்கப்படுகிறது. இதுவே OCD யின் இறுதியான சிகிச்சையாக அமைகிறது. எவ்வாறெனினும் இதுவும் கூட முற்றாக இவ் ஒழுங்கீனத்தை மாற்றுமோ என ஐயப்பாடு எழுந்துள்ளது. பல்வேறு அணுகு முறைகள் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. எமது கண்ணில் இப்படிப்பட்ட நோயாளிகள் பலர் உள்ளனர். பல மணி நேரங்களை தமது உளப்பயத்திற்காக செலவு செய்தும் பல மணிநேரங்களை பதற்றத்தினை தணிப்பதற்காக செலவு செய்தும் பரிதாபத்திற்குரியவர்களாக இவர்கள் உளர். பார்வைக்கு சாதாரண-மானவராக இருந்தாலும் இவர்களது செய்கைகள் எல்லாம் எமக்கு மிகவும்



விநோதமானவையே. முக்கிய உறவினர் இறந்தாலும் கிட்டவே வராது ஓடி ஒளிக்கும் இவர்கள் தொடர்ந்து கையை கழுவியும் திரும்ப திரும்ப குளியல் அறையில் தங்கியும் காலத்தை ஓட்டி வீட்டுக்குள்ளேயே வாழ்ந்து வருகின்றனர்.

# ஆறு ஆறிவு!

மனிதர்களும் மிருகங்களே
பேசத் தெரிந்த உருவங்களே
இரண்டு கால்கள் போதுமென்று
நிறுத்தி விட்ட சுருவங்களே

சிந்திக்கவும் தெரிந்தவர் தான்
சிரத்தை எல்லாம் குழி பறிப்பதில் தான்
ஆறு அறிவு கொண்டவர் தான்
அல்லல் படுவதும் அதனால் தான்

ஆழ்ந்த கருத்துகள் கொண்டிருந்தால்
அன்பும் அதனுடன் கலந்திருந்தால்
அமைதியாக வாழ்ந்திடலாம் ஆண்டவனின்
அனுக்கிரகம் அதுவாக கிடைத்திடுமே

அன்பு கொண்ட மனிதர்க்காய்
சொர்க்கம் நழுவி பூமியிலே தானாக
விழுந்திடுமே அன்பினை அளந்திட
முடியாது அதிர்ஷ்டம் வருவதும் தெரியாது

இன்பம் என்பது என்னவென்று இதுவரை
யாருக்கும் தெரியாது கானல் நீர் தான் எல்லாமே
அதை கடந்து செல்வதும் அறியாமை நீயும் நானும்
விதிவிலக்கா இதுவே உலக வழக்கென்றும்

- இனியா




# சுற்றுலாப்பயணிகளின் சொர்க்கம்
# ஹவாய் தீவுகள் - 8

எமது இச்சுற்றுலாவின் இறுதி நாளன்று காலை யாவரும் எமது பொதிகளை விடுதிச்சாலை அறைகளிலிருந்து எடுத்து வந்து வெளியே இதற்கென ஒதுக்கப்பட்டிருந்த வெளிமண்டபத்தில் அடுக்கி வைத்தோம். காலை உணவை முடித்துக் கொண்டு நகரின் மத்திய பகுதியிலிருந்த பஸ்தரிப்பு நிலையத்திற்குச் சென்றோம். அங்கே பொலினிசியக் கலாச்சார மண்டபத்துக்குச் செல்லும் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கென ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பல பஸ்கள் தயாராகவிருந்தன. எமக்கு ஒதுக்கப்பட்ட வண்டியில் நாமெல்லோரும் ஏறினோம். அதில் ஒரு வழிகாட்டியும் இருந்தார். ஏறக்குறைய 9 மணியளவில் பஸ் புறப்பட்டது. எமது பிரயாணம் 45 நிமிடங்கள் என அறிவிக்கப்பட்டது. இதற்கிடையில் பொலினிசியத் தீவுகள் பற்றித் தெரிந்து கொள்வது நல்லதென நினைக்கிறேன்.



பசுபிக் சமுத்திரத்தில் 20,000 முதல் 30,000 தீவுகள் உள்ளன. கற்கட ரேகைக்குத் தெற்கிலுள்ள தீவுகள் ஓசியர்னியா (Oceania) என அழைக்கப்படுகின்றன. இவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை மெலனீசியா, மைக்குரோனீசியா, பொலினீசியா. இங்கே பொலினீசியா பற்றிப் பார்ப்போம். பொலினீசியா என்றால் பல தீவுகள் எனப்பொருள்படும். இவற்றில் பெரும்பாலானவை பூமத்திய ரேகைக்கு தெற்கே உள்ளன. இவை நியூசிலாந்து, ஹவாய்தீவுகள், றொட்மா, மிட்வே தீவுகள், சமோவா, அமெரிக்கன் சமோவா, தொங்கோ, துவாலு, குக்தீவுகள், வாலிசும் புட்டுனாவும், தொக்கேலோ, நியூபிரெஞ்சு பொலினீசியா, ஈஸ்டர் தீவு. இதுவே மிகப்பெரிய தீவாகும். பொலினீசியாத் தீவுகள தாழ்ந்த தீவுகளாகும். அதாவது இவை சிறியனவாயும் வளங்குறைந்தனவாயும் இருக்கும். இவற்றில் முக்கியமான சில தீவுகள் பற்றிப் பார்ப்போம்.

அமெரிக்கன் சமோவா - இது அமெரிக்காவின் ஒரு பகுதியாகும். இங்கு 55,519 பேர் வசிக்கிறார்கள். (2010 சனத்தொகை மதிப்பீடு) இதன் பரப்பளவு 76.1 சதுரமைல்களாகும். இதன் தலைநகரம் பாகோ பாகோ. இதன் தேசியமொழி சமோவன். இது 1899 இல் அமெரிக்காவின் ஆட்சிக்குள்ளாகியது. அரசாங்கத்தின் தலைவராகத் தேசாதிபதி ஒருவர், நான்காண்டுக்கொருமுறை தெரிவு செய்யப்படுகிறார். செனட்சபையும் பிரதிநிதிகள் சபையும் உள்ள அரசாங்கமுறை இங்கு காணப்படுகிறது.

உலக அரங்கில் பிரபலமான சுமோ மல்யுத்த வீரர்கள் இத்தீவில் அதிகமாக வாழ்கின்றனர். மேலும் தொழில்முறை மல்யுத்தம், றக்பி, அமெரிக்கக் கால்பந்து முதலியன இங்கு பிரபலமான விளையாட்டுக்களாகும். இங்கே ரூனா (Tuna) மீன்களைக் தகர டப்பாக்களில் அடைத்து அமெரிக்காவுக்கு அனுப்பும் தொழிற்சாலை உளது.

தொங்கா (Tonga) - இது முடியாட்சியுள்ள தொங்கு அரசு எனப்படுகிறது. இது 176 தீவுகளைக் கொண்ட ஒரு கூட்டு அரசாகும். இது 290 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. பசுபிக்குச் சமுத்திரத்தில் இத் தீவுகள் 270,000 சதுரமைல்களுக்கு பரந்து காணப்படுகின்றன. இத்தீவுகளுள் 50 தீவுகளில் மட்டுமே 103,000 மக்கள் வாழ்கிறார்கள். தொங்கா அரசு எந்த ஐரோப்பிய நாடும் கைப்பற்ற முடியாது எதிர்த்து நின்ற பெருமைக்குரியதாக விளங்குகிறது.

இங்கு தீனி நாடாளுமன்றக் குடியாட்சி அரசு முறை நடைமுறையிலுள்ளது. இதன் தலைநகர் நூக்கு அலோபா. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத்திலும் பணந்தரும் தாவரங்களான வாழை, தென்னை, கோப்பி, வனிலா, மரவள்ளி போன்றவற்றை வளர்ப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலும் வெளிநாடுகளில் வசிக்கும் தொங்கா மக்கள் அனுப்பும் பணத்தில் உள் நாட்டு மக்கள் பெரிதும் தங்கியுள்ளனர்.

சுற்றுலாப் பயணத்துறை இன்னும் விரிவாக்கப்படவில்லை. எனினும் அரசாங்கம் இத்துறையை விரிவாக்கக் கூடிய அக்கறை எடுத்து வருகிறது. வாவு துறைமுகம் திமிங்கலங்கள் பார்வை இடமாகவும், மீன் பிடித்தல், கடலில் பலகைச் சவாரி (Surfing), கடற்குளிப்பு ஆகியவற்றில் ஈடுபடும் இடமாகவும் மாறிக் கொண்டு வருகிறது. தொங்காவின் தேசிய விளையாட்டாக றக்பி விளங்குகிறது. உலக அரங்கில் இவ்விளையாட்டில் தொங்கா சிறப்பாக விளையாடியுள்ளது. மல்யுத்தம், நீச்சல் ஆகியவற்றிலும் தொங்கா சிறந்து விளங்குகிறது.

**குக் தீவுகள்** - இவை நியூசிலாந்தின் வடகிழக்குப் பகுதியில், அமெரிக்கன் சமோவாவுக்கும் பிரெஞ்சுப் பொலினீசியாவுக்கும் இடையிலுள்ள தென் பசுபிக் சமுத்திரத் தீவுகளாகும். இவை 15 முக்கிய தீவுகளாகும். இவை சமுத்திரத்தில் 2.2 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பில் பரந்து காணப்படுகின்றன. இவை தெற்கு குக் தீவுகள், வடக்கு குக் தீவுகள் என இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இத்தீவுகளில் 6ஆம் நூற்றாண்டில் அருகிலுள்ள தாகிற்றித் தீவுகளிலிருந்து சென்ற மக்கள் முதலில் குடியேறினர். இதன் தலைநகர் அவறுவா. இங்கு சட்ட பூர்வமான அரசு நடைமுறையில் உளது. இரண்டாம் எலிசபெத் மகா இராணியார் அரசியாகவும், சேர். பிரடெறிக் கொட்வின் தேசாதிபதியாகவும், ஹென்றி பூனா பிரதம மந்திரியாகவும் உள்ளனர். இவற்றின் மொத்த நிலப்பரப்பளவு 91 சதுரமைல்கள். இங்கு 2006 சனத்தொகை கணக்கின்படி 19,569 மக்கள் வாழ்ந்தனர். தற்போது இன்னும் கூடியிருக்கும். இத்தீவுகளில் ஆங்கிலத்துடன் மாவோறியும் பல தீவு வட்டார மொழிகளும் புழக்கத்திலுள்ளன. இம் மக்களிடையே மரச் செதுக்கு வேலை மிகவும் பிரபலமானது. மேலும் தென்னோலை, பாய்கள், பைகள், தொப்பிகள் முதலியனவும் இங்கு இழைக்கப்படுகின்றன. பனாமாத் தொப்பிகள் இங்கு பிரபலமானவை. மேலும் ஓவியம் வரைதல், திவேவே என்ற மெல்லியமெத்தை தைத்தல், நெசவுத் தொழில், மரச் செதுக்கல் ஆகியன பிரபலமானவை.

**பிரெஞ்சு பொலினீசியா** - இது பல தீவுகளைக் கொண்டது. மிக முக்கியமான தீவு தாகிற்றி (Tahiti). இதன் தலைநகர் பபீற்றி என்பது. இதன் பிரான்சு நாட்டின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாகும். இங்கு அரசமொழியாக பிரெஞ்சு உளது. இது பிரித்தானிய பொதுநலவாய நாடுகள் போன்று பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருப்பதால் பிரெஞ்சு ஜனாதிபதியே இதன் ஜனாதிபதியாகவும் உள்ளார். எனினும்



**- துறையூரான் -**

பொலினீசியா ஜனாதிபதியே இதன் தலைவராகப் பணியாற்றுகிறார். இங்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவ ஜனநாயக அரசுமுறை பின்பற்றப்படுகிறது. இத்தீவுகளின் மொத்தப் பரப்பளவு 1609 சதுர மைல்களாகும். 2010 ஜனவரி மதிப்பீட்டின் படி இங்கு 267,000 பேர் வசிக்கிறார்கள். பிரெஞ்சுப் பொலினீசியாவில் 130 தீவுகள் உள்ளன. இவை சமுத்திரத்தில் 2,000,000 சதுர கிலோமீற்றர் அளவுக்குப் பரந்து காணப்படுகின்றன. இதன் பொருளாதாரம் கணிசமானளவு அபிவிருத்தி அடைந்துள்ளது. பெரும்பாலான பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. சுற்றுலாத்துறையும், விவசாயமும் வருவாயை தருகின்றன. தென்னை, வனிலா, பழமரங்கள், மரக்கறிகள் ஏராளமாகப் பயிரிடப்படுகின்றன. மரங்கள், மீன், கோபோலற் இயற்கை மூலவளங்களாக உள்ளன. சங்கீதமும், நடனமும் உலகப் புகழ்பெற்றவை. இனி எமது பயணம் பற்றிப் பார்ப்போம்.

ஹானொலுலூ நகர மத்தியிலிருந்து புறப்பட்ட பஸ் கடற்கரையை அண்டியிருந்த வீதி வழியாகச் சென்றது. வழிநெடுகலும்

தொடர்ச்சி 23ஆம் பக்கம்


@ GTA Square



TUTORING

Saturday & Sunday 9:00 To 11:00

• Math - Grade 9 ,10 and 11 ($10 Per Hour )
• Advanced Functions - Grade 12 ($15 Per Hour )
• Vectors and Calculus- Grade 12 ($15 Per Hour )

Kamal: 416.696.5007 / 647.268.5007

15 years experience in teaching math for high school students
(Priority will be given for home work)

# A New Project By TRIDEL

## TRIO @ HWY 404 & SHEPPARD




**For Further information Please Call**

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

"கனவு உங்களுடையு பொறுப்பு எங்களுடையது"

**5215 Finch Ave, E, #203 - Tel: 416.321.6969**
**Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666**

*Independently Owned & Operated

# GTA Square இன் 'கோடையில் ஓர் வசந்தம்'

வருடா வருடம் நடைபெற்றுவரும் GTA Square Mall இன் ஆறாவது ஆண்டு "**கோடையில் ஓர் வசந்தம்**" கொண்டாட்டம் கடந்த ஒகஸ்ட் 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் கோலாகலமாக நடைபெற்றது. இச்சிறப்பு நிகழ்வு ஒகஸ்ட் மாதத்தில் வரும் இரண்டாவது சனி, ஞாயிறு நாட்களில் நடைபெற்று வருகிறது. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இரண்டு தினங்களும் கலந்து கொண்டனர். GTA Square Mall இல் உள்ள வியாபார நிறுவனங்கள் தங்கள் விசேட விற்பனைகளை பகலிரவாக மேற்கொண்டனர். இரண்டு நாட்களும் மாலையில் GTA Square Mall இன் வாகன தரிப்பிடத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் பேச்சு, பாட்டு, நடன நிகழ்வுகள் என பல நிகழ்சிகள் இடம்பெற்றன. எமது நடன ஆசிரியர்களின் மாணவர்களின் சிறப்பு நடனங்கள் மக்களை மகிழ்ச்சியில் ஆர்ப்பரிக்க வைத்தது. 6 ஆவது வருடமாக நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சியாக ரொறொன்ரோவில் புகழ்பெற்ற பாரதி கலைக்கோயிலின் இன்னிசை இரு தினங்களும் இளம் கலைஞர்களின் வாத்திய இசைக்குழுவுடன் சிறந்த பல பாடகர்களின் குரலில் பல பாடல்களுடன் நடைபெற்றது. இது ரசிகர்களின் பேராதரவைப் பெற்ற நிகழ்வாகும்.

ஞாயிறு மாலை அம்பிகா சில்க், SNS Selection, Sabari Text, M.J.S Fashion, Fashion & Fancy House ஆகிய வர்த்தக நிறுவனங்களின் ***Fashion Show*** நடைபெற்றது. இரண்டு நாட்களும் சிறுவர்கள் Face Painting, Colouring மற்றும் Jumping Castle இல் தங்கள் பொழுதை மகிழ்ச்சியாகக் கழித்தனர்.

இந்நிகழ்வை வருடா வருடம் தவறவிடாமல் பார்த்து ரசித்து வருபவர்களின் கருத்துப்படி வருடா வருடம் மக்கள் தொகை அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. GTA Square Mall இன் சகல வியாபார நிலையங்களிலும் அதிக மக்கள் கூட்டத்தைக் காணக்கூடியதாக இருந்தது. எதிர்காலத்தில் வாகனத் தரிப்பிற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க இருப்பதாக இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தவர்கள் கூறியிருந்தார்கள்.























CARELESS DRIVING
IMPAIRED DRIVING
RED LIGHT
REDLIGHT (CAMERA)
SPEEDING
SEAT BELT
NO INSURANCE
STOP SIGN
SKTHEESAN@GMAIL.COM

TRAFFIC TICKETS

MOTOR VEHICLE ACCIDENT
CRIMINAL MATTERS (SUMMARY)
MEMBER OF LAW SOCIETY OF UPPER CANADA

416- 803- 5296
KALAKALAPPU
THEESAN
SKTPARALEGAL SERVICE


கலகலப்பு தீசன்

# Internet Marketing For Small Business

your partner for success

## Let Us Help You Get More Customers.

தவறவிடாதீர்கள்!!!! நவீன தொழில்நுட்பம் சிறிய வர்த்தகங்களிற்கு வழங்கிய அரிய வாய்ப்பு இது!!!!!!

We'll help you reach the right people in the right region at the right time with the right message.

Try Internet Marketing Services from iLoom.ca
இலவச ஆலோசனைக்கு தயக்கமின்றி அழையுங்கள்
**(647) 609 5045**

*It works for any business*

- *Movers*
- *Plumbers*
- *Technicians*
- *Carpet cleaners*
- *Accountants*
- *Dentists*
- *Real estate agents*
- *Painters.*
- *Physiotherapists*

*any business you can think of.*

*It's Cheaper, Faster and Measurable.*

தவறவிடாதீர்கள்! நவீன தொழில்நுட்பம் சிறிய வர்த்தகங்களிற்கு வழங்கிய அரிய வாய்ப்பு இது!!!!!!





உங்கள் வர்த்தகத்தை தமிழ் சமூகத்திற்கு வெளியேயும் விரிவாக்க உன்னதமான முறை!!

Call us for a FREE consultation.

- *Cheaper and Flexible.*
- *Faster and Convenient.*
- *Measurable.*

*www.BoostIt.ca*
*www.iLoom.ca*

Call Us Now:

# (647) 609 5045

We'll make your Phone ring with new customers needing your services.

# 'கிளிமஞ்சாரோ' அனுபவங்கள் - 2

இந்தக் கிராமத்தில் எங்கு பார்த்தாலும் செழித்து வளர்ந்த காடுகளும் களனிகளும் நிறைந்து காட்சியளிக்கிறது. கிராமத்தைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்ட நான் அழகிய கோப்பிப்புதர்களுக்கூடாகச் சென்று ஒரு வாழைத் தோட்டத்தை அடைந்தேன். பின் அங்கிருந்து கினுகமேரி என்ற அழகிய 225 அடி உயரமுள்ள நீர்வீழ்ச்சியை அடைந்தேன். நீர்வீழ்ச்சியின் அழகை இரசித்து விட்டு வருகையில் ஒரு பாழடைந்த மண்டபத்தைக் கவனித்தேன்.

அண்மையில் வருவதைத் தடுப்பதற்காகவே அன்னாசி வளர்ப்பார்கள். இந்தச் செடிகளிலுள்ள முட்கள் பாம்பின் உடலைத் துளைத்துக் காயப்படுத்துமாகையால் பாம்புகள் இந்த செடிகளிருக்குமிடத்துக்கு இலகுவில் வரமாட்டா எனத் தெரிவித்தார்கள். மரங்கு நீர்வளம் மிகுந்த பிரதேசம் என்று முன்பு நான் குறிப்பிட்டிருந்தேன்.

இதுவே இப் பிரதேசத்தின் செழிப்பிற்குக் காரணமாகும். உலக மக்களுக்கு நீர்வளத்தின் அவசியத்தைக் குறித்து வள்ளுவ நாயனார்கூட 'நீரின்றி அமையாது உலகம்' என்றார். வளத்திற்குக் காரணமான நீர் வாழ்க்கைக்கு ஆபத்தைக் கொண்டு வரத் தவறவில்லை. பள்ளத்தாக்கில் உள்ள மக்கள் மழை தவறிய வேளைகளில் செழிப்பு மிக்க மரங்குப் பிரதேசத்தை நோக்கிப் படை எடுப்பது எதிர் பார்க்ககவேண்டியதே. எம் முன்னோர்கள் மலை உச்சியில் பெரும் கோட்டைகளை அமைத்தது போல் இவர்கள் நிலத்திற்கு அடியில் நீண்ட நெடும் சுரங்கங்களை அமைத்து ஒழிந்து கொண்டார்கள். நான் சென்ற சுரங்கம் 5 கிலோ மீட்டருக்கும் அதிகம். அது ஆற்றுப் படுக்கைக்கு இட்டுச் செல்லும். எதிரிகள் இந்தக்குகைகளுக்குள் புகுந்தால் உயிருடன் திரும்ப முடியாது.



**- குமார் புனிதவேல் -**

இது என்ன கட்டிடம்? என்று கேட்டபோது அது ஒரு வழக்காடு மண்டபம் என்றார்கள். இந்த வழக்காடு மண்டபத்தில் ஒரு வினோதம் என்னவென்றால் நீதிபதியின் இருக்கையின் முன்னிலையில் சிவலிங்கத்தைப்போல் ஒரு பெரிய கருங்கல் பதித்திருந்தார்கள். அது எதற்காக என்று வினாவியபோது குற்றவாளிக்கு நீதிபதி தீர்ப்புக் கூறியவுடன் நான் இந்தப்படத்தில் படுத்திருப்பதைப்போன்று குற்றவாளியைப் படுக்கவைத்து எல்லோா் முன்னிலையிலும் கசையடி கொடுப்பார்கள் என்றார். சாகா மக்கள் முன்னைய காலங்களில் புல்லும் கயிறும் கொண்டு வீடுகளை அமைத்தார்கள். இங்கு அதன் வெளிப்புறம் மற்றும் உட்புறத் தோற்றங்களைப் படத்தில் காண்க. இந்தக் குடிசைகளைச் சுற்றி நெருக்கமாக அன்னாசி செடிகளைப் பயிரிட்டிருப்பார்கள். இந்தப் பகுதிகளில் பாம்புகள் ஏராளமாக இருப்பதனால் அவை வீடுகளுக்கு



குகையில் ஒளிந்து நிற்பதற்கு இடம் அமைத்திருந்தார்கள். கீழே உள்ள படத்தில் எனது கையில் உள்ளது போன்ற தடியால் அடித்துக் கொன்றுவிட்டு உடலை ஆற்றில் எறிந்து விடுவார்கள். அன்றைய தினம் மரங்குவில் சந்தை என்பதனால் சந்தையைச் சென்று பார்வையிட்டேன். யாழ்ப்பாணம், வன்னி ஆகிய இடங்களிலுள்ள சந்தைகளைப் போல் இங்கும் சிறுசிறு கொட்டில்களில் பலவிதமான பொருட்கள் விற்பனைக்கிருந்தது. திரு. டெஸ்மன் குறிப்பிட்ட கனிப் பொருட்களையும்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969

# மகாஜனன் விருது 2013

மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளை வருடாந்தம் நடத்தும் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் இவ்வருடம் ஒகஸ்ட் 05, 2013 இல் சீனக்கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. வழமைபோல் சரியாக மாலை 4:30 மணிக்கு இரவீந்திரன் இரட்ணசிங்கத்தின் ஆரம்ப அறிமுகத்துடன் இவ்விழா ஆரம்பமானது. இவ்விழாவிற்கு மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், இம்மன்றத்தின் யாப்பை உருவாக்கி காப்பாளராக இருக்கும் திரு. மு. கார்த்திகேசு அவர்கள் அவர்களுடைய பாரியாருடன் பிரதம விருந்தினராக வந்திருந்தார். சிறப்பு விருந்தினராக பதின்ம வயதிலேயே புற்றுநோய் ஆராய்ச்சியை மேற்கொண்டு தமிழினத்திற்கு பெருமை சேர்த்த மகாஜனாவின் வழித்தோன்றலான செல்வன். அபிகுமரன் உத்தமகுமரன் வந்திருந்தார்.



பிரதம விருந்தினர், மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி மற்றும் பழையமாணவர் சங்க கனடா கிளையின் தலைவர் க. ஜெயேந்திரனும் பாரியாரும் மங்கல விளக்கேற்றியதை தொடர்ந்து கனேடிய தேசிய கீதம், கல்லூரி கீதம் இசைக்கப் பட்டு உயிர் நீத்தவர்களுக்கு ஒரு நிமிட அமைதி வணக்கமும் செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக மகேந்திரராஜா சுப்பிரமணியமும் சகானா கோபிமனோகரனும் பணியாற்றினர். சரியான நேரத்திற்கு ஆரம்பிக்கும் மகாஜனாவின் விழாவிற்கு நேரம் பிந்திவரும் விசேட அனுமதியுள்ள பார்வையாளர்களுக்காக முதல் நான்கு வரிசை ஆசனங்களையும் ஒதுக்கி வைத்து, நிகழ்ச்சிகள் தொடங்க முன்னர் வந்த பார்வையாளர்களை பின்னால் இருக்க வைத்தது விசேட அனுமதி பெற்றவர்களை தொடர்ந்தும் நேரம் பிந்திவர ஊக்குவிப்பது போல் இருந்தது.

கலை நிகழ்வுகளில் முதலாவதாக கல்வி, செல்வம், வீரம் எல்லாவற்றிற்கும் தலைவி யாக இருக்கும் சக்தியை வேண்டி ஸ்ரீமதி சிவசக்தி சௌந்தரநாதன் அவர்களின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'மகாசக்தி' என்ற சாஸ்திரிய நடன நிகழ்வு நடைபெற்றது. தலைவர் க. ஜெயேந்திரன் தனது தலைமை உரையில் 24 வருடங்களாக கனடாவில் மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இயங்கிவருவதையும் அதன் செயற்பாடுகள் சிலவற்றையும் கூறி இவ்விழாவிற்கு வந்தவர்களையும் வரவேற்று இவ்விழா சிறப்பாக நடக்க உதவியவர்களுக்கு நன்றியும் தெரிவித்தார்.

பிரதம விருந்தினர் உரை நிகழ்த்திய திரு. கார்த்திகேசு முருகேசு அவர்கள் தான் மகா-ஜனாக் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிய 12 வருட காலத்தில் நடைபெ-ற்றவற்றை நினைவு கூர்ந்தார். 25 ஆவது ஆண்டு விழாவை கொண்டாட இருக்கும் கனடா மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் அடுத்த 25 வருடங்களுக்குள் தனக்கு சொந்தமாக ஒரு வானுயர்ந்த கட்டிடம் ஒன்றை கட்டி நமக்கு என்று ஒரு கட்டிடத்தில் செயல்பட வேண்டும் என்று கேட்டார்.

அடுத்து திரு. க. சிவதாசன் அவர்களது நெறியாள்கையில் ஞானசரவணபவன் அவர்கள் எழுதிய 'மாற்றம்' என்ற சமூக நாடகம் நடைபெற்றது. கணவனை இழந்த தனது தாயை மங்கல நிகழ்வுகளுக்கு சமுதாயம் புறக்கணித்து வைப்பதை எதிர்த்து மகள் நடத்தும் போராட்டம் இதில் காட்டப்பட்டது. இது ஒரு சமூகமாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நல்ல முயற்சியாகும். நாடகத்தை தொடர்ந்து இவ்விழாவை நடத்த உதவிய நிறுவனங்களை சார்ந்தோருக்கு மதிப்பளிக்கப்பட்டது.

ஆடலரசி ஸ்ரீமதி செந்தில்செல்வி சுரேஸ்வரனின் உருவாக்கத்தில் அவரின் ஸ்ரீ



**அருந்ததி ஞா.**

தொடர்ச்சி 30ஆம் பக்கம்

# சுற்றுலாப்பயணி...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

அழகான வீடுகள். தென்னை, வாழை, வாகை, செவ்வரத்தை, றோசா போன்ற உஷ்ணவலய நாடுகளுக்குரிய தாவர வர்க்கங்களை யாவரும் பார்த்து இரசித்தோம். எமது குழுவில் வந்த ஒரு பிரபல சட்டத்தரணி பழைய ஜனரஞ்சகமான சினிமாப் பாடல்களை அருமையான குரலில் பாடி மகிழ்வித்தார். அப்பாடல்களை அவர் இன்னும் மறக்காமல் பாடியது பாராட்டுக்குரியது. மேலும் எங்களோடு பிரயாணஞ் செய்த வழிகாட்டி தன்னைப் பற்றியும் கலாச்சாரமையம் பற்றியும்



கூறினார். 40 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்நிலையம் மிகவும் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது சுற்றுலாப் பயணிகளைக் கவரும் உலகப் புகழ்பெற்ற மையமாக மாறியுள்ளது பற்றிப் பெருமையாகப் பேசினார்கள். இங்கு பணியாற்றும் ஆயிரக்கணக்கானவர்களுள் ஹவாய்ப் பல்கலைக்கழக மாணவர்களே பெரும்பான்மையானவர்கள் என்றும் பகுதி நேரவேலையாட்களாக அவர்கள் பணம் சம்பாதிக்கும் ஒரு முக்கிய நிலையம் என்றும் கூறினார்.

காலை 10 மணியளவில் நாம் நிலையத்தை அடைந்தோம். அப்போது தான் அது திறக்கும் நேரம். ஏற்கனவே பலர் அங்கு வாசலில் குழுமி நின்றனர். எமது குழுவில் இருந்த அனைவரையும் சிறு சிறு குழுக்களாகச் சேர்த்து மையத்தைப் பார்த்துவிட்டு பிற்பகல் 4 மணிக்கு வாசலுக்கு வரும்படி கூறினோம். 5 மணிக்கு நாங்கள் விமான நிலையத்துக்குச் செல்ல வேண்டும். எமது விமானம் 7.30 மணிக்குப் புறப்படும் என்றும் கூறினோம். எங்கள் குழுவில் 6 பேர் இருந்தனர். அங்கிருந்த எண் எழுதிய அம்புக்குறிகளைப் பார்த்து எமது சுற்றுலாவை ஆரம்பித்தோம். இக்கலாச்சார நிலையம் பல மில்லியன் டொலர் செலவு செய்து செயற்கையான மலைக்குன்றுகள், நீர்வீழ்ச்சிகள், தடாகங்கள், கால்வாய்கள் பல்வேறு தீவுகளின் குடில்கள், வீடுகள், பார்வையாளர் மண்டபங்கள், போசன சாலைகள், பயணிகள் இளைப்பாறும் இடங்கள், வழி நெடுகிலும் மரக்குத்திகள், கற்கள், பலகைகள் யாவையும் பயன்படுத்தி இருப்பிடங்கள், வெவ்வேறு வகையான உஷ்ணவலயப் பிரதேச மரங்கள், பூமரங்கள், வாழைகள், கமுகு, மூங்கில், குறோட்டன், செவ்வரத்தை, பலவகைக் கற்றாளை போன்ற இன்னோரன்ன பலவற்றையும் உண்டாக்கி அதனை ஒரு புதிய உலகமாக ஆக்கியிருந்தார்கள். இது உண்மையிலேயே பாராட்டத்தக்கது.

ஒவ்வொரு தீவின் கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் வீடுகள், குடில்கள், மண்டபங்கள் யாவற்றையும் அத்தீவிலேயே கிடைக்கக் கூடிய மரங்கள், ஓலைகள், மூங்கில்கள், யாவற்றையும் பயன்படுத்தி அத்தீவிலே நாம் இருப்பது போன்ற ஒரு சூழலை ஏற்படுத்தியிருந்தார்கள். இவற்றுடன் அத்தீவுக்கே உரிய நடனங்கள், பாடல்கள், வாத்தியக் கருவிகளைப் பாவித்து ஆண்களும், பெண்களும், ஆடியும், பாடியும் விருந்தினரை மகிழ்வித்தார்கள். மேலும் இதில் பங்கு பற்றிய யாவரும் தத்தமது தீவின் தேசிய உடையில் காட்சியளித்தனர். இவர்களுக்கமைய உடைகள் பெரும்பாலும் கண்ணைப் பறிக்கும் நிறங்களில் பல வேலைப்பாடுகள் பற்றி முறை வண்ணங்களைக் கொண்டிருந்தன. உடைக்கு மேல் புற்களால் அல்லது ஓலைகளால் செய்யப்பட்ட ஒரு ஆடையை இடையில் அணிந்திருந்தார்கள். இவர்களுடைய நடனங்கள் பெரும்பாலும் இடையையும் கைகளையும் ஆட்டி அசைக்கும் எளிய தாளங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவர்களது பாடல்களில் ஸ்பானிய, பிரெஞ்சு இராகங்களின் தாக்கங்களை கேட்கக் கூடியதாக இருந்தது. தாகிற்றி, பிரெஞ்சு பொலினீசியாத் தீவுகள் பிறெஞ்சுக்காரால் ஆளப்பட்டதால் இத்தாக்கம் ஏற்பட்டது. மேலும் இவர்களது வாத்தியக் கருவிகளுள் கிற்றார், மொறொக்கோஸ், பெரிய மேளங்கள் முக்கியமானவையாய் இருந்தன. இவர்கள் மூங்கில் தடியின் ஒரு முனையின் அருகுகளைப் பிளந்து, தாளவாத்தியமாகப் பாவித்து கேட்பதற்கு அருமையாய் இருந்தது. மேலும் பீஜித் தீவு மக்கள் மூங்கில் தடிகளை நிலத்தில் தட்டி தாளவாத்தியமாகப் பாவித்ததும் அருமையாக இருந்தது. சிரட்டையையும் தாள வாத்தியமாகப் பாவித்தனர். மேலும் காய்ந்த சுரக்காய், பெரிய மரக்குத்திகள், மூங்கில்கள் யாவற்றையும் மேளங்களாகப் பாவித்தனர். ஆதிகால மக்கள் எவ்வாறு இயற்கைப் பொருட்களை வைத்துக் கொண்டு இசையோடு பாடல்களைப் பாடினர் என்பதை நாம் உணரக்கூடியதாய் இருந்தது.

பெரும்பாலும் ஒவ்வொரு தீவுக்கும் ஓர் இடத்தை ஒதுக்கி அங்கே அவர்களின் தீவுச் சூழலை ஏற்படுத்தி, அவர்கள் வாழ்க்கை முறைகள், உணவு வகைகள், அவற்றைத் தயாரிக்கும்முறைகள், தேவையான பொருள்கள், பாரம்பரியக்கலைகள், ஓவியங்கள், சிற்பங்கள் (பெரும்பாலும் மரச் சிற்பங்கள்) ஆகியன பற்றிய தகவல்களை சுவரில் பலகைகளாகத் தொங்க



விட்டிருந்தனர். மேலும் ஒவ்வொரு தீவுக்கென குடில்கள், மண்டபங்கள் அவர்களது பாரம்பரிய முறையில் அமைக்கப்பட்டிருந்தன. அங்கே நடனங்கள், பாடல்கள், கதை கூறுதல் முதலியன நடைபெற்றன. அவர்கள் தாம்பாடிய பாடல்களையும் நடனங்களையும் பார்வையாளர்களுக்கும் சொல்லிக் கொடுத்துப் பாடவும் ஆடவும் வைத்தது மிகவும் சிறப்பாக இருந்தது. எளிய தாளமுள்ள நடனங்கள் ஆதலால் யாவரும் மகிழ்ச்சியாக ஆடினர். ஒவ்வொரு குடில்களிலும் அத்தீவுக்கு விளைபொருட்களைத் தொங்கவிட்டு அலங்கரித்திருந்தனர். மேலும் நிலத்தில் குழி தோண்டி காட்டுப் பன்றியை முழுதாகவே வேக வைத்து வெளியே எடுத்துச் சுவைக்கக் கொடுத்தது இன்னுமொரு சிறப்பு நிகழ்வாகும்.

அன்று 3 மணியளவில் அங்கிருந்த கால்வாயில், இரு படகுகளை, இணைத்து, மேடையமைத்து அதன்மேல் ஆண்களும் பெண்களும் தத்தமது தேசிய உடையில் நடனமாடியது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தொங்கா, தாகிற்றி, ஹவாய், பீஜி, பிரெஞ்சு பொலினீசியா, குக்தீவுகள், சமோவா போன்ற தீவுகள் இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றின. கால்வாயின் இருமருங்கிலுமிருந்து யாவரும் பார்த்து மகிழ்ந்தோம். இவர்களின் நடனங்களுக்கு ஒலி பெருக்கியில் பாடல்கள் ஒலிபரப்பாயின. இது ஏறக்குறைய 30 நிமிடங்களுக்கு நடைபெற்றது. அதன் பின்னர் அங்குள்ள பல்வேறு நிலையங்களையும் பார்த்துவிட்டு 4:30 மணியளவில் வெளியே வந்தோம். அன்று இரவு மேடையில் கலை நிகழ்ச்சிகளும் விருந்தும் ஒழுங்கு செய்திருந்தார்கள். விருந்துக்கு மட்டும் பணம் செலுத்த வேண்டும். எங்களுக்கு நேரமில்லாததால் நாங்கள் புறப்பட்டு விட்டோம். உண்மையில் அன்று முழுநாளும் செலவு செய்யக்கூடிய இடமது. எங்களுக்கு இது முன்னரே தெரிந்திருந்தால் கடைசி நாள் வரை பிற்போடாமல் ஹொனொலுலு வந்த மறுநாள் இங்கு சென்றிருக்கலாம்.

எனினும் இப்பிரயாணம் ஒரு மறக்க முடியாதது. விரைவாக பல இடங்களுக்குச் சென்றதால் முதியோர் சிலர் களைத்துப் போயினர். இன்னும் ஓரிரு நாட்கள் கூட செலவழித்திருக்கலாமெனப் பலரும் அபிப்பிராயப்பட்டனர்.

(முற்றும்)

AMBIHA SILK (Fancy Jewellery)

FINCH & MIDDLEFIELD



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர
Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம்,
மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces
வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top
இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள



அழையுங்கள்: 416.297.5261

LAW OFFICE

STEFANO FORTINI

B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

# அனாதை!

கோடை கால தென்றல் காற்றின் சுகத்தினை அலுவலக ஜன்னல் வழியாக உள்வாங்கிக் கொண்டிருந்த ஆனந்தின் சிந்தனைகள் ஈடுபாட்டுடன் வேலைசெய்ய விடாமல் தடுத்தது. ஆனந்தின் இதய ரீவியில் நேற்றுப் பார்த்த அந்த சினிமாவின் பாதிப்பு தொடர்ந்து ஒளிபரப்பிக்கொண்டிருந்தது. அடிக்கடி கைக்கடிகாரத்தினைப் பார்த்து, கடிகாரத்தின் மேல் கோபித்துக்கொண்டான் ஆனந். கடிகாரத்திற்கு எப்படி புரியும் இவனின் அவசரம். வேலை முடிந்ததும் ஓர் அமைதியான இடத்தில் இருந்து இந்த சினி-மாவின் பாதிப்பிலிருந்து விடுபட எண்ணியபோது ஆனந்தின் மனதில் தோன்றியது அலுவலகத்திற்கு முன்னால் இருக்கும் சுப்பிரமணிய பூங்கா தான்.

வேலை முடிந்ததும் சைக்கிளை எடுத்துக்கொண்டு நேரே பூங்காவிற்குள் சென்றான். அங்கு சைக்கிளை தரிப்பிடத்தில் விட்டு பூட்டிய ஆனந் பூங்காவின் கிழக்கு பக்கம் திரும்பியவனுக்கு அந்த அழகான மாநகர சபை கட்டிடம் தெரிந்தது. யாழ். நகருக்குள் வரும் மக்களுக்கு யாழ். நகரின் நுழை வாயிலாக இருக்கும் மாநகர சபை கட்டிடமும், சுப்பிரமணிய பூங்காவும் தனி அழகு என்பதனை எல்லோருமே ஏற்றுக்கொள்வார்கள் என்று ஒரு வினாடி எண்ணிக்கொண்டான் ஆனந்.

தனக்கான தனிமையான இடத்தினை தேடி நடந்தான். அங்கங்கு காதல் சோடிகள் தங்களின் அன்பை பகிர்ந்துகொண்டும், சில காதலர்கள் சீரியசான விவாதத்தில் இருப்பதனையும் காணக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஒவ்வொரு பிரச்சினை என்று எண்ணிக்கொண்டு. பூங்காவின் அழகை பார்ப்பதற்காகவே ஒரு சுற்று சுற்றி வர நினைத்து நடந்தவனுக்கு இரண்டு சிறுமிகள் ஊஞ்சலில், கள்ள மில்லாத சிரிப்போடு, தங்களுக்கு எந்தவித சுமைகளும் இல்லை என்ற இறுமாப்புடன் ஒருவரை ஒருவர் போட்டி போட்டு ஊஞ்சலை உதைத்து உதைத்து ஆடிக்கொண்டு இருப்பதனை பார்த்த ஆனந்திற்கு தானும் இப்படி குழந்தையாக இருந்திருக்க கூடாதா? என்று எண்ணினான். இப்படி எல்லோருமே குழந்தைகளாக இருந்திருந்தால் இந்த உலகம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்குமென்றும் எண்ணிக்கொண்டான்

தனக்கான இடத்தினை தெரிவு செய்து அமர்ந்தவனின் மனம் மீண்டும் நேற்று பார்த்த சினிமாவை நோக்கி சென்றது. என்ன அற்புதமான படம் தன் வாழ்வில் மறக்கமுடியாத அல்பிறட்டின் வாழ்க்கையை பதிவு செய்திருந்தது. யார் இந்த இயக்குனர் இவருக்கு எப்படி அல்பிறட்டின் வாழ்க்கை தெரியும் என தனக்கு தானே கேள்வி எழுப்பிய ஆனந்தின் மனம் '...சில ஆண்டுகளுக்கு முன் அமைதி காக்கவென வந்த இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட அற்புதமான மனிதன் அல்பிறட்டின் நினைவுகளில் மூழ்கியது.

எமது ஊரின் அழையா விருந்தாளியாக வந்து நிரந்தரமாக எம்மூரை தனதாக்கி கொண்டவர் அல்பிறட். கிழிந்த பெனியனும், ஊத்தை கால்சட்டையுமாய், ஊரை சுற்றி யார் யாருக்கு உதவ முடியுமோ அவர்களுக்கு வேலை செய்து கொடுத்துக் கொண்டிருப்பார். அப்போது யார் இந்த அல்பிறட்?. எங்கிருந்து வந்தவர்?.... எதற்காக எங்கள் ஊரிலேயே தங்கிவிட்டார்? இப்படியான பல கேள்விகள் ஆனந்திற்கும், ஊர் மக்களில் பலருக்கும் எழுந்தது இயல்பானது தான். இவர் யார் என்பதனை எப்படி அறியலாமென எண்ணிய ஆனந்திற்கு,



அந்த மனிதர் அடிக்கடி வீரா வீட்டிற்கு போய் வருவதை கவனித்தான். ஒரு நாள் தன் நண்பன் கண்ணனையும் அழைத்துக்கொண்டு வீரா வீட்டுக்கு போனான். அப்போது இவர்களை கண்டதும் வீரா வந்து 'என்ன தம்பியள் திடீரென்று வந்திருக்கிறயள் என்ன விசயம்'? எதுக்கும் முதலில் உள்ளே வாங்கோ என வரவேற்றார். உட்சென்று அமர்ந்த அவர்களிடம் என்ன விடையமாக வந்தனீங்கள் என விசாரித்தார்.

அதற்கு ஆனந் வந்து வந்து என இழுக்க என்ன தம்பி இழுக்கிறாய் வந்த விசயத்தை சொல்லும் எனக்கேட்க கண்ணன் இல்லையிங்க நம்மட ஊருக்குள்ள புதுசாக ஒருவர் வந்திருக்கிறார் அவர் அடிக்கடி உங்கட வீட்ட வந்து போறார், அது தான் அவரைப்பற்றி தெரிந்து கொள்ளலாமென்று தான்...என இழுத்தான். ஓ நீங்க அல்பிறட் பற்றி அறிய வந்தனீங்களோ எனக் கேட்டு சிறிய மௌனத்தின் பின் தம்பியள் அவர் பெயர் அல்பிறட். என்னோடு பற்றிக்ஸ் கல்லூரியில் படிச்சவர் என்றார். அதற்கு கண்ணன் அவருக்கு சொந்தக்காறர் இல்லையா? எந்த ஊரைச் சேர்ந்தவர் போன்ற கேள்விகளை கேட்டான். அவர் ஊர்காவற்துறையை சேர்ந்தவர், பெரும் வசதி படைத்த குடும்பத்தில் பிறந்தவர். ரொம்ப அருமையானவர். அவரிடம் எனக்கு பிடித்த விடையம் பிறருக்கு உதவி செய்வதும், அடுத்தவரின் துன்பத்தில் பங்காளனாக இருப்பதும், மற்றவருக்கு தீங்கு நிகழ்ந்தால் தட்டிக்கேட்கும் தைரியமும் தான். அப்படிப்பட்ட நல்லவனுக்கு இந்த நிலமை, பார்க்கவே கவலையாக இருக்கு என்று சொல்லி மனச் சோர்வோடு மௌன-மானர் வீரா.

அல்பிறட்டைப்பற்றி வீராவிடம் அறிந்ததி லிருந்து ஆனந்திற்கும், கண்ணனுக்கும் அவரிடம் அனுதாபம் பிறந்தது. இந்த நல்ல மனிதரோடு பழகவேண்டும், இவருக்கு என்ன நடந்தது என்பதனை அறியவேண்டும். இந்த நிலையிலிருந்து அல்பிறட்டை மாற்ற முயற்சிக்க வேண்டும் என்று எண்ணி அல்பிறட்டுடன் பழக வாய்ப்பு வராதா என காத்திருந்தவர்களுக்கு அந்த நாளும் தானாகவே அமைந்தது. ஆனந்தும், கண்ணனும் கோவில் வளவில் கதைத்துக் கொண்டு நின்ற போது அங்கு வந்த அல்பிறட் அவர்களிடம் நலம் விசாரித்து சிறிது நேரம் உரையாடினார். அந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்திய ஆனந், அல்பிறட் உங்களோடு நாங்கள் நண்பர்களாக பழகலாமா? எனக் கேட்டான். அதற்கு சிரிப்பை மட்டுமே பதிலாக கொடுத்து, சிறிது தூரம் சென்றவர் திரும்பி வந்து நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டும், நாளை சந்திப்போம் என்று சொல்லிச் சென்றார்.

இவர்களோடு கதைக்கும் போதெல்லாம் எந்தவிதத்திலும் நோயாளி போல தெரியாது. நல்ல நகைச்சுவையாக கதைப்பார். சில சமயங்களில் அல்பிறட்டின் நகைச்சுவையை கேட்டு கண்ணன் விழுந்து......விழுந்து சிரிப்பான். உலக அறிவிலாகட்டும், இலக்கியத்திலாகட்டும், சினிமாவாகட்டும், எதுவானாலும் விவாதிக்கும் திறன் கொண்டவர். அதுபோல் கோபக்காரனும் கூட. யாராவது வசை சொன்னால் அவர்களின் வீடுகளுக்கு உதவி செய்வாரே தவிர அந்த வீட்டில் பச்சத்தண்ணீர் கூட குடிக்கமாட்டார். அல்பிறட்டிடம் இவர்களுக்கு பிடித்ததே மிக அமைதியாக கதைப்பது தான், சத்தமே வெளியில் கேட்காது. நேர்மையான விமர்சகன். இப்படி பல பரிமாணங்களை கொண்ட அல்பிறட்டிற்கு ஏன் இந்த நிலை வந்தது என்பது தான் இவர்களுக்கு மிகவும் கவலையாக இருந்தது.

அல்பிறட், ஆனந், கண்ணனுடன் நட்பாக இருப்பது ஊர் மக்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. யாருடனும் லேசில் கதைத்து பழகமாட்டார். வீராவுக்கு பிறகு இவர்களோடு தான் இயல்பாக பழகினார். எமது கோவிலில் எல்லா வேலையையும் தன் தலையிலேயே எடுத்து செய்வார். ஆனந்தையும், கண்ணனையும் சேர்த்து கோவில் வளவை துப்பரவு செய்வதில் அல்பிறட்டிற்கு அலாதி விருப்பம். அப்படி தான் அன்றும் இவர்கள் மூவரும் சிரமதான வேலை செய்து கொண்டு இருக்கும் போது சிறிது களைப்படைந்தவராக இருந்தவர். என்ன வாழ்க்கை என்று இழுத்தார். அப்போது ஆனந் என்ன அல்பிறட் என்ன சோர்வாக இருக்கிறீர்கள் என கேட்டபோது, அவரையும் அறியாமல் கண்கள் கலங்கியிருந்தன. எப்போதுமே, எதையுமே காட்டிக்கொள்ளாத மனிதர், ஏன் இன்று இப்படி என தனக்குள் கேள்வியைக் கேட்டுக்கொண்டு, அல்பிறட்டின் பதிலுக்காக காத்து நின்றவர்களை Lets go guys என்று சொல்லி வேலையை தொடங்கினார். ஆனாலும் இன்று அல்பிறட்டின் மனம் ஒரு நிலையில் இல்லாததனை ஆனந்தும், கண்ணனும் புரிந்து கொண்டனர்.

பல சயங்களில் மக்கள் மீது கோபம் கொண்டவராகவும், குறிப்பாக பணக்கார மனிதர்களை வெறுப்பவராகவும் ஆனந்தின் உரையாடல்கள் அமையும். அதேபோன்று ஏழைகளின் மீது பாசம் கொண்டவராகவும் அவர்களின் வீடு தேடிச் சென்று உதவுபவராக இருப்பார். இவரை பயித்தியம் என்று உறுதி செய்து கொண்டு இவர்மேல் இரக்கப்பட்டு யாராவது காசு கொடுத்தால் அல்பிறட்டுக்கு வரும் கோபம் அப்பப்பா அன்று முழு நாளும் எந்த வேலையும் செய்யாமல் ஏன் சாப்பிடக்கூட மாட்டார். எங்களின் கோவில் மரத்தடியில் இருந்து கொண்டு சத்தமே வராமல் அந்த காசு கொடுத்த நபரை திட்டிக்கொண்டிருப்பார். அந்த சமயத்தில் அடிக்கடி பாடும் பாடல் தான் இது

ஆசீர் அன்ரனி
ரொறொன்ரோ

ஐயா சாமி ஆரோடு சாமி
நரிக் கொம்பிருக்கு வாங்கலையோ
காட்டு நரி ரொம்ப மிக நல்லதுங்க
வீட்டு நரி ரொம்ப ரொம்ப பொல்லாதுங்க
வேலை மிக வாங்கும் கூலி தர ஏங்கும்
பட்டினியைப் பார்த்து நரி ஏப்பம் விடும்

மனிதம் சார்ந்த, அல்பிறட்டின் கருத்தாக இந்த பாடல் இருக்குமோ என ஆனந்தும், கண்ணனும் எண்ணிக்கொண்டார்கள். மனித வாழ்வில் எப்படி, எப்படியெல்லா மாறுதல்கள் வரும் என்றதற்கு சரியான எடுத்துக்காட்டு அல்பிறட்தான். ஆனால் சமூக, உலகியல் மாற்றங்களோடு இசைவில்லாத வாழ்க்கை இப்படித்தான் ஆகும் என்பதற்கும் அல்பிறட் தான் எடுத்துக்காட்டாக விளங்கினார். இவரை மனநிலை பாதிக்கப்பட்டவராக கருதுவதா? இல்லையா? என்பதனை நிர்ணயிக்க முடியாதவர்களாக இருந்தார்கள் ஆனந்தும், கண்ணனும்.

அல்பிறட் ஏதோ ஒரு விதத்தில் நோயாளியாக இருந்தபோதிலும், தன்னால் யாருக்காவது பயன் கிடைக்கவேண்டும், தன் வாழ்வு அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்பதனை அவரின் நாளாந்த செயல்பாடுகளின் மூலம் இவர்கள் இருவரும் உணர்ந்து கொண்டார்கள். இதனால் யார் என்ன சொன்னாலும் அதனை சட்டைசெய்யாதவர்களாக அல்பிறட்டுடன் சேர்ந்து தமது சமூகத்துக்கான நல்ல கார-ியங்களை செய்து வந்தனர். உண்மையிலேயே அல்பிறட்டுக்கு எமது ஊர், மக்கள் சார்ந்த நல் அபிப்பிராயமே இருந்தது. காரணம் எம்மக்கள் பல விடயங்களில் ஒற்றுமையும், நேர்மையும் கொண்டவர்கள்.

தொடர்ச்சி 28ஆம் பக்கம்

**திவ்ய ஆற்றுக்கால் தேவி ஜோதிடம்**



திருமணப்பொருத்தம் முறையாகப் பார்க்கப்படும்,
திருமணத்தடை, குழந்தைபாக்கியம் இன்மை,
படிப்புத்தடை, குடும்பக்கலகம் போன்ற
தோஷங்களுக்கான பரிகாரங்கள் செய்வதற்கும் பத்து
வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எதிர்கால கல்வித்தடை
நிவர்த்திக்கும் ஆலோசனை வழங்கப்படும்.

Call: Meenakshisundram Ramasamy 416.439.2002

# சார்பியல் - 27

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

தனித்துவமான ஓய்வு என ஒன்றையும் கருத முடியாது என சிறப்புச் சார்பின் அடிப்படை அமைந்தது போல, அதன் விரிவாக்கமான பொதுச் சார்புத் தத்துவத்திற்கு எந்தவொரு விசையிற்கோ அல்லது ஆர்முடுகலுக்கோ (வேகவளர்ச்சி) தனித்துவமான அளவீடு கிடையாது என்பது அடிப்படையாக அமைந்தது. பார்ப்பவர்களைப் பொறுத்து அவற்றின் பருமனும் மாறுபடும். இதன்படி, எல்லாமுமே சார்புடையன எனவாகின்றன. அடுத்து அயன்ஸ்ரைன் மனதில் எழுந்த சமவலிமைக் கொள்கை (equvalavce principle) பொதுச் சார்புக் கொள்கையை எடுத்துத் தந்தது. சமவலிமைக் கொள்கையானது அயன்ஸ்ரைனின் 'மகிழ்ச்சியான சிந்தனையில் இருந்து வந்தது. புவியீர்ப்பினால் கீழே விழுகின்ற ஒருவர் (அல்லது ஒரு பொருள்) ஈர்ப்புவிசையையோ அல்லது வேறு எந்தவொரு விசையையோ உணருவதில்லை. அவர் தனது நிறையைக் கூட உணருவதில்லை. ஆனால் அவர் கீழே விழுகையில் அவரது



இயக்கத்தில் வேகம் சீராக அதிகரித்துக் கொண்டு செல்கிறது. அதாவது சீரான ஆர்முடுகல் அவருக்கு இருக்கின்றது. ஒருவேளை யாராவது அவரைத் தாங்கிப் பிடித்தால், அல்லது தரையில் அவர் வந்து சேர்ந்தால் அவர் தனது பாரத்தை உணருவார். இது எங்கள் அனைவருக்குமே அனுபவமாகத் தெரிகின்றது.

இதன்படி பார்த்தால், ஈர்ப்பினால் ஏற்படக் கூடிய அல்லது ஏற்படுகிற விளைவுகள் எல்லாவற்றையும் ஆர்முடுகல் கொடுக்கின்றது, இல்லையா. எனவே, ஆர்முடுகலானது ஈர்ப்பிற்குச் சமமான வலிமையைக் கொண்டிருக்க வேண்டும் என அயன்ஸ்ரைன் கருதினார். அதனைத் தமது வழக்கப்படியான சிந்தனைப் பரிசோதனையின் மூலமாக நிரூபித்தும் காட்டினார். அடுத்து விழுகையின் போது விசைகள் ஒன்றும் செயற்படாது என்பதனை உய்த்தறிந்து கொண்ட அயன்ஸ்ரைன், அப்படியான விழுகைகளை (இயக்கங்களை) இயல்பு விழுகை (free fall) எனக் குறிப்பிட்டார். இந்த இயல்பு விழுகைகளில் ஆர்முடுகல்கள் அவதானிக்கப்படுகின்றன. எனவே இந்த இயல்பான விழுகைகள் எந்தச் சட்டத்தில் இருந்து (அவதானியால்) பார்க்கப்படுகிறது என்ற அடிப்படையான கேள்வி எழுகின்றது. இது நேரத்தை தன்னுடன் இணைத்துக் கொண்ட வெளியிலே நிகழ்வதினால், அதாவது நாற்பரிமாணத்தில் நிகழ்வதினால் இந்த இயல்பு விழுகைகள் நிகழ்கின்ற சட்டத்தினை நாற்பரிமாண வெளியின் சட்டமாகக் கூறினார்.

ஆக, ஈர்ப்புப்புலமானது ஆர்முடுகலினால் கருதப்படக் கூடியது என்பதனை அயன்ஸ்ரைன் காட்ட, பொருளொன்றில் நியூட்டன் கூறிய ஈர்ப்புவிசையின் விளைவுகளை, ஆர்முடுகல் ஏற்படுத்தக் கூடிய விளைவுகளாகப் பார்க்கலாம் என்பது தெளிவாக்கப்பட்டது. இதனையே சமவலிமைக் கொள்கை என்கிறார்கள். நியூட்டனின் வழியிலான, ஒருபொருளின் ஈர்ப்புவிசையினை உணரக் கூடிய பிரதேசம் எல்லாம் அப்பொருளின் ஈர்ப்புப்புலம் எனப்படும். அந்த ஈர்ப்புப்




- கனி -
416.261.1348
leptons@hotmail.ca


தொடர்ச்சி 34ஆம் பக்கம்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.




# BASEMENT RENT

**9TH LINE & STEELES MARKHAM**
Fully renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகள்: 416.858.0388

**MIDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகள்: 416.732.1810

**MORNINGVIEW & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
613.699.5559 / 416.625.1891

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகள்: 416.899.9351

**MIDDLEFIELD & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2013.
905.201.6040 / 647.228.6040

**MCCOWAN & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to all facilities. Rent $950. No smokers & No pets.
647.213.0533 / 905.415.9320

**NEILSON & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, HWY, shops, school. Small family or students preferred.
தொடர்புகளுக்கு: 647.702.9264

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, school. Avail. immediately.
905.209.9809 / 416.706.5914

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom bsmt for rent. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.332.9991

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, Era super market. Avail. September 01, 2013.
416.292.5871 / 647.868.5871

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2013
தொடர்புகளுக்கு: 647.393.2081

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.330.1420

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. Anytime.
416.271.3209 / 416.276.2618

**BOVAIRD & WORTHINGTON**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.894.6617 / 647.701.6617

**MCLEVIN & MORNINGSIDE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.289.1680 / 416.616.0233

**KINGSTON & MORNINGSIDE**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, washer, dryer, parking. Close to TTC, school, shopping. Avail. immediately. No pets. Rent negotiable.
416.289.9507 / 416.720.9507

**NEILSON & MCLEVIN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.292.1953

**MCCOWAN & ELSON**
Newly renovated 2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry. Step to school, TTC. Quiet place. Park near-by. Avail. immediately.
647.991.4437 / 905.205.0595

**SHEPPARD & ROUGH RIVER**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.856.7724

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, living room, kitchen, washroom, laundry. Close to TTC, Woodside mall, temple. No pets & no smoking. Couple preferred. Avail. September 01, 2013.
416.293.1777 / 416.662.6060

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.438.2904

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2013.
647.317.9652 / 416.819.8680

**MORNINGSIDE / SHEPPARD**
Brand new 2 or 1 bedroom bsmt for rent. Sep. entrance. Gardening செய்யும் வசதியும் உண்டு. Malvern mall, TTC, school, library U OF T அருகாமையில் உள்ளன. Small family preferred. No pets & No smoking. Daycare available.
தொடர்புகளுக்கு: 416.834.1081

**BELLAMY & LAWRENCE**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close TTC, mall. Small family preferred. Avail. immediately.
416.464.4207 / 416.431.6349

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. August 01, 2013.
416.300.5791 / 416.844.2235

**MARKHAM & LAWRENCE**
1 bedroom bsmt apt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.627.6194

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Anytime.
647.349.0938 / 647.741.5335

**MORNINGSIDE & SHEPPARD (ROUGH RIVER)**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.300.7595

**MCNICOLL & MORNINGSIDE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.456.6022 / 647.998.3018

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.200.0478

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. October 01, 2013.
416.919.9964 / 905.683.5105

**MCCOWAN & LAWRENCE**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
647.706.4920 / 416.522.3314

**MCCOWAN & ELSON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 905.472.4122

**MCCOWAN & STEELES**
Newly Renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, safety Equipment, laundry, parking, good neighbours. Close to TTC, temples, park, school. Small family preferred. Avail. Anytime.
416.710.7122 / 905.294.7122

**MORNINGSIDE & ELLESMERE**
Finished bsmt for rent. Parking. Close to TTC, University, Scarborough Campus.
தொடர்புகளுக்கு: 647.281.3806

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, internet, parking, cable. Single ladies or young couple preferred.
தொடர்புகளுக்கு: 416.286.1755

**MIDDLEFIELD & STEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.871.1825 / 647.896.4118

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
**KEELE & FINCH**
Furnished rooms for rent. Close to all facilities. Avail. immediately.
**905.209.9212 / 416.562.5113**

**KENNEDY & ELLESMERE**
3 Bedroom bsmt for rent. 2 Washrooms, parking, laundry. Close to TTC, school, subway, Highland farm. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.568.4906

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, University. Avail. September 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.520.5883

**16TH AVE & MCCOWAN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2013. No pets & No smoking.
தொடர்புகளுக்கு: 416.471.0094

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2013.
தொடர்புகளுக்கு: 905.294.4690

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.804.5002

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, kitchen. Avail. Anytime.
தொடர்புகளுக்கு:416.502.3048

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.889.1083

**MORNINGSIDE & NEILSON**
2 Bedroom bsmt for rent. sep. entrance, parking, laundry, Wi-fi included. Close to all facilities. Avail. August 17, 2013.
தொடர்புகளுக்கு: 416.414.6094

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, bank, Walmart, TTC. Avail. immediately. Couple preferred.
தொடர்புகளுக்கு: 647.854.3578

**MARKHAM & MAJOR MACKENZIE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
905.294.3260 / 647.708.2101

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Avail. anytime.
தொடர்புகளுக்கு: 647.296.7932

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு:
647.500.4564 / 647.839.0679

**HIGH GLEN & MCCOWAN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.575.5055 / 416.823.3552

மேலும் பக்கங்கள் 27, 28

# BSMT FOR RENT

**BIRCHMOUNT & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.8086

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: **416.551.8379**

**PHARMACY & FINCH**
1 bedroom avail. on main floor. 3 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, schools. Ladies preferred இரண்டு நேரச் சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. immediately.
416.201.1222 / 416.299.4895

**BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in a main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.720.0898

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. New appliances, laminated floor. No pets.
தொடர்புகளுக்கு: 416.917.0557

**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt for rent. Sept. entrance, Laundry. Close to all facilities all facilities.
தொடர்புகளுக்கு: 905.947.8018

# CONDO FOR RENT

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom + den condo. for rent. 2 full washroom, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.989.1912

# APARTMENT FOR RENT

**SHEPPARD & MEADOWVALE**
2 Bedroom apartment in main floor for rent. Rent $1400 + utilities. 2 Bedroom apartment in second floor rent. Rent $1300 + utilities.
416.409.6067 / 416.884.7020

# CONDO FOR RENT OR SALE

**NEILSON & SHEPPARD**
2 Bedroom + 2 washroom condo for rent or sale. Close to TTC, mall, HWY. Avail. September 15, 2013.
905.554.3040 / 416.721.1349

# வீடு விற்பனைக்கு

சாவகச்சேரியில் Driberg College அருகாமையில் 5 அறைகள் கொண்ட வீட்டுடன் 20 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பகுதிபகுதியாகவும் கொடுக்கப்படும்.
416.269.2390 / 0776.913.148
ieslanka@hotmail.com

# ROOM FOR RENT

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom for rent. laundry, parking. Ladies preferred. இரண்டு நேரச்சாப்பாடும் கொடுக்கப்படும்.
416.431.2816 / 647.769.2816

**BRIMORTON & MARKHAM**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Ladies preferred. Avail. September 01, 2013.
தொடர்புகள்: 416.871.4761

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent. Sep. washroom, laundry. Close to TTC, mall, temple. Avail. immediately.
தொடர்புகள்: 647.404.3004

**KENNEDY & ELLESMERE**
1 Bedroom for rent. Laundry, cable. No smoking & No Drink. Avail. September 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.315.6140

**9TH LINE & 14TH AVE**
1 Bedroom for rent. Parking, laundry. Close to YRT, mall, bank. Avail. September 01, 2013.
905.554.5810 / 416.648.1987

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.849.4467 / 647.680.7505

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom for rent in a bsmt. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.446.7731 / 647.500.8709 / 647.893.5898

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent in a bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.347.1685 / 647.299.1685

**HARDWOOD AVE & KINGSTONE**
1 Bedroom for rent. Washroom, laundry. Close to all facilities. வயதானவர்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.835.0748 / 289.660.0983

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 647.855.0339

**TAPSCOTT & FINCH**
2 Bedrooms for rent on main floor and one large bsmt bedroom for rent. Close to all facilities. Pensioners and welfare recipient also considered.
தொடர்புகளுக்கு: 647.216.7326

**KENNEDY & ELLESMERE**
இரு முதியோர் வசிக்கும் வீடொன்றில் உடனடியாக ஒரு அறை வாடகைக்கு உண்டு. Laundry avail.. Close to all facilities. Students, working women or ladies preferred.
416.291.6667 / 416.895.8111

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Laundry. Close to all facilities. Avail. September 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.558.8562

# ROOM FOR RENT

**DANFORTH & EGLINTON**
Room for rent in an apartment. Fully furnished with bed, cable tv, internet, phone, laundry. Close to TTC, mall. Sharing kitchen, washroom. Rent $400. Male only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.637.1303

**MARKHAM & STEELES**
1 or 2 bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.735.5623

**MORNINGSIDE & SHEPPARD (Rough river)**
மேல்தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. Washroom, parking, laundry. Close to all facilities. Working people, ladies or old people preferred. Avail. Anytime. Rent $400.
தொடர்புகளுக்கு: 416.899.1123

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:
647.388.1481 /416. 759.7016

**MARKHAM & SHEPPARD**
Sept. apartment 1 bedroom rent on main floor. Laundry. Close to all facilities. Avail. immediately.
416.919.9964 / 905.683.5105

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent in a condo. Parking, laundry, kitchen. Close to all facilities. Small family preferred.
தொடர்புகளுக்கு: 647.835.5244

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
647.346.0930 / 647.783.4876

**NEILSON & FINCH /MORNINGSIDE**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. 2 & 3 bedrooms condo. for rent.
647.361.9527 / 416.825.9717

# TUITION CLASSES

Gr. 3 - Gr.12, College & University Math, Science, English, Functions Calculus & Vectors, Data, physics, Chemistry 7 Biology. University Preparation Class. Calculus I & II, Linear Algebra, Linear Statics, Dynamics, Mechanics, Physics & Chemistry.
***Ruban Master: 416.817.8226***

# HOUSE FOR RENT

**TAPSCOTT & FINCH**
Newly renovated Bungalow 4 bedrooms + 3 bedrooms bsmt house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகள்: 647.849.0759

**NEILSON & FINCH**
3 Bedroom + bsmt house for rent. Parking, laundry. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately.
தொடர்புகள்: 416.495.9775

**KENNEDY & EGLINTON**
3 Bedroom + 2 Bedroom bsmt bungalow house for rent. Parking, laundry. Avail. September 01, 2013.
416.757.3303 / 416.858.9633

**MCCOWAN & 14TH AVE.**
Beautiful 4 bedroom house for rent.Parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2013. No pets.
905.471.5077 / 647.969.4039

**KENNEDY & FINCH**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. 1 Bedroom bsmt also avail. Sep. entrance. Avail. October 01, 13.
தொடர்புகளுக்கு: 647.706.5851

**SHEPPARD & DEEN PARK**
3 Bedroom house for rent. 2 Parking, laundry, 2 full washroom. Close to TTC, Scarborough University. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.765.3303

**FINCH & BIRCHMOUNT**
3 bedroom house for rent. Garden & 2 car parking. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.890.5267

**BRIMLEY & EGLINTON**
3 Bedroom house for rent. 2 Parking, laundry. Close to all facilities. Avail.immediately. Credit history important.
தொடர்புகளுக்கு: 416.662.7984

# TAMIL INTERPRETATION SERVICE

Senior work, ODSP appointments
போன்ற வேலைகள் செய்வதற்கு அழையுங்கள்
Vijaya Kula: 416.315.7210

# TUITION

An experienced Graduate tutor for Grade 5 to Grade 10. Math & Science. Tuition Center இலும், வீட்டிற்கு வந்தும் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படும்.
Guna Master: 647.834.7358
atgunam@yahoo.ca

# தையல் வகுப்புக்கள்
# தையல் Orders

**MARKHAM & LAWRENCE**
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

மேலும் பக்கங்கள் 26, 29

# அனாதை

24ஆம் பக்கத்தொடர்ச்சி

எம்மை காக்கவென கங்கணம் கட்டிக் கொண்டு வந்தவர்கள், அமைதிப் படை யென்ற புனித பெயர் கொண்டு வந்தவர்கள், எமக்கான அமைதி வந்துவிட்டது, எமது உறவுகள் எம்மை காக்க வந்துவிட்டார்கள், இனி எங்களுக்கு அச்சமில்லை என்று கனவு கண்ட எம்மக்களின் கனவு மறையுமுன், யாரை காப்பாற்றவென வந்தார்களோ அவர்கள் மீதே போர்தொடுத்த நாசகாரர்கள். இவர்களின் வருகையின் பின்பே ஈழத்தமிழர்களின் கலாச்சார விழுமியங்கள் அழிக்கப்பட்டன என்றால் மிகையில்லை.

இழப்புக்கள், இழப்புக்கள், பாலியல் வல்லுறவுகள், காடைத்தனங்கள் என நாளுக்கு நாள் செய்தித்தாள்களில் சீ இது என்ன வாழ்க்கை, மனித வாழ்க்கைக்கு எந்தவித அர்த்தமும் இல்லையா? மிருகங்களை வேட்டையாடுவது போல் மனிதர்களை வேட்டையாடுகின்ற காட்டு மிராண்டித்தனம் எமது நாட்டில் தான் மலி-வடைந்து கிடக்கின்றது என்பதற்கு இந்திய இராணுவம் உதாரணமாகும். எந்த வகையிலும் அப்பாவி மக்களை கொடுமைப் படுத்துவதில் சிங்கள இராணுவத்திற்கு நாங்கள் சளைத்தவர்கள் இல்லை எனபதனை நிரூபித்து காட்டினர்.

அன்று ஞாயிற்றுக்கிழமை சென். மேரிஸ் கழகத்திற்கும், பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் சிநேக பூர்வ உதைபந்தாட்டப்போட்டி நடந்து கொண்டிருந்தது. இரண்டு கழகத்திற்கும் மக்கள் ஆதரவு வழங்கிக்கொண்டிருந்தார்கள். இதில் ஆனந்தும், கண்ணனும் தமது சென். மேரிஸ் கழகத்திற்கு ஆதரவு கொடுத்துக்கொண்டிருந்தனர். இரண்டு கழக ரசிகர்களும் மகிழ்ச்சியோடு விளையாட்டை ரசித்துக்கொண்டிருந்த போது அந்த ஊரே அதிரும் வகையில் வெடிச்சத்தம் மிக அருகில் கேட்டது. யாரையோ சுட்டுப் போட்டான் என்று கூறிக்கொண்டு சத்தம் கேட்ட திசையை நோக்கி ஓடினார்கள். வீரர்களும் விளையாட்டை நிறுத்தி விட்டு பின்னால் ஓடினார்கள். அவர்கள் ஓடுகின்ற எதிர் திசையில் இந்திய இராணுவ அணி தங்கள் முகாமைநோக்கி வந்து கொண்டிருந்தது. தங்களுக்கும் கேட்ட துப்பாக்கி சத்தத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லாதவர்கள் போல் நடந்து வந்தார்கள்.

சந்தையின் மையப்பகுதியில் மக்கள் வெள்ளமாக கூடி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டும் சத்தம் கேட்காமல் கதைத்துக்கொண்டும் நின்றனர். அங்கு வந்த ஆனந் சன நெருக்கடியை விலக்கிக்கொண்டு எட்டிப்பார்த்தவன் ஒரு கணம் சிலையாக நின்று விட்டான். அவன் அருகில் வந்து பார்த்த கண்ணன் பெரிய சத்தமாக டே அல்பிறட்டை சுட்டுப்போட்டாங்கடா என கத்திய சத்தம் கேட்டு சுய நினைவிற்கு வந்த ஆனந் ஐயோ இது என்ன கொடுமை, இந்த அப்பாவியை சுட்டுப்போட்டு ஒன்றும் தெரியாதவர்கள் போல் போகின்றார்களே என கத்தினான். ஆனந் பெருங்குரலில் அழுத சத்தம் அந்த ஊரையே நிலைகுலைய செய்தது.

சிறிது நேரத்தில் அங்கு வந்த பொலிசார், அல்பிறட்டின் உடலை எடுத்துச் சென்று யாழ். வைத்திய சாலையில் ஒப்படைத்தனர். ஆனந்தும், கண்ணனும், வீராவின் வீட்டுக்கு வந்தனர். அங்கு வீராவின் குடும்பமே இவர்களை கண்டதும் பெருங்குரல் எடுத்து கதறினர். ஊர் மக்களெல்லாம் வீரா வீட்டில் கூடிவிட்டனர். ஆனந்தின் மனத்தில் இழப்பின் துயரத்தையும் தாண்டி மனதில் ஓர் விதமான விளக்க முடியாத மகிழ்ச்சி. என்ன காரணமாக இருக்கலாம் என ஆராய நினைக்கையில் பக்கத்தில் கண்ணன் வந்து டே பார்த்தையா, அனாதையென்று வசை சொன்னவர்கள் எல்லாம் அல்பிறட்டின் மேல் எவ்வளவு பாசம் வைத்துள்ளார்கள் என்று. இல்லையென்றால் இப்படி கதறி அழுவார்களா? தன் மன உணர்வின் வெளிப்பாட்டிற்கான காரணத்தை கண்ணனின் அந்த வார்த்தைகளிலிருந்து தெரிந்து கொண்டான் ஆனந்.

வீராவின் வீட்டில் ஊரைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் எல்லாம் கூடி எப்படி அல்பிறட்டின் இறுதிச் சடங்கினை நடத்துவது என்று கலந்துரையாடிய போது சிலர் அவரின் உறவினர்கள் வந்தால் நாம் கொடுக்கத் தானே வேண்டும் என்று கருத்து சொன்னார்கள். அதற்கு ஆனந் ஐயா அல்பிறட்டின் ஆசை இந்த சவக்காலையில் தன்னை அடக்கம் செய்ய வேண்டுமென்பது தான். அவர் அடிக்கடி எமக்கு சொல்லுவார் தம்பியள் உங்கட மக்கள் நலலவங்கடா, ஆனா மொறட்டு பயலுகள் உடனே வெட்டுக் குத்தென்று போனாலும் நியாயத்துக்காகத் தான் போவாங்கள். என்னாசையெல்லாம் ஏனைய சமூகம் போல் கல்வியிலும் உங்கட சனம் முன்னேற வேண்டுமென்பது தான். இன்றைக்கு அதுவும் நிஜமாகிக்கொண்டு வருகிறது. எனது சாவு இங்க தான் நடக்கணும் நீங்களும், வீராவும் தான் என்னை இந்த சவக்காலையில தாக்கணும் என்று அல்பிறட்டின் விருப்பத்தினை ஆனந் சொல்ல வீராவும் ஆமோதித்தார். அதனை அங்கு நின்ற எல்லோருமே சம்மதித்தனர்.

யார் அனாதை, இந்த உலகிலுள்ள அனைவருமே ஒரு வகையில் அனாதைகள் தான். அப்படி இருக்கும் போது எப்படி நாங்கள் அல்பிறட்டை மட்டும் அனாதை என்று சொல்லலாம் என்பதனை புரிந்து கொண்டதனாலும், மனித மனம் எப்போதும் பிரிவின் பின்பே அந்த மனிதன் சார்ந்த நல்லவைகளை புரிந்து கொள்கிறது. எந்த மனிதனுக்கும் வாழும் போது வாழ்த்த தெரிவ தில்லை என்பது அல்பிறட் வாழ்விலும் நிஜமாகியது. இன்று எம்மோடு அல்பிறட் இல்லையென்ற உணர்வின் பின்பே பலர் அவரை தங்கள் சகோதரனாக ஏற்றுக் கொண்டார்கள். 'இருப்பவனுக்கு ஒரு வீடு இல்லாதவனுக்கு பல வீடு' என்பது போல் இந்த நல்ல மனிதனின் இழப்பில் ஒட்டு மொத்த ஊரே ஒன்று கூடி நின்றது என்பது தான் அல்பிறட்டின் வாழ்வின் வெற்றியாகும். ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டு அல்பிறட் என்று ஊரே வியந்தது ஆனந்துக்கும், கண்ணனுக்கும் மட்டுமல்ல அல்பிறட்டின் நண்பர் வீராவுக்கும் பெருமையாக இருந்தது.

அன்று மாலை அல்பிறட்டின் இறுதிக்கிரியை கள் நடைபெற்றன. எத்தனை குருக்கள், அவருடன் படித்தவர்கள் செய்தியறிந்து இறுதி நிகழ்வில் வந்து கலந்து கொண்டனர். கிறுக்கு பிடித்தவன், பைத்தியம் என்று விரட்டியவர்கள் இன்று உறவினர்கள் என்று சொல்லிக்கொண்டு மனம் வருந்தி கண்ணீர் வடித்துக்கொண்டு நின்ற காட்சி அந்த நல்லவரின் வாழ்வின் வெற்றியை கங்கணம் கட்டிநின்றது. நேற்று எம்மோடு உறவாடிய நல்ல நண்பன் இன்று எம்மோடு இல்லை என்பது எவ்வளவு கொடுமையானது. இரக்கமற்ற இந்திய இராணுவ கொடுமையின் உச்சமல்லவா இது! என்று மக்கள் குளறி அழுதார்கள். அந்தக் கிறுக்கு பயலும் நம்மை விட்டிட்டு போய்ட்டான்டா என்று எங்கள் ஊரின் பெரியவர் மரியான் ஐயா சொல்லி அழுத காட்சி இன்றும் எங்கள் நெஞ்சங்களில் அழியா காட்சியாக.

நாட்கள் மாதங்களாக வருடங்களாக உருண்டோடி அல்பிறட்டின் நினைவுகள் ஆனந்தினுள் கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டுக் கொண்டிருந்த வேளை அந்த சினிமா, அல்பிறட்டின் வாழ்வையே பிரதி-பலிப்பதாக, அவருக்கு அர்ப்பணம் செய்வதற்காக தயாரிக்கப்பட்டது போல், அல்பிறட்டின் வாழ்வை பதிவு செய்து நின்றது. ஆனந்தில் மட்டுமல்ல படம் பார்த்த அந்த ஊர் மக்களிலெல்லாம் இதே உணர்வினை காணமுடிந்தது.

தம்பி தம்பி என கூப்பிடும் குரல் கேட்டு தன் நினைவுக்கு வந்த ஆனந்தின் முன்னால் பூங்காவின் காவலாளி நின்று கொண்டிருந்தார். தம்பி நேரமாச்சு பூங்காவை விட்டு எல்லோரும் போய்விட்டார்கள் என்றார். ஓ.. மன்னிச்சுக்கொள்ளுங்கோ என்று கூறிக் கொண்டு எழுந்தவனின் மனதில் மிகப் பெரும் சுமை குறைந்ததாக உணர்ந்தான். தன் நண்பன் அல்பிறட்டின் எண்ணங்கள் தன்னுள் மறையாதென்பதனை அந்த சினிமா மீண்டும் நினைவூட்டியது. சைக்கிளில் புறப்பட்ட ஆனந்தின் செவிகளில் பூங்காவின் ஒலிபெருக்கியிலிருந்து அந்த பாடல் கேட்க மகிழ்ச்சி ரெட்டிப்பானது.

ஐயா சாமி ஆரோடு சாமி
நரிக்கொம்பிருக்கு வாங்கலையோ
காட்டு நரி ரொம்ப மிக நல்லதுங்க
வீட்டு நரி ரொம்ப ரொம்ப பொல்லாதுங்க
வேலை மிக வாங்கும் கூலி தர ஏங்கும்
பட்டினியைப் பார்த்து நரி ஏப்பம் விடும்.

மனிதன் மரணிக்கலாம் ஆனாலும் அவனால் விதைத்து செல்லப்பட்ட மனிதம் மரணிப்பதில்லை மாறாக புதிப்பிக்கப் படுகிறது என்றதற்கான ஆதாரம் அல்பிறட்.

முற்றும்


## மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா அமைப்பின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், விளையாட்டுப் போட்டியும் September 07, 2013 (சனிக்கிழமை), 370 Military Trail, Scarborough இலுள்ள Highcastle Public School இல் 10:00 மணி முதல் 5:00 மணி வரை நடைபெறும்.

விரங்களுக்கு: 416.705.1493 / 416.451.8427 / 416.458.1775

## GRACE HOPPERS DINNING & TAKEOUT

• Breakfast • Lunch • Dinner Enjoy our Tasty

Hoppers, Dosa, Rotti, Kulal pittu with sambol, sambar, Curries, Seafood, Meat, Vegi, Biriyani, Noodles, Salad, Fries, Chicken.

We do Catering for your parties too.



வேலைக்கு ஆட்கள் தேவை

And also enjoy: Coffee, Tea, Icecream, Fresh fruit Juice, Cake, Vadai, Rolls, sandwich.

We can come and make hoppers for your home parties.

Contact: 647.522.7599 3850 Finch Ave. W., Scarborough, ON (Kennedy & Finch)

## MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228

## COMMERCIAL UNIT FOR SALE

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.

Pl. Call: 416.451.0271 / 416.315.9397

## திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
647.556.4114 / 416.992.8782

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## மணமகள் தேவை

அவுஸ்ரேலியாவை வதிவிடமாக் கொண்ட 28 வயதையுடைய Telecommunication & Internet Engineering முடித்த மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
647.896.8687 / 011-94.11.236.2023

## மணமகள் தேவை

1978இல் பிறந்த இந்து மதத்தைச் சேர்ந்த B.Sc. Engineering, Post Graduate Diploma கொழும்பில் முடித்து அரசாங்க சேவை செய்பவருக்கும், மற்றும் 1987 ஆம் ஆண்டு பிறந்த B.Sc. (IT) (இறுதியாண்டு) இவர்களுக்கு தகுந்த மணமகள்களை இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ உறவினர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 647.852.6160

## மணமகள் தேவை

வடமாகணத்தை பூர்வீகமாகவும் திருகோணமலையை பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்து வரும் 30 வயது நிரம்பிய கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து உயர்நிலைப் பதவியில் பணியாற்றும் மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை தேடுகின்றனர். பல்கலைக்கழக படிப்பை முடித்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.727.8647
sinnahrajagopal@gmail.com

## மணமகள் தேவை

கனடாவில் அரசாங்கத் தாபனம் ஒன்றில் நிரந்தர பணியாற்றும், பிராமண மணமகனுக்கு கனடாவிலோ, அமெரிக்காவிலோ பொருத்தமான மணப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: Sarmathil@gmail.com

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கனடாவில் பிரஜா உரிமை பெற்று, Diploma படித்து முடித்து அலுவலகத்தில் தொழில் புரியும் இந்து வேளாள மணமகளுக்கு பெற்றோர் படித்து அலுவலகத்தில் தொழில் புரியும் கனடாவில் உள்ள வரனை தேடுகின்றனர். மணமகள் 1975 இல் பிறந்தவர். நிரந்தர தொழில் நிறுவனம் உள்ளோரும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.208.6222

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவில் பிராஜாவுரிமை பெற்ற 39 வயது ஆணுக்கு கனடாவில் இருக்கும் நற்குணமுள்ள பெண்ணை தாயும், சகோதரர்களும் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.525.5109

## BUSINESS FOR SALE

**BRIMLEY & STEELES**

பகுதியில் அமைந்துள்ள Take out & Catering உணவகம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 647.328.4510

***TUTORING***
***By Experienced Graduates.***

- Math
- Adv. Function, Calculus & Vectors
- Physics, Data managt, Java
- Computer Training
- CCNA / CCNP Preparation Help

***Contact: 416.706.1654***

## TUITION
## KEY BOARD CLASSES

***MARKHAM & LAWRENCE***

ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## SPACE AVAILABLE FREE*

***KENNEDY & EGLINTON*** பகுதியில் சிறப்பாக இயங்கி வரும் புதிதாக அமைக்கப்பெற்ற Coin Laundry யினுள் Tailoring (free*) செய்வதற்கான இடம் உண்டு. அனுபவமிக்கவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:416.856.0408

## JOB JOB JOB

## DRIVERS WANTED

Appliance delivery truck driver wanted. ***G*** licence வைத்திருப்பவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.880.3636

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

1½ வயது ஆண் குழந்தையை வீட்டிற்கு வந்து பராமரிப்பதற்கு வயோதிபப்பெண்மணி ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு: 905.399.5045

## TELE MARKETING

தமிழ் பேசத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.292.3900

## JOB JOB JOB

***Scarborough*** வில் அமைந்துள்ள உணவகத்திற்கு பலகாரம் செய்யத்தெரிந்தவர்களும் இலங்கை, இந்திய உணவு தயாரிக்கத்தெரிந்த Cook உம் தேவை.
தொடர்புகளுக்கு: 416.788.5265

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:905.492.0259

உடனடி வாடகைக்கு
வீடுகள், கொண்டோக்கள், பேஸ்மன்ட்கள்
உடனடி விற்பனைக்கு
Middlefield / Denison
4BR & 4WR Double Garage வீடு
Meadowvale / Sheppard
4+1BR & 3WR Back Split வீடு
Markham / Ellesmere
3+3BR & 2WR பங்களா வீடு
Markham / Highglen
2BR+2WR கொண்டோ
மேலதிக விபரங்களுக்கு:
Jey 416-816-9011

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

## JOB JOB JOB

## AZ DRIVERS தேவை

AZ Driving Licence உள்ளவர்கள் வேலைக்கு தேவை. 2 வருட அனுபவமுள்ளவர்கள். கல்கேரி, அமெரிக்கா போன்ற இடங்களுக்கு வாகனம் ஓட்டத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 647.766.7195

## CASHIER NEEDED

Downtown இல் உள்ள convenience store ஒன்றிற்கு Cashier தேவை. ஆண் விரும்பத்தக்கது. 10:00pm - 7:00am. Part-time or full-time.
தொடர்புகளுக்கு: 416.531.5675

## GENERAL HELPER

முழுநேர அல்லது பகுதிநேர வேலைக்கு ஆட்கள் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது. Full-time or Part-time
தொடர்புகளுக்கு: 416.717.4430

## JOB JOB JOB

**KENNEDY & EGLINTON**

***Metro Appliance*** இல் பகுதி நேர வேலைக்கு பெண் ஒருவர் தேவை. ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416.298.4800

## JOB JOB JOB

Stairs நிறுவனம் ஒன்றிற்கு helper ஒருவர் தேவை. ஆசாரி வேலை தெரிந்தவராக இருக்க வேண்டும். Monday - Saturday 8:00am to 5:00pm.
தொடர்புகளுக்கு: 416.830.3932

மேலும் பக்கங்கள் 26, 27

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## SPACE FOR LEASE OR SALE

***FINCH & MIDDLEFIELD***

295 Sq.ft. Space for lease or sale. Corner unit. Suitable for Doctor office, Tuition, Travels.
Contact: ***416.609.2542***

## CAR WANTED

***Toyota Camry - Sienna***
***1997 - 2002. Any KM / Condition***
***Contact: 647.448.2569***

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**
**Pay top dollars.**
**Contact: 416.835.3475**



## FOR SALE



***Stroke*** வந்தவர்களுக்கும், ***Car Accident*** பட்டவர்களுக்கும் மிகவும் உகந்த ***Exercise Machine*** விற்பனைக்கு உண்டு.
இத்துடன் ***Wheele Chair*** ஒன்றும் விற்பனைக்கு உண்டு. விலை $2500.
தொடர்புகளுக்கு: 416.995.3938

# மகாஜனன்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

அபிராமி நடனக்கல்லூரி மாணவர்களது Fusion நடனமான 'அகிலத்து ஆணிவேர்' இடம்பெற்றது. அகிலத்திலுள்ள எல்லா சமூகங்களிலும் 'அம்மா' தான் ஆணிவேர் ஆக இருக்கின்றா என்பதை செந்தில்செல்வி கனேடிய பூர்வீக குடிகள், ஆங்கிலேயர், சீனர் மற்றும் தமிழர் ஆகிய நான்கு



சமூகத்தை சேர்ந்த தாயும் பிள்ளையையும் வைத்து நடித்து காட்டினார். ஒவ்வொரு நிகழ்விலும் புதிய தயாரிப்புக்களை உருவாக்கும் மகாஜனாவின் பழைய மாணவியான செந்தில்செல்வி இம்முறையும் நல்ல ஒரு நிகழ்வை தனது 37 மாணவிகளுடன் மேடையேற்றி மகாஜனன்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்துள்ளார்.

செல்வன் மதுனன் சிறீதரன் மகாஜனாவின் விருதை பெறும் செல்வன் அபிகுமரன் உத்தமகுமரனை அறிமுகம் செய்தார். மகாஜனாக் கல்லூரி பழையமாணவரான கலைமதி உத்தமகுமரன் மற்றும் சிவசுப்பிரமணியம் உத்தமகுமரனின் மகனான செல்வன் அபி தனது 17 வயதில் (2011இல்) புற்றுநோய்க்கு மருந்து கண்டறியும் ஒருமுறையை அறிமுகப் படுத்தியதற்காக மொன்றியல் கல்விச்சபையின் கௌரவ கலாநிதிப்பட்டம் பெற்றவர். அபிகுமரன் தனது விளக்க உரையில் புற்றுநோய் கலங்களை அழிக்காமல் அதை குணப்படுத்தும் முறையை விபரித்தார். புற்றுநோயை விரைவில் கண்டுபிடித்தால் குணப்படுத்துவது எளிது என்றும் எல்லோரும் மருத்துவ பரிசோதனைகளை தவறாது தகுந்த நேரங்களில் செய்ய வேண்டும் என்றும் கூறினார். எங்களது வாழ்வு எங்களது கைகளில் தான் உள்ளது என்றார்.

Dr. சிவகணேசானந்தன் ஆறுமுகம் அபிகுமரனிற்கு உரியவிருதை அளித்து உரையாற்றுகையில் தான் அபிகுமரனின் ஆய்வுகளை எவ்வாறு அறிந்து கொண்டார் என்று கூறினார். அபிகுமரன் இயந்திர மனிதனை நடனமாட வைத்த நிகழ்வு ஒன்றையும் பற்றி விபரித்தார்.

இடைவேளையின் பின்னர் மகாஜனாக் கல்லூரி மாணவர் சங்கம் நடத்திய கணிதம் மற்றும் பொது அறிவு போட்டிகளுக்கான பரிசளிப்பு நடைபெற்றது. இதில் முதல் மூன்று இடங்களுக்கும் வந்த முதலாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து பரிசும் சான்றிதழும் வழங்கப்பட்டன. இப்பரிசளிப்பு வைபவத்தின் இடையே திரு. ஜெகநாதன் குமாரசாமி பரிசளிப்பு உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் திரு. V. நந்தீஸ்வரனால் ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஆறு ஆண்டுகளாக நடத்தப்படும் இப்போட்டிகள், தற்போது ரொறொன்ரோ, மொன்றியல், கொழும்பு மற்றும் தெல்லிப்பளை ஆகிய நான்கு இடங்களிலும் நடைபெறுகின்றன என்றார். ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இப்பொழுது இப்போட்டிகளில் பங்குபற்றுகிறார்கள் என்றார்.

மார்ச் மாதத்தில் நடைபெறும் இப்பரீட்சைக்கான ஆயத்தங்கள் 20 க்கு மேற்பட்ட தொண்டர்களால் ஆறு மாதங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்படும் என்றார். ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்களை கொண்ட இத்தொண்டர் களால் உருவாக்கப்படும் வினாத்தாள்கள் பரீட்சைக்குழுவின் முழு ஆதரவை பெற்ற பின்னரே அச்சடிக்கப்படும் என்றார். இத்தொண்டர்கள் பரீட்சை முடிவடைந்த பின்னரும் விடைத்தாள்கள் திருத்துவது மற்றும் பரீட்சை பெறுபேறுகள் பற்றி விசாரிக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்குவது போன்றவற்றையும் செய்கிறார்கள். இப்பரீட்சைக்கு அறவிடப்படும் கட்டணம் இச்செலவுகளின் ஒரு சிறுபகுதியையே பூர்த்தி செய்ய உதவும் என்றார்.

இம்முறை பரிசு பெறும் மாணவர்களை பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட புகைப்படப்பிடிப்பாளர் ஒருவர் மட்டுமே படம் எடுத்து நிகழ்ச்சியின் முடிவில் அவர்களுக்கு அப்படம் இலவசமாக வழங்கியது ஒரு சிறப்பு அம்சமாகும். இதனால் பரிசுபெறும் மாணவர்களது பெற்றோர் மேடையின் முன்னால் மறைத்து நிற்பது தவிர்க்கப்பட்டது. 79 மாணவர்களை (ஒரு சிலர் வரவில்லை) மேடைக்கு அழைத்து பரிசுவழங்கி, படம் எடுத்து 70 நிமிடங்களில் நிறைவுற செய்ததற்கு (பரிசளிப்பு உரை உட்பட) பரிசு பெறும் மாணவர்களை பெயர்



பட்டி வழங்கி முன் கூட்டியே ஒழுங்காக அமரச் செய்து அவர்களை ஒழுங்காக வழி நடத்திய தொண்டர்களது முயற்சியே காரணம் என்றால் மிகையாகாது. இதேபோல் பரிசு வழங்குபவர்களையும் முன்கூட்டியே மேடையில் அழைத்து வைத்திருந்தால் இந்நிகழ்வில் இன்னும் சில நிமிடங்களை குறைத்திருக்கலாம்.

பரிசளிப்பு விழாவை தொடர்ந்து திரு. ஞான-சரவணபவன் கந்தையாவின் நன்றியுரை நடைபெற்றது. நன்றியுரையை தொடர்ந்து இசைக் கலைமணி திரு. வர்ண ராமேஸ்வரனின் நெறியாள்கையில் 'பல்லியம்' நிகழ்வு நடைபெற்றது. 'பல்லியம்' நிகழ்வு திரு. பொ. கனகசபாபதி அவர்கள் மகாஜனாக்கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டு அகில இலங்கையில் தங்கப்பதக்கம் பெற்ற நிகழ்வு ஆகும். இதில் வயலின், வீணை, மிருதங்கம், தவில், கடம், மோர்சிங் மற்றும் Key board போன்ற பல்லிசைகளின் சங்கமம் நடைபெற்றது. 'மகாஜனன் விருது 2013' சரியாக 10:00 மணிக்கு நிறைவுபெற்றது.

# கிளிமஞ்சாரோ...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

வாங்கிக் கொண்டு விடுதிக்குத் திரும்பினேன். திரு. டெஸ்மன் பலவிதமாக முயன்றும் Skype ஐ இயங்க வைக்க முடியவில்லை. அவரது காரி யாலயக் கணினியில் எனது பிள்ளைகளுக்கு 'நான் ஆரோக்கியமாய் இருக்கிறேன்' என்ற செய்தியை மட்டும் அறிவித்தேன். எனது பொதிகள் வராததையோ மருந்துகள் வரவில்லை




என்பதையோ அறிவிக்கவில்லை. கனடாவுக்கும் தன்சானியாவிற்கும் ஏழு மணித்தியால வித்தியாசம். எனவே எட்டு மணிக்கு கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடனும், கீதவாணியுடனும் செவ்வி செய்வதாக உடன்பாடு செய்ததை நினைவில் கொண்டு போனால் போகட்டும் என்று எனது கைத்தொலைபேசியில் CTBC யுடன் இணைப்பை ஏற்படுத்தி இளையபாரதி அவர்களுடன் கதைத்தேன். ஓரிரு நிமிடங்களில் தொடர்பு நின்றுவிட்டது.

மீண்டும் அழைத்தபோது தெளிவாக இருக்கவில்லை. அவ்வேளை நண்பர் இளையபாரதி மனமுவந்து கூட்டுத்தாபனத்திலிருந்து லாண்ட் லைனில் நான் இருந்த ஓட்டல் தொலைபேசிக்கு அழைத்த பரோபகாரத்தை மறக்க முடியாது. எனினும் லாண்ட் லைன்கூட சில நிமிடங்களில் தடைப்பட்டு விட்டது. அதுவே செவ்வியின் முடிவுமாகியது. 8:30 மணிக்கு எனது பொதிகள் வந்துள்ளதா என விசாரித்த வேளை விமானம் தரை இறங்கவில்லை எனவும் அதில் நிச்சயம் பொதிகள் வரும் எனவும் அறிவித்தார்கள். மேலும் அடுத்து நாள் மலை ஏற வேண்டுமாகையால் சென்று ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறும் பொதிகள் வந்தவுடன் அறைக்கு அனுப்புவதாகவும் சொன்னார்கள் முகட்டைப் பார்த்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்த நான் அடம்பிடித்து படுத்த குழந்தை தன்னை அறியாது

துயில்வதுபோல் துயின்று விட்டேன்.

மிகுதி அடுத்த வாரம் தொடரும்...

அனைத்துலக தமிழ் வானொலி
GLOBAL TAMIL RADIO
* செய்திகள்
* போட்டிகள்
* பாடல்கள்
* தகவல்கள்
24 மணி நேர தமிழ் ஒலிபரப்பு
416-264-4283 / 416-264-3666
"மண்ணையும் மணங்களையும் நேசிக்கலாம்"
www.gtr24.com

# நினைவுகள் - வாலி

பதினைந்தாயிரம் பாடல்கள் மூலம் தன் திரை வாழ்க்கையின் முதல் நாள் தொடங்கி கடைசி கணம் வரை தமிழர்களை தன் வரி களால் வசீகரித்த பாடலாசிரியர் வாலி. எம்.ஜி.ஆர்., சிவாஜி தலைமுறை தொடங்கி, ரஜினி - கமல் தலைமுறையில் தொடர்ந்து



- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -

இன்று புதிதாய் அறிமுகமாகும் கதாநாயகர் களுக்கும் பாடல்கள் எழுதுமளவுக்கு, அனைத்துத் தலைமுறை யினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு படைப்பாளி, தமிழ் சினி-மாவின் இணையற்ற பாடலாசிரியர்களில் ஒருவர்!

வாலியின் இயற்பெயர் ரங்கராஜன். திருச்சி அருகேயுள்ள ஸ்ரீரங்கத்தில் 1931ஆம் ஆண்டு பிறந்தவர். சிறு வயதிலேயே தமிழ் மேல் தீராத பற்று கொண்டிருந்த வாலிக்கு ஓவியத்திலும் ஆர்வம் மிகுந்திருந்தது. நன்றாகப் படம் வரையும் திறமையும் இருந்தது. அந்தக் காலகட்டத்தில் பிர-பலமாக இருந்த 'ஆனந்த விகடன்' இதழில் ஓவியங்களை வரைந்து கொண்டிருந்த மாலி-யைப் போல தானும் ஒரு ஓவியராக வேண்டும் என்ற லட்சியத்துடன் இருந்திருக்கிறார். அவருடைய பள்ளித் தோழன் பாபு, 'மாலியைப் போல சிறந்த சித்திரக்காரனாக வரவேண்டும் என்றால், முதலில் உன் பெயரை வாலி என்று வைத்துக்கொள்' என்றுகூறி புனைப்பெயரைச் சூட்டினார்.

ஆரம்பத்தில் அகில இந்திய வானொலியில் நிலையக் கலைஞராக பணியாற்றினார் வாலி. பின்னர், 1958இல் சினிமா பாடலாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். அவ்வருடம் 'அழகர் மலைக்கள்ளன்' என்ற படத்தில் தனது முதல் பாடலை எழுதி தனது சினிமா வாழ்க்கையைத் தொடங்கிய வாலியை 2013இல் அவருடைய 82ஆவது வயதில் மரணம்தான் நிறுத்தியிருக்கிறது. வாலியின் கடைசிப் பாடல், இயக்குனர் வசந்தபாலன் இயக்கத்தில் தயாராகும் படத்தில், ஏ.ஆர். ரஹ்மான் இசையமைப்பில் அவர் எழுதிய பாடல்தான். இந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளில் காதல், தத்துவம், மகிழ்ச்சி, துன்பம், அரசியல், எழுச்சி என எல்லாம் தொட்டுத் தொடர்ந்து வந்தவர் வாலி. பதினை ந்தாயிரம் பாடல்களில் விதவிதமான ரசரசமான வரிகளை காற்றில் உலவ விட்டவர். வாலியின் திரையுலக வாழ்க்கை தொடர்ந்து ஏறுமுகமாகவே இருந்திருக்கிறது. எங்கேயும் இறக்கமோ இடைவெளிகளோ இல்லை. இத்தனைக்கும் வாலி பாடல் எழுத வந்த காலம் கவிஞர் கண்ணதாசன் தமிழ் திரையுலகில் கோலோச்சிக் கொண்டிருந்த காலக்கட்டம். கண்ணதாசன் என்ற புயலுக்கு மத்தியிலும் தனது தனித் திறமையால் தமிழ் திரையுலகில் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்துக்கொண்டார். பின்னர் வந்த வைரமுத்து என்னும் புயலையும் தாக்கு பிடித்து நின்றார்.

வாலி, எம்.ஜி.ஆருக்காக எழுதிய பாடல்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. எம்.ஜி. ஆருக்காக 'நல்லவன் வாழ்வான்' படத்தில் தான் முதல்முதலாக பாடல் எழுதினார் வாலி. பின்னர், எம்.ஜி.ஆரின் தர்பாரில் ஆஸ்தான கவிஞராக கடைசி வரை இருந்தார். எம்.ஜி.ஆரின் அரசியல் வெற்றியில் இவரது வரிகளுக்கும், அதனைத் தமிழர்கள் வாழும் இடமெங்கும் காற்றில் பரவச் செய்த டி.எம்.எஸ். குரலுக்கும், அழுத்தமான பங்கு உள்ளது. 'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்...', 'மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்...', 'புதிய வானம்... புதிய பூமி...', 'நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே...', 'ஏமாற்றாதே ஏமாறாதே...', 'கண் போன போக்கிலே கால் போகலாமா...', 'நான் காற்று வாங்க போனேன் ஒரு கவிதை வாங்கி வந்தேன்...', 'வெள்ளிக் கிண்ணம்தான் தங்க கைக-ளில்...', 'நான் ஒரு குழந்தை நீ ஒரு குழந்தை...', 'நான் உன்னை வாழ்த்தி பாடுகிறேன்..' எனச் சொல்லிக்கொண்டே போகலாம். எம்.ஜி.ஆரை மீனவ நண்பனாக்கியது, மீனவர்களின் துயரத்தை

தொடர்ச்சி 39ஆம் பக்கம்



# சரியான கேள்விக்கே சரியான பதில்

எனக்குத் தெரியவர வேண்டிய தகவல்களை நான் அறிந்திட சரியான கேள்விகளை நான் கேட்க வேண்டும் என்பது எனக்கு விளங்கியபடியால் நம்பிக்கையின் சக்தியை உணர்ந்து அதை இப்போ நான் வெளிப்படுத்துகிறேன்.

தவறான கேள்விகளை நீ கேட்டால் உனக்குத் தெரியவர வேண்டிய தகவல்கள் உனக்குக் கிடைக்காது. முக்கியமாக எங்கள் உறவுகளில் தான் இந்த வாக்கியம் முற்றிலும் உண்மையாகின்றது. 'ஏன் அவனோ /அவளோ /அதையோ/இதையோ செய்யவில்லை' எனக் கேட்பதை விட 'இப்போ நான் என்ன செய்ய வேண்டும்' எனக் கேட்பது சிலாக்கியமல்லவா?

ஆண்களின் சக்தி மனதைக் குறிக்கின்றது. ஆண்களே! உங்களின் சிந்தனைகளை நம்புகிறீர்களா? உங்கள் எண்ணங்கள் ஒரு தெய்வீக மூலத்திலிருந்துதான் உங்களுக்குக் கிடைக்கின்றன என நினைக்கிறீர்களா? ஒரு சிந்தனை உங்களுக்குத் தோன்றிய வுடன் அதைச் செயல்வடிவமைத்துப் பூர்த்தியாக்க அத்தியாவசியமான சகலதும் உனக்குத் தரப்படுகின்றது என்ற



உண்மை உனக்குத் தெரியுமா? உனக்குத் தேவையானவற்றை நீ கேட்டுப் பெற்றுக்கொள்ளப் பயப்படுகிறாயா? உனக்குள் குடிகொண்டிருக்கும் தெய்வீகத்தை உன்னால் நம்பமுடியாதா? பெண்களின் சக்தி இதயத்தில் தங்கியுள்ளது. பெண்களே! ஒரு தகுதிவாய்ந்த அன்பான ஆசிரியையாக நீ இருப்பாய் என நம்புகிறாயா? உனது வாழ்வினுள் வரும் ஒவ்வொருவரும் உனது மாணவ - மாணவிகள் என்பது உனக்குப் புரிகின்றதா? உனது மாணவர்களுக்கு நீ கற்பிக்கையில் பழக்க வேண்டிய பாடங்களை நீயும் படித்துக் கொள்கிறாய் என்பது உனக்கு விளங்குகிறதா? நீ அழகு மிக்கவள் என்பது உனக்குத் தெரியுமா? அழகு எனும் தெய்வீகம் உன்னிடம் இருக்கிறது என்பது உனக்கு புரிகிறதா? இத்தகைய தெய்வீகத்துடன் திகழும் உன்னை நீ நம்புகிறாயா? இக்கேள்விகளுக்கு நாம் பதில் அளிக்காவிடில் அழியாச் செல்வங்களான: நேசமுள்ள குடும்பங்கள், வளர்ச்சியுறும் சமுதாயங்கள், அமைதி நிறை உலகம் என்பவை எமக்கு எட்டாது போய்விடும். எமது விசுவாசமே நாம் இக்கேள்விகளை எம்மிடமே கேட்கத் தூண்டுகின்றது. இக்கேள்விகளின் பதிலைத் தெரிந்து அவற்றைச் செயல்படுத்தும் திறமை எமது நம்பிக்கையில் தான் தங்கியிருக்கின்றது. உனது உறவுகளிலும் வாழ்க்கையிலும் நீ சாதிக்க வேண்டியவற்றிலும் உனது இலட்சியத்திலும் தவறான கருத்துக்களையே இன்றுவரை நீ வைத்திருக்கலாம். உன்னிடமே நீ கேட்கத் தவறி விட்ட சில முக்கியமான கேள்விகளைப் பற்றிக் கவனமெடுத்துச் சிந்தித்து இன்று ஆலோசனை செய்!

**எனது வாழ்க்கைக் குறிக்கோள் பற்றியும் என்னைப் பற்றியும் கேட்கப்படவேண்டிய சரியான கேள்விகளை இன்று நானே என்னிடம் கேட்கப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 224

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214 416.907.6897



லலிதா புருடி

# அற்புதங்களில் அற்புதம்

## Miracle of Miracles

பிரேம் றாவத் அவர்கள் மிகப் பழைமை-வாய்ந்த செய்தியொன்றுடன் உலகெங்கும் பிரயாணம் செய்து வருகின்றார். 'உன்னையே நீ அறிந்துகொள்' என அவர் கூறுகின்றார். இது மிக முக்கியமானது. மிகமிக முக்கியமானது. மகராஜி என்னும் கௌரவப் பெயரால் பல்லாயிரக் கணக்கான மக்களால் அறியப்பட்டிருக்கும் பிரேம் றாவத் அவர்கள் தனது பார்வையாளர்களிடம் அடிக்கடி சோக்கிரறீஸ் அவர்களின் 'உன்னையே நீ அறியவாய்' என்னும் பிரபல்யம் பெற்ற அறிவுரையை

**Words of Peace**

மகராஜி பற்றி மேலும் அறிந்து கொள்ள:
416.431.5000
www.wopg.org / www.tprf.org

ஞாபகப்படுத்துவதுண்டு.

'சோக்கிரறீஸ் என்ன கூறினார்?. என அவர் கேட்கின்றார். 'உன்னையே நீ அறிவாய்' மக்கள் என்ன செய்ய விரும்புகின்றார்கள்? அதைப் பற்றி விவாதிக்கின்றார்கள். உண்மையாகவே அவர் எதைக் கருதினார்? இதை மேலோட்டமாகப் பாருங்கள். 'தம்மை அறிந்துகொள்ளுதல்'. ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு அது எப்படி? இதற்கு அருகில் வாருங்கள். நீங்கள் யார்? உங்கள் தேவையை உணர்ந்துகொள்ளுங்கள்-உங்கள் தேவை.

சோக்கிரறீசும் வேறு பலுரும் எதைப் பற்றிப் பேசினார்களோ - ஏற்கெனவே எம்முள்ளே உள்ள அந்த எளிமை, அந்த அழகு பற்றித்தான் தானும் பேசுவதாக பிரேம் றாவத் கூறுகின்றார். அது வெறுமனே பேணிப் பராமரிக்கப்பட வேண்டியதொன்றுதான்.

'மரம் ஒன்று பழங்களை வழங்குவதற்கான ஆற்றலைக் கொண்டதுதான்.' என அவர் கூறுகின்றர். ஆனால் அம்மரம் பராமரிக்கப்பட வேண்டும். அதேபோலத்தான் இந்தப் பூமியின் கண் உள்ள மனிதர்களாக-ிய நாங்களும், அந்தச் சாத்தியத்தைக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அது பராமரிக்கப்பட வேண்டும். நாம் யாரோ அந்த எளிமைக்குத் திரும்பிச் செல்வதற்கு என்ன நடைபெறவேண்டும்?. அது உண்மையிலேயே நாம் யார்? என்ற ஒரு சுவாரஸ்யமான கேள்வியைத் தோற்றுவிக்கின்றது.

தமது தேவைகளை புரிந்து கொள்வதை நோக்கிய, தாம் யார் என்பதை அறிந்துகொள்வதை நோக்கிய இப்பயணத்தை ஒரு மனிதன் எங்கிருந்து ஆரம்பிக்க முடியும்? பிறேம் ராவத் அவர்கள் தெளிவான மிகமிகத் தெளிவான ஒரு இடத்தைக் காண்பிக்கின்றார். உண்மையிலேயே இது மிக இலகுவில் புறக்கணிக்கப்படுகின்றது. 'தற்பொழுது என அழைக்கப்படும் இத்தருணத்தை பாருங்கள்' என அவர் கூறுகின்றார்.

தற்பொழுது என்பது இந்த உலகின் கண் உள்ள மிக அழகான இடமாகும் என அவர் கூறுகின்றார். அது மிக வசீகரமானது. அது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனெனில் அவ்விடத்தில்தான் நீங்கள் வாழ்கின்றீர்கள்.

நான் விதிகளை உருவாக்கவில்லை, ஆனால் நான் விதிகளைப் பின்பற்றுகின்றேன். கடந்தகாலத்தை நோக்கிச் சிறிதளவு செல்வதற்குக்கூட என்னால் எதுவுமே செய்ய முடியாது. அத்துடன் எதிர்காலத்தினுள் சிறிதளவு செல்வதற்காகவும் என்னால் எதையுமே செய்ய முடியாது. தற்பொழுதில் தான் நான் வாழ்கின்றேன். ஏனெனில் இக்கணத்தில் தான் உயிர்வாழ்வு நடைபெறுகின்றது.

தற்பொழுது என அழைக்கப்படும் இக்கணத்தில் உயிர்வாழ்வதைப் பற்றிய சிந்தனை - உயிர் வாழ்வைப் பற்றிய விழிப்புணர்வுடன் இருப்பதாகும். உள்ளுணர்வுடன் இருத்தல்- அனேக மக்களுக்கு பெரும் சவாலாக உள்ளது. ஏனெனில் அது மிக இலகுவானதாக இருப்பதுதான் என திரு. றாவத் அவர்கள் கூறுகின்றார்கள்.

உண்மையிலேயே நீங்கள் தற்பொழுதில் தான் உயிர்வாழ்கின்றீர்கள் என அவர் கூறுகின்றார். எங்கே நீங்கள் உயிர்வாழப்போகின்றீர்கள்? தற்பொழுது என்பதை அறிந்துகொள்வது அனேக மக்களுக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது. அதைப்பற்றி அவர்கள் எதையும் அறிந்திருக்கவில்லை. அதன் வரைவிலக்கணம் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம், ஆனால் அது என்ன என்று அவர்களுக்கு எவ்வித எண்ணக்கருத்தும் இல்லை.

மக்கள் பரவசப்படுகின்ற எதிர்காலமானது உண்மையிலேயே தற்பொழுது என அழைக்கப்படும் இக்கணமாகத்தான் தோன்றப்போகின்றது என அவர் கூறுகின்றார். 'உங்களுக்கு அது தெரியுமா?' என கேட்கின்றார். தற்பொழுது என்னும் இக்கணத்தில் உள்ள உங்கள் அறியாமைதான் உங்கள் எதிர்காலத்தை பாதிப்படையச்செய்யப்போகின்றது. எனது நாளைக்கான விதையை நான் இன்று விதைக்கின்றேன். 'இன்று உயிருடன் இருப்பதில் உங்கள் கவனத்தைச் செலுத்தினீர்களா? இது ஒரு எளிமையான கேள்வி'?

மக்கள் சரியான இடத்தில் தேடினால் அவர்களுக்குத் தாம் யார் என்பதை அறிந்துகொள்வது மிகவும் எளிமையான-தான இருக்கும் என அவர் கூறுகின்றார்.

'உங்களுக்கு இக்கணத்தைக் காண வேண்டும் என்றால்' உங்களுக்கு நீங்கள் யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்றால், உங்கள் சாத்தியத்தை நீங்கள் தெரிந்திருக்க விரும்பினால் நீங்கள் இந்த அடிப்படைத் தத்துவங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உங்களை நீங்கள் அறிந்துகொள்ள விரும்பினால், அதன் ஆற்றலை, உங்களின் அந்த உண்மை நிலையை அறிய விரும்பினால் நீங்கள் ஒரு விடயத்தைத்தான் செய்யவேண்டியிருக்கும். உங்களுக்கு அருகில் வருவதுதான் அது.

# புற்றுநோய்க்கு மருந்து

ஓகஸ்ட் 5 ஆம் திகதி மகாஜனாவின் பரிசளிப்பு விழாவில் 19 வயது அபிகுமரன் உத்தமகுமரன் என்பவர் தனது ஆராய்ச்சி பற்றியும், புற்றுநோய் பற்றிய அவரது கண்டுபிடிப்பு பற்றியும் ஒரு விளக்கவுரை செய்தார். மூன்று வயதில் அபிக்கு மருத்துவ துறையில் வந்த ஆர்வம் இப்போது புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் அளவு முன்னேறியுள்ளது.

முதலில் புற்றுநோயின் வரலாற்றுடன் தனது பேச்சை தொடங்கினார். எகிப்தில் முற்காலத்திலேயே அவர்கள் கண்களில் வரும் புற்றுநோயை குணப்படுத்தும் முறையை கண்டுபிடித்தார்கள். இதற்கு முன்னர் இந்து சமய வேதங்களில் புற்றுநோயைபற்றியும், அதை குணப்படுத்தும் முறைகளை பற்றியும் கூறப்பட்டுள்ளன. வேதவியாசர் அதர்வ வேதத்திலும் இதுபற்றி எழுதியுள்ளார் என்றார்.

இதன் பின்னர், அபிகுமரன் மனிதரின் வரலாற்றைப் பற்றி கூறினார். 4000 அல்லது 5000 வருடங்களுக்கு முன்னர் மனிதர் 400-500 வருடங்கள் வரை வாழக்கூடியவர்களாக இருந்தார்கள் என்று கூறினார். ஆனால் 2000 வருடங்களுக்கு முன்னர் இதை நாங்கள் எமது Evolution னால் இழந்து விட்டோம் என்றார். அடுத்து உடம்பிலிருக்கும் புற்றுநோய் கலங்களை பற்றி கூறினார். அவரது ஆராய்ச்சியையும் பற்றி விளக்கினார்.

புற்றுநோய் கலங்கள் நன்மையானவையா? தீமையானவையா? என்று அபிகுமரன் கேட்டு விட்டு, இதை விளக்கினார். இப்பொழுது அனைவரும் புற்றுநோய் கலம் தீமை என்றும் அதை அழிக்க வேண்டும் என்றும் நினைக்கிறோம். ஆனால் அவரது யோசனை என்ன என்றால், அது குழப்படி செய்யும் குழந்தை போலவும் அதை அழிக்காமல் தீய பழக்கத்தை திருத்த வேண்டும் என்றும் நினைக்க வேண்டும் என்றார். அத்தோடு, இப்பொழுது நாங்கள் புற்றுநோய் வருவதற்கு கலத்தின் கரு தான் காரணம் என்று நினைத்து, அதை கதிர் வீச்சினால் (Radiation) அழிக்கிறோம். அவரோ கலத்தின் வெளி Membrane தான் புற்றுநோய்க்குக்காரணம் என்றும், அது மற்ற கலத்துடன் ஒட்டும்போது நோயை பரப்புவதாகவும் கருதினார்.

இதை வைத்து ஆராய்ச்சி செய்தபோதுதான் அவர் உடலில் ஒரு வகை புரதம் மறைந்து இருந்ததையும், அதைத்தேடி எடுக்கும் முறையையும் கண்டு கொண்டார். அதன் பின்னர் அந்த புரதத்தை திருப்பி உடலில் செலுத்திய போது ஒரு அதிசயத்தை கண்டார். அதை உடலில் செலுத்தி 48 மணி நேரத்தில், கலங்களில் புற்றுநோயை குணப்படுத்துவது உறுதி செய்யப்பட்டது. இப்புரதம் செலுத்தப்பட்டவரை இளமையாக்கத் தொடங்கியது. அதாவது உடலின் சுருக்கங்களை எடுத்து வாழ்க்கையை நீடிக்கிறது என்றார்.

இதனால் அபிகுமரன் புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் முறையுடன் மனிதர் நீண்டகாலம் வாழும் முறையையும் கண்டுபிடித்தார் எனலாம். இம்முறையில் வரும் பக்க விளைவுகள் என்ன என்றும் கூறினார். புற்று நோயை மாற்றுவதற்கு அதிகமாக சிறுநீர் கழிக்க வேண்டிய தேவை ஏற்படுவதாகவும், புரதம் உடம்பில் வந்ததால் ஓரிரு நாட்களுக்கு களைப்பும் இருப்பதாகவும், நீண்ட வாழ்வும் ஏற்படுத்துவதாகவும் கூறினார்.

கடைசியாக புற்றுநோய் வரும் முறைகளையும் அதை எவ்வாறு தடுக்க முடியும் என்றும் கூறினார். TV, iPod, Computer யையோ அதிக நேரம் பார்க்கும் போது இரவு வேளைகளில் விழித்திருக்க வாய்ப்பு உண்டு. அப்படி பார்த்தால் அது கண்களிலிருக்கும் கலங்களை பாதிக்கலாம். இப்படி பாதிக்கப்பட்டால், சிலர் ஆறுதல் எடுக்கும் போது கலங்கள் தாங்களாகவே திருத்தப்பட்டு விடும். சிலருக்கு அது முடியாது. முடியாவிட்டால், இதனால் கண்களில் புற்றுநோய் வரக்கூடும் என்றார். இதேபோல் Cellphone பாவிக்கும் போது Cell tower இல் இருந்து வரும் கதிர்வீச்சினால் மூளையிலோ, கழுத்திலோ அல்லது இடுப்பில் இருக்கும் கலங்களுக்கோ பாதிப்பு வரலாம்.

அபி தனது பேச்சின் முடிவில், புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்தால்தான் குணப்படுத்துவது சுலபம் என்றார். இதனால் புற்றுநோய்க்கு பரிசோதனை எப்பொழுது நீங்கள் செய்ய வேண்டுமோ அப்பொழுது ஒழுங்காக செய்து மற்றும் சுகாதாரமாக வாழவும் வேண்டும் என்றார்.



அபி குமரன்



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# தலைவனின் உயர்வே இன்பத்தை நல்கும்

## சங்க இலக்கியத்தில் காதல் கோலங்கள்

தலைவனை மக்கள் வாழ்த்தின் அது தலைமகளுக்கும் பெருமை தருவதாகும். தலைவனை சிறப்புற வாழவேண்டும் என வாழ்த்துகின்றாள் தலைமகள். அவனது இன்பம்தான் தனது இன்பம் எனக்கொள்ளும் பண்பும் பெருமனதும் அவளிடம் உள்ளது. ஆனால் தலைமகனோ அவளுக்கு வஞ்சனை செய்துவிட்டு விலைமகளை நாடிச்செல்லும் பண்பற்ற செயலை குறைவாகக் காணாமல் அவன் இன்பமாக இருப்பதனையே கருத்திற் கொள்கின்றாள். இதனை ஓரம்போகியார் என்னும் சங்கப் புலவரின் வேட்கைப்பத்து மிகத்துல்லியமாக தெளியவைக்கின்றது.

வாழி ஆதன், வாழி அவினி!
நெல்பல பொலிக! பொன்பெரிது சிறக்க!
என்வேட் டோளே, யாயே, யாமே,
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்!
யாணர் ஊரன் வாழ்க!
பாணனும் வாழ்க! எனவேட் டேமே.

- வேட்கைப் பத்து 1. - ஓரம்போகியார்

(ஆதன்-அரசன், அவினி- குறுநில மன்னன், தலைவன்)

எனத் தலைவனை வாழ்த்தி அவனது நாடு பொலிவுறவேண்டும் என்பதனைக் கூறுவதனால் அவனது ஊர் சிறக்கவேண்டும் விருந்தினரை வரவேற்று உபசரிக்க நன்னிலத்தில் நன்செய் புன்செய் நிலத்துப் பயிர்கள் விளையவேண்டும். அதற்கு அறத்தொடு வாழ்ந்தால் அன்றோ மழை பெய்யும், மாதம் மும்மாரி பெய்து நாடு சிறக்கவேண்டும் அதன்வழி வயல் நன்கு விளைவு தரவேண்டும், இரப்போருக்கு ஈவதற்கு பொன், பொருள் சிறக்கவேண்டும் என அவள் விரும்பினாள். இங்கு அவள் உன்மீது அன்பும் காதலும் கொண்டவளாக இருந்தாள். உனது புற ஒழுக்கத்திற்குத் துணைபோன பாணனும் வாழ்க என்றும் விரும்பினள். அது மட்டுமன்றி காஞ்சிமலர் அழகாக மொட்டவிழ்க்கும் நறுமணங்கமழும் இயல்பும் சிறுமீன்களின் துர்நாற்றம் வீசும் நிலையையும் ஒருசேர சமமாக நோக்கினள். அதாவது அழகும் வனப்பும் பொருந்திய தலைவி, பரத்தையையும் தன்னோடு ஒப்பநோக்கினாள் என்பது புலவர் மறைமுகமாக தோழி தலைமகனுக்கு பரத்தையரை சிறுமீனுக்கும் தலைமகளை மலருக்கும் ஒப்பிட்டுக் காட்டி தலைமகளது பெருமையை உணர்த்துவதாக அமைகின்றது பாடல். தலைவனின் நலத்தையும் பெருமையையும் அன்றி அவள் வேறொன்றும் நினைத்திலள் என்று தன் தலைவிக்காகப் பரிந்து பேசுகின்றாள் தலைமகளின் தோழி. உள்ளுறை உவமம் தொக்க நிற்கின்றது. நறுமணம் கமழும் காஞ்சி மலர் எங்கே? புலால்நாற்றம் நிறைந்த சிறுமீன் எங்கே? நீ இதனை உணராது இருந்தனையே என்கின்றாளோ தோழி? அதுமட்டுமன்றி குலமகளையும் பொதுமகளையும் ஒப்ப நோக்கும் தன்மை அக்காலத் தமிழகத்தில் இருந்துள்ளது. தலைவனின் ஊர் புலாலும், மலரும் ஒருங்கே விளையும் இடமாகக் கொள்ளப்படுகின்றது.

இரண்டாவது பாடலிலும் தலைவி தலைவனை நினைந்து ஒழுகினாளே தவிர வேறொன்றும் அறியாள். ஊன் நலன் பெருகவே விரும்பினள் என்கின்றாள் தோழி:

வாழி யாதன் வாழி யவனி
விளைக வயலே வருக விரவலர்
எனவேட் டோளே யாயே யாமே
பல்லிதழ் நீலமொடு நெய்த னிகர்க்கும்

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

# Education

**Review Tutorials 13-15**

➢ **CHEMISTRY 11 & IB (stochiometry)**

A sample of crushed eggshell (2g), containing Calcium carbonate is mixed with 100 ml of 0.5mol/L HCl and then the excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH. Determine the mass percent of Calcium carbonate in egg shell.

➢ **CHEMISTRY 12**

(A) Explain how the emission spectrum of hydrogen is related to the energy levels in hydrogen.

(B) Compare 3rd ionization energies of magnesium and fluorine

➢ **Biology 12 & IB (macromolecules)**

Identify and name the following compound.




➢ **FUNCTIONS 11**

(A) Determine the inverse of each linear function

(i) $f(x) = \frac{x-7}{5}$ (ii) $g(x) = -\frac{2x}{3} + 2$

(B) Simplify the following and state any restrictions on the variables

(i) $\frac{x+3}{x^2-4x-21}$ (ii) $\frac{x^2-3x--10}{x^2-2x+15}$

➢ **ADVANCED FUNCTIONS 12**

Consider the function $f(x) = \frac{3}{4x-5}$,

(i) Determine the following key features of the function (i) domain (ii) range (iii) $x$ – intercept(s) (iv) y- intercept (s) (v) equation of the vertical asymptote: (vi) equation of the horizontal asymptote:

(ii) Sketch a graph of the function

**PHYSICS (12)**

Two cars A and B, move towards each other on a straight road same time from stations X and Y. The distance between X and Y is 500m. When the car A travel with a constant speed of 20m/s, then two cars crosses each other, 171 m from station X. When the speed of the car A is doubled, the two cars crosses each other 261m from station X. Determine the initial speed of car B ?

**Answer Key : 13-13**

**IB Biology**

(A)Memory T cells are one type T-cells which provide immunity against future infections. Following an infection, some of the activated T-cells become memory cells. These memory T-cells are in a state of identifying recurrent infection (same infection) and produce many cells to fight against infection

(B)The stroke volume (volume of blood in a single cardiac cycle) increases when the physical fitness increases. Therefore, with the lower heart rate (no cycles/ minute) heart can deliver the required amount of to tissues.

(C) During exercise body requires more supply of oxygen. This will lead to increases breathing rate and, heart rate and metabolism to speed up.

➢ **BIOLOGY(Gr12)** Hypothalamus controls the release of ADH (anti-diuretic hormone). ADH acting on the kidneys and increases the permeability of water in distal and collecting tubules in nephron. For example, high concentration of salts in the blood sodium signals the posterior lobe of the pituitary to release ADH. As a result more water will be reabsorbed. It leads to less urine is produced.

➢ **PHYSICS**

(A) (i) 1.1m/s² (ii) tension force acting on ropes are 130.5N and 108.5N. (iii) ? distance not given

(B) (i) 19.6 N (ii) 0.65m/s² (iii) 130.5N and 97.9N

➢ **CHEMISTRY 12 & IB**

$C_6H_6 + AlCl_3 \rightarrow C_6H_5CH_3 \rightarrow C_6H_5COOH$

$CH_3CH_2CH_2OH + H_2SO_4 \rightarrow CH_3CH(OH)CH_3 \rightarrow CH_3COCH_3$

$CH_3CHO \rightarrow CH_3CH_2OH \rightarrow CH_3COOCH_2CH_3$

$CH_3CHO \rightarrow CH_3COOH \rightarrow CH_3COOCH_2CH_3$

(ii) (a)$C_2H_5OH$ –weak base but nucleophilic $SN_1$ favour

$(CH_3)_2CH\text{-}OC_2H_5$ major; $CH_3CHCH_2$ minor

(b) $C_2H_5O^-$ Strong base $E_2$ predominates

$(CH_3)_2CH\text{-}OC_2H_5$ minor; $CH_3CH{=}CH_2$ major

➢ **MATH (GR 11 &12).**

$P(t) = -25t^2 + 250t - 400$

Solve for t when $P(t) = 0$; $-25(t-8)(t-2) = 0$

$t = 8$ or 2; least number of toy-cars that should be sold to breakeven is 20,000

*Answer key 13-14- next issue*

Contact: 647 341 3975
Dr. A.Sri Krishnaraj PhD
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

அதனால் நியூட்னின் முடிவுகளில் தோற்ற மாயங்களின் செல்வாக்கானது காணப்பட்டது. அதனாற்றான் புதன் கோளின் இயக்கம் நியூட்டனின் விதியை திருப்தியாக்கவில்லை. எனவே, பொருட்களின் இயக்கங்களின் உண்மையான இயல்புகளை அறிய வேண்டுமெனில், வளைந்த யுகிளிடியனல்லா நாற்பரிமாண வெளியின் கேத்திர கணிதத்தினை அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இதனையும் சிக்கலில்லாதவாறு பார்த்துக் கொள்வோம். வான்வெளியில் முப்பரிமாண வெளியில் பறக்கின்ற ஆகாய விமானம் ஒன்றின் நிழலைப் பார்ப்போம். நிழல் விழுகின்ற நிலம் கிடையான தரையாக இருந்து பின்னர் சரிவான மேட்டுப் பகுதியாக மாறுகின்றதும் என்போம். விமானத்தின் நிழல் செல்கிற பாதையை கவனித்தால் அது எவ்விதம் இருக்கும் என்பதனை நினைவுபடுத்திப் பாருங்கள். கிடையான தரையில் ஒரு நேர்கோடாகச் சென்ற நிழலின் பாதை மேட்டுப் பகுதிக்குள் வந்ததும் வளைவானது போலத் தோன்றும். ஆக, முப்பரிமாணத்து இயக்கத்தினை இருபரிமாணமான நிலத்தில் பார்க்கையில் அது வேறுபட்டுக் காணப்படுகின்றதல்லவா. அதுபோன்ற மாயத் தோற்றத்தினைத்தான் நியூட்டனும் கண்டார்.

# சார்பியல்...

## 25ஆம் பக்கத்தொடர்ச்சி

புலத்தினை

ஆர்முடுகலின் விளைவுகளால் பிரதிபண்ண, பல விடயங்கள் எளிமையாக்கப்பட்டதுடன் ஈர்ப்பின் தெளிவுத் தன்மையும் கூடியது. இரண்டு சட்டங்களை அயன்ஸ்ரைன் கருதினார். ஒன்று ஓய்வில் உள்ள ஈர்ப்புப்புலத்தினைக் கொண்ட சட்டம். மற்றயது, ஈர்ப்பில்லாத சீரான ஆர்முடுகலை கொண்ட சட்டம். இவ்விரண்டு புலங்களிலும் நியூட்டனின் விதிகள் ஒரேமாதிரியாகப் பயன்படுவனவாக இருந்ததை அயன்ஸ்ரைன் காட்டினார். விளைவாக, ஈர்ப்பு என்பதற்கு புதியதான கொள்கை ஒன்று பெறப்பட்டது. இயக்கங்கள் பற்றிய நியூட்டனின் பார்வை முப்பரிமாண யுகிளிடியன் வெளியினில் ஆக இருந்தது. அயன்ஸ்ரைனைப் பொறுத்தவரை, இயக்கங்கள் எல்லாம் உண்மையில் நாற்பரிமாண வெளியில்தான் நிகழ்கின்றன.




# அற்புதங்களில்...

## 32ஆம் பக்கத்தொடர்ச்சி

நாம்

எம்மைக் கண்டுகொள்ளாததற்கான காரணம் நாம் அதில் கவனத்தைச் செலுத்தாமையேயாகும். ஆகவே நீங்கள் யாரோ அதன் அருகில் வாருங்கள்.

ஒவ்வொருநாள் வாழ்விலும் நிறைவடைய, ஒவ்வொரு கணத்திலும் நிறைவடைய, மக்கள் தம் வாழ்வில் பெறும் திறமான பெறுமதிமிக்கதாக இருக்கலாம் என பிறேம் ராவத் கூறுகின்றார்.

அது ஒரு பாதுகாப்பு, அத்துடன் அதை நாம் உணரவேண்டும். நாம் உறுதியான ஒன்றை உணரவேண்டும்..

தன்னை அறிந்து கொள்வதானது அர்ப்பணிப்புக்களுடன் ஈடுபட்டதொன்றல்ல. அவர் மக்களிடம் அவர்கள் எதைச் செய்ய விரும்புகின்றார்களோ அதைச் செய்யும்படியும் அதில் வெற்றியடையும்படியும் கூறுகின்றார். ஆனால் உட்புறத்திலும் வெற்றியடையுங்கள். உங்களுக்கு எவ்வளவு மக்களை அறிய விருப்பமோ அறிந்து கொள்ளுங்கள், ஆனால் உங்களை அறிந்துகொள்ள மறந்து விடவேண்டாம் என அவர் கூறுகின்றார்.

உயிருடன் இருங்கள், நன்றியுடன் இருங்கள் : உங்கள் வாழ்வில் உள்ளுணர்வுடன் இருங்கள். உங்களுக்கு எது தரப்பட்டுள்ளதோ அதுபற்றி அறிந்திருங்கள். இதுதான் அற்புதங்களிலும் அற்புதமாகும்.

விளம்பரம் பத்திரிகையை
இணையத் தளத்தில்
வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- கைரேகை
- கல்வி, உத்தியோகம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- குடும்ப பிரச்சினைகள்
- குழந்தை பாக்கியம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- தொழில் வியாபாரம்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- சர்ப்ப தோஷம்
- கஸ்ட நஷ்டங்கள்

**Tel.:647.856.0559**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**

# சிக்கெனப் பிடியுங்கள் சிவனை

இறைவனை அறிதற்கும் அடைதற்கும் உணவுத்தூய்மை, உடல்தூய்மை, உள்ளத்தூய்மை, ஆலயவழிபாடு, ஆன்மீக ஈடுபாடு, உயிர் நேயம், தியானம் என்பன அவசியமாகும். அருளாளர்கள் தமது வாக்காலும் வாழ்வாலும் இறைவனை சிக்கெனப்பிடித்து மாறிலா மகிழ்ச்சியுள் திளைத்ததை தேடிக் கண்டு கொண்டேன். தேடி எங்கும் காண தேவனை என்னுளே தேடிக் கண்டு கொண்டேன் என்பதற்கேற்ப நடமாடும் கோயில்களாக நானிலத்தில் அவர்கள் மிளிர்ந்தனர். சாதாரண மக்களும் தமது செயற்திறனால் ஈசனை பூசனை புரிந்து, தேசினைப் பெற்று அருள் வாசனையுற்றனர். வேட்டுவக்குல கண்ணப்பன், வணிகர்குல காரைக்கால் அம்மையார் இறைவனது வலத்தில் நிற்கும் மாட்சியையும் இறைவனது திருவடிக்கீழ் நிலைத்திருக்கின்ற பேற்றினையும் பெற்றனர். கருவில் திருவுடைமையும், கருமத்தில் அன்பின் கசிவும் கலப்பும் இருந்தமையே இதற்கு காரணங்களாகும். இறைவனது கழலினைகளை கட்டிப்பிடித்து களிபேருவன கொண்டனர் நாயன்மார்கள். இதனை சம்பந்தப் பெருமான் பின்வருமாறு அருளியுள்ளார்.

வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினு முனகழல் விடுவேனல்லேன்
நாழிளந் தடம்புனல், தயங்கு சென்னிப்
போழின் மதி வைத்த புண்ணியனே
இதுவோ எமையாளுமா ஜீவதொன்றெமக்கில்லையே
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே!

விடுதலறியா விருப்பினால் இறைவனை கைவிடுதல் முடியாதுள்ளது என்று நாவரசர் நவின்துள்ளார். ஊனாகி, உயிராகி உட்கலந்து நிற்கும் உமைபங்கனை தானாகி வந்து ஆண்டு கொண்டருளிய தன்மையினால் அவனை அகன்று போய்விடாது அணைத்துக் கொள்ள வேண்டுமென்கின்றார் அப்பர் பெருமான்.

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி
நலஞ்சுடரே நால் வேதத்தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங்கடந்து நின்ற
சொலற்கரிய கழலாய் இதுவுண் தன்மை
நிற் நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலவாத புகழுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவேனல்லேன்
கனக மாமணி நிறத் தெம் கடவுளானே!

இறைவனது நினைப்பே மனதில் நிலைத்திருப்பதால் மற்றுப்பற்றின்றி மதிசூடிய பெருமானை மனதில் இருத்தியுள்ளேன் என்பதும் அதனால் பிறவிச் சுழலில் அகப்பட்டு அல்லல்பட வேண்டியதில்லை என்றும் சுந்தரத் தமிழில் பாடியுள்ளார் சுந்தரர்.



மட்டார் பூங்குழல் மலைமகள் கணவனைக்
கருதாதார் தம்மைக் கருதேன்
ஒட்டீராகிலும் ஒட்டுவன அடியேன்
உம்அடி அடைந்தவர்க் கடிமைப்
பட்டேனாகிலும் பாடுதலொழியேன்
பாடியும் நாடியும் அறிய
நட்டேனாதலால் நான் மறக்கில்லேன்
நாட்டியத் தான் குடி நம்பி.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பிரிந்து கோலம் காட்டி, ஞாலத்தில் நற்பேறளித்த இறைவனது சீலத்தை வியந்து அவனை சிக்கெனப்பிடித்து மாறிலா மகிழ்ச்சியுள் திளைத்தார் மணிவாசகர்.

பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய்
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!

பந்த பாசங்களுக்கு அப்பாற்பட்ட ஆண்டவனது திருவடிகளை பற்றினால் உலகப்பற்று தானே மறைந்துவிடும். ஆசைப்பிணிப்புகள் அகன்று விட பரமனின் பாதார விந்தங்களை இறுகப் பற்று என்ப வள்ளுவரது ஆணை.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு'. இறைவனை ஏத்திப் போற்றி வழிபடும் முறையை பின்வரும் திருவாசகத்தில் கூறியுள்ளார் மணிவாசகர். கருத்தொடு நினைந்துருகி விருப்புடன் தொழும் எனக்கு உனது திருஉருக் காட்டி அருள் அமுதினை அள்ளி வழங்குவாய் என்ற மணிவாசகரின் விண்ணப்பம் இது. சிவன் அருளாலே தான் அவன் தாள் வணங்க வீடு பேறு அடையவும் முடியும்.

மெய்தான் அரும்பி விதிர் விதிந்து
உன் விரையார் கழற்கு என்
கை தான் தலை வைத்து கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சய சய போற்றி யென்னும்
கை தான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே.



நா. க. சிவராமலிங்கம்

# தலைவனின்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

தண்டுறை யூரன் கேண்மை
வழிவழிச் சிறக்க வெனவேட் டேமே.
- வேட்கைப் பத்து -2 -ஓரம்போகியார்

தலைவியோ இல்லறம் மதித்து அதனையே தனது உள்ளத்தில் நினைந்து ஒழுகினாள். உனது அன்பு அவளிடத்தில் குறைந்துபோகும் தன்மையை அறிந்தும் அவள் உன்மீது அன்பு குறையாது அதிகரித்துச் சென்றது. வயல் நிலம் நன்கு விளையவேண்டும். உனது பெருமை குறைவடையாது உன்னோடு அல்லது உன்னை நாடி வருகின்ற விருந்தினருக்கு உணவு படைக்க வேண்டும். இரந்து வரும் புலவர் பெருமக்கட்கு பரிசில் பொருட்கள் வழங்கவேண்டும் என எண்ணினாள். அத்தோடு மிக அழகிய நறுமணம் கமழும் நீலோற்ப மலரோடு நெய்தல் மலரை சரிசமமாக நோக்கினாள் என்பது குலமகளோடு பொதுமகளைச் சரிசமமாக நோக்கி அவ்விடம் உறைகின்ற தன் தலைவனுக்கு நற்பெயர் கிட்டவேண்டும். அவனது பெருமைக்கு இடையூறு விளையக்கூடாது என விரும்பினாள் என்று உரைக்கின்றாள். எனக்கென்ன துன்பம் நேர்ந்தாலும் தனது துணைவனுக்கு அல்லது காதலனுக்கு எந்தவித இடையூறும் நேரக்கூடாது. அவன் இன்புற்றிருப்ப நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியாள் உன் தலைவி எனத் தோழி தலைவனுக்கு அவளின் உள்ளன்பையும், உணர்ச்சிகளைக் கூட உனக்காக அடக்கிக் கொள்கின்றாளே நீ அதனை உணரவில்லை, ஆனால் அவளை நான் நன்கு அறிவேன். என்னிடம் தனது குறைகள், உள்ளக் கிடைக்கைகளை அவள் பகிர்ந்துகொள்ளும் உயிர்தோழியல்லவா என்று உரை பகர்கின்றாள் தோழி!



- த. சிவபாலு -
B.Ed (Hons), M.A

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

'நான் கனடா வந்து ஒன்றரை வருசம் ஆகுது. கனடாவிலை நிரம்ப ஆக்களுக்கு உதவி செஞ்சிருக்கிறேன்..
அவங்க எல்லாரும் இப்ப சௌக்கியமாய் இருக்காங்க. எல்லாச் சமயத்தவங்களும் என்னட்டை வந்து போறாங்க. சில வெள்ளைக்காரருக்கும் கூட நான் அவங்கடை குத்தங்களுக்குப் பரிகாரம் செஞ்சிருக்கிறேன். இப்ப அவங்கெல்லாம் நிம்மதியாக இருக்கிறாங்க' சாத்திரியார் தன்னைப் பற்றிக் கூறினார்.

நான் ஒருத்தரோடை முகத்தைப்பாத்ததுமே வரப்போறதுகளைச் சொல்லிப் போடுவேன். அப்புறம் இந்த குறிப்புகளெல்லாமும் பாத்துச் சொல்லுவேன். ஆனா என்னோடை வழக்கம் என்னென்னாக்கா, வெத்தலையிலை மை இட்டு, எங்கப்பன் கருப்பண்ணா சாமியை வரவழைச்சு, உங்கடை விபரங்களை எல்லாம் பாத்து பிரச்சனைகளைத் தீர்ப்பதுதான். என்னோடை அப்பன் எனக்கு எல்லாத்தையும் சொல்லிடுவாரு. அப்புறமா, நான் பிரச்சனைகளைப் பாத்து அதுக்கான பரிகாரங்களைச் செஞ்சு வைப்பேன்.:

சிவா ஆர்வமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

'கனடாவிலை நிரம்ப ஆட்கள் இப்பிடிப் பரிகாரம் செஞ்சிருக்காங்க. பெரிய முதலாளிகளெல்லாம் கனக்க டாலருகள் செலவு செஞ்சு பரிகாரம் செஞ்சு, இப்ப நிம்மதியா இருக்காங்க.'

சொற் சிக்கல்கள் இல்லாது விளங்கக் கூடியதாகச் சாத்திரியார் கூறுவது சிவாவுக்கு திருப்தியாக இருந்தது.

'இப்ப எனக்கு என்ன மாதிரி' சிவா இழுக்க,

'சார் நம்மளுக்கும் வெத்தலையிலை மை போட்டுப் பாத்துச் சொல்லுவோம். என்னோடை அப்பன் கருப்பண்ணா சாமி அனுப்பியது போலத்தான் எனக்குத் தோனுது அப்பிடியே செஞ்சு பாத்திடுவோம், சார் 'தம்பி' சாத்திரியார் கூற,

சிவாவும் முடிவெடுக்க முடியாது இருப்பது போல இருந்துவிட்டுச் சரி எனச் சம்மதிப்பது போலத் தலையாட்டினான்.

பக்கவாட்டில் தலையைத் திருப்பிய சாத்திரியார், தனது மனைவியைப் பார்த்து 'அம்மா' என்று அழைக்க,

உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த அவரது மனைவி விபரத்தைப் புரிந்து கொண்டு மை பார்ப்பதற்கான ஒழுங்குகளைச் செய்தாள்.

சிவாவிற்கு முன்னால் ஒரு சிறிய ஸ்ரூலைக் கொண்டு வந்து வைத்தாள். இரண்டு மடக்குக் கதிரைகளை எடுத்து வந்து ஸ்டூலின் மறுபுறமாக நேராக்கி வைத்தாள். ஒன்று சரியாக சிவாவிற்கு நேரா இருந்தது.

அதில் வந்து சாத்திரியார் அமர்ந்து கொண்டார். மற்றையதை சற்றுப் பின்னாக, சாமியாரின் இடது புறமாகப் போட்டுக் கொண்டாள்.

ஸ்ரூல் இரண்டரை முழ நீளத்திலும் ஒரு முழ அகலத்திலும் முழங்கால் அளவு உயரத்திலும் இருந்தது.

**◊ கனி ◊**

சாத்திரியாருக்கும், சிவாவுக்கும் இடையில் இருந்த ஸ்ரூலில், சாமியாருக்கு வலது பக்கத்தில் ஒரு முக்கால் அடி விட்டமுடைய வெள்ளித் தட்டை வைத்தவள், அதில் ஒரு வாழைப்பழத்தை வைத்து, வாழைப்பழத்தில் மூன்று சாம்பிராணிக் குச்சிகளை (ஊதுபத்திகளை) குற்றி, அவற்றை ஒரு தீக்குச்சியால் நெருப்பாக்க, சாம்பிராணி வாசனை மெதுமெதுவாக வரத் தொடங்கியது

ஒரு வெற்றிலையைக் கொண்டு வந்து தட்டில் வைத்தவள், வெற்றிலையின் அருகில் ஒரு கற்பூரத் துண்டினையும் வைத்தாள்.
ஸ்ரூலில் ஒரு நெருப்புப் பெட்டியும் இருந்தது. பின்னர் ஒரு மைப் போத்தலையும் கொண்டு வந்து ஸ்ரூலில் வைத்துவிட்டு, சாத்திரியாரைப் பார்த்தாள்.

'சார், தட்சணை ஏதும் வைக்க விரும்பினால் வையுங்க சார். இப்ப அவசரமில்லை. மை பாத்ததுக்கப்புறமும் வேணுமெண்டால் வைக்கலாம். வைக்கத்தான் வேணுமெண்ட அவசியமுமில்லை. சாருக்கு இஷ்டம் போலைச் செய்யலாம்' என்றவர் சிவாவைப் பார்க்க,

சிவாவுக்கு ஆனந்தன் சொன்னது ஞாபகத்தில் வந்தது. காற்சட்டைப் பையில் இருந்து இருபது டொலர் தாள் ஒன்றினை எடுத்து வைத்தான்.

'சிலர் தட்சணை வைப்பதை விரும்புவார்கள். இது எனக்கில்லை. ஊரிலை இருக்கிற கருப்பண்ணா சாமி கோவிலிலை சாரின்ரை நாமத்திலை கொடுத்து விடுவேன்.' தம்பி போய்ச் சார் வருவதை சிவா கவனித்துக் கொண்டான். சாத்திரியார் மனைவியைப் பார்க்க,

அறையின் மின்விளக்கை அணைத்துவிட்டு கணவனின் அருகில் இருந்த கதிரையில் வந்து அமர்ந்து கொண்டாள். அறையில் இப்போது ஒரு மூலையில் இருந்த சிவப்பு மின்குமிழ் மாத்திரம் எரிந்து கொண்டிருக்க, அறை சிவப்பு நிற ஒளியால் நிறைந்திருந்தது.

சாம்பிராணி மணம் சிவாவுக்கு ஏதோ செய்வது போல இருந்தது. ஆனாலும் தாங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

சாத்திரியார் வெற்றிலையை எடுத்து, மைப் போத்தலில் இருந்து உறிஞ்சியால் மையை எடுத்து, வெற்றிலையின் மத்தியில் இரண்டு துளிகளை ஒன்றின் மேல் ஒன்றாக இட்டார். வெற்றிலையில் மைத்துளி பெரியதாய் பரவாமல், ஒரு குமிழ் போல் நின்றது. சிவப்பு நிற வெளிச்சம் அக்குமிழில் பட்டுத் தெறிப்படைய, குமிழ் சொல்லமுடியாத ஒரு நிறத்தில் ஒளிர்ந்து கொண்டு இருந்தது.

அடுத்த தடவையில் (சிவாவிற்கு) நாங்களும் மை பார்ப்போம்.

- இன்னமும் வரும்


**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 647.525.7820
Office Scarborough - 416.321.6969
24 hrs.
•Independently owned and operated

**DAISY MART**
Family Business in New Plaza At Tim Horton's North of New Market With 6/49 Loto

**COUNTRY HOME**
HWY 404 / EXTENSION
At Mccowan Brick Bungalow. 10 Acre. Senior Home. Invesment.

**New Brick Bungalow with bsmt apartment. 5 Acre. HWY 48 For Retirement**

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
**Rent will pay the mortgage.**
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

10 Acres in Holland lundry property with income. Good for seniors. Home, hobby, Farm.

**MERVIS & HWY 401**
2 Story detached home for sale. Very demand area.



**PARTY HALL EVENT CENTRE MEETING PLACE**
**AVAILABLE FOR RENT**
Starting from $100.00
**Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்...
போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.
ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. GTA Square Mall (FINCH & MIDDLEFIELD)
தொடர்புகளுக்கு: 416.917.6883

நகைச்சுவைத் தொடர் 271

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்



அது எனக்குத்தெரியும்.

செக்கண்ட்புளோர் செல்லம்மா அடிக்கடி உலகரிடமும் ஆட்டிலறி அன்னம்மாவிடமும் பேச்சுவாங்குவது. என்ன கதைத்தாலும் விழுந்தடித்துக்கொண்ட எனக்குத்தெரியும் என்று சொல்லுவதுதான். ஆனால் அந்தவிடயம் அவவுக்குத் தெரியாது. அன்று பலரின் பிரச்சினையே அதுதான். அது எனக்குத்தெரியும்






கார் வாங்குவது, வீடு வாங்குவது, வீட்டை வாடகைக்கு கொடுப்பது, பேஸ்மென்ரில் (தெரியாதவர்களை) குடியமர்த்துவது, என்ன பிரச்சினைகளையும் அலசி ஆராயாமல் அது எனக்குத்தெரியும் என நினைத்து எடுத்தகாரியங்கள் பல பலரை சட்டத்தின் முன் கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது.

உலகண்ணை தாமோதரம் வீட்டு பேஸ்மென்ரிலை ஆரோ வாடைக்கு இருந்தவையாம் என தொடங்கினா செக்கண்ட்புளோர் செல்லம்மா.



தமிழ் ஆக்கள் காசு தராயினமெண்டு வேறை நாட்டுக்காரருக்கு வாடைக்கு குடுத்தவனாம். மோலுக்கை கண்டுதானாம் பழக்கம். 4 மாத வாடகையும் குடுக்கேல்லையாம். அதோடை அவங்கள் வைச்சிருந்த கார் களவெடுத்ததாம். பொலீஸ் வந்து அவங்களையும் பிடிச்சுக்கொண்டு காரையும் ரோ பண்ணிக்கொண்டு போட்டினமாம். தாமோதரத்தையும் கோட்டுக்கு சாட்சி சொல்ல வரச் சொல்லியிருக்காம்.



உலகர் வந்தகாலத்திலிருந்தே பலர் பட்ட அவஸ்தைகளை நேரிலும் கேட்டும் அறிந்திருக்கிறார். உரிய சட்ட ஆலோசனை அல்லது அதற்குரிய அனுபவசாலிகளை அணுகாமல் தாம் நினைத்தபடி வீடு வியாபார நிலையங்கள் வாங்கி சாட்சியில்லாமல் எழுத்துப் பத்திரமில்லாமல் காசு கடன் கொடுத்து வீடு வாடகைக்கு கொடுத்து கார் வாங்க அல்லது தங்கடை கிறடிற்காட்டில் சிலநாள் பழகி 2 நாள் லஞ்ச் டின்னர் சாப்பிட்ட பழக்கத்தில் உதவிசெய்யப்போய் தமது சொத்து சுகமிழந்து குடும்பப் பிரச்சினைகள் தோன்றி தனித்திருப்பவர்கள் அதிகம் பேருண்டு. ‘துணைபோனாலும் பிணை போகாதே’ என்று தெரியாமலா பெரியோர்கள் சொல்லிவைத்தார்கள்.

ரூபியின் ரெலிபோன் மாறி மாறி அடித்துக்கொண்டேயிருந்தது. ரூபனும் ரூபியும் முணுமுணுப்பதும் மீண்டும் ரெலிபோன் பேசுவதையும் உலகர் ஆட்டிலறி அன்னம்மா செக்கண்ட்புளோர் செல்லம்மா மேயர் றொப்போட்டின் நடவடிக்கைகளை மீடியாக்கள் உன்னிப்பாக கவனித்து செய்தி சேகரிப்பது போல உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தனர்.



திடீரென ரூபியின் சத்தம் சிங்கம் 2 படத்தில் அனுஷ்காவின் குரல் போல பெலத்துக் கேட்டது. “டடி யு காவ் ரூ நோ கௌ ரு பாக்த கார். மோலுக்குப்போய் பயர் ரூட்டிலை பாக் பண்ணினா ரிக்கற் வைப்பினம் தானே. நான் கார் பழகேக்கை நீங்கள் தானே சொன்னனீங்கள். பப்பிளிக் பிளேஸ், எப்பாட்மென்ற்ஸ், பிறைவேற் பிளேஸ் எல்லாம் பாக்கிங் மாக் இல்லாத இடங்களிலை கார் பாக் பண்ணினா ரிக்கற் வைப்பினம் எண்டு. இப்ப என்னட்டை 250 டொலர் இல்லை. நெக்ஸ்ற் பே செக் எடுத்து கட்டுங்கோ. ரூபனிட்டையும் காசில்லை” என்று சொல்லிவிட்டு ரெலிபோனை கட்பண்ணிவிட்டு படையப்பாவில் நீலாம்பரி ரஜினி யைப் பார்ப்பது போல ஒரு பார்வை பார்க்க உலகர் குழாம் தங்கள் பார்வையை வேறுபக்கம் திருப்பியது.

இருந்தாலும் ரூபியின் ஆத்திரம் தீரவில்லை. யு நோ அன்னம்மா அன்ரி, டொக்டர் டடியை நல்லா நடக்க வேணுமெண்டவர். மோலுக்கை போய் நடக்கிறன் எண்டு சொல்லிப்போட்டு நடக்க ரயேட் எண்டு மோல் வாசல்லை காரை நிப்பாட்டிப்போட்டு இதுவும் பயர் றூட்டில்லை,






மோலுக்குள்ளை இவற்றை மோல் ப்றண்ட்ஸ் எல்லோரோடையும் நிண்டு விஜயின் தலைவா படம் தமிழ்நாட்டிலை தடைசெய்தது சரியோ பிழையோ எண்டு பட்டிமன்றம் வைச்சிருக்கிறார். உவர் மோலுக்குள்ளை நிக்கேக்கை பயர் றூட்டுக்கு ரிக்கற் வைச்சதெண்டு ஈ மெயில் இளையாம்பி அங்கிள் எனக்குச்சொன்னவர் என பொரிஞ்சு தள்ளினா ரூபி. ராசம்மா பார்த்தும் பாராமலும் இருந்தா.




ஈ மெயில் இளையாம்பிக்கு கொம்பியூட்டரே பாவிக்கத்தெரியாது. ஆனால் அவ்வப்போது அங்கிங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை அந்தந்தக்குடும்பத்தினருக்கு ஈமெயிலைவிட வேகமாகச் செய்தியனுப்பக் கூடியவர். நல்ல செய்திகளையும் சம்பவங்களையும் பகிர்வதை விட பிரச்சினைகளை உருவாக்குவதும் பரப்புவதும் சிலருக்கு ஒலிம்பிக்கில் ஓடாமல் மெடல் கிடைத்தது போலிருக்கும்.



அமளி துமளி ஓய்வதற்கு முன் செக்கண்ட்புளோர் செல்லம்மா ரூபனை அடிக்கடி வெளியிலை போனா எனக்கு ஒரு தலைவா கொப்பி எடுத்துக்கொண்டு வா. தமிழ் நாட்டிலை தடை செய்துபோட்டினமாம். கனடாவிலை தடையில்லைத்தானே. ஒருக்காப் பாப்பம்...என இழுத்தா.

ஓம். படம் வெளியிடேல்லையெண்டு ஆரோ பெடியன் தற்கொலை செய்திட்டானாம் எண்டா ஆட்டிலறி அன்னம்மா. பட்டினியிலை சனம். இறக்குது. படம் நேரத்துக்கு வரேல்லையெண்டும் இறக்குதுகள்.

ஆகஸ்ட் 15-31



16. ராமகிருஸ்ண பரமஹம்சர் நினைவு தினம் ஆகஸ்ற் 16 (பெப்ரவரி 18.1836—ஆகஸ்ட் 16.1886) சுவாமி விவேகானந்தர் இவரிடம்தான் சீடராக இருந்தார். அனைத்த மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.

16. பாடகி ஜிக்கி நினைவு தினம்.

18. நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் நினைவுதினம் (1945)

19. கனடா செல்வசந்நிதி தேர்.

19. உலக புகைப்படநாள்.



22. டி.எஸ் பாலையா பிறந்த தினம். (ஆகஸ்ற் 22.1941 – டிசம்பர் 21. 1972) ஆரம்பகாலத்தில் வில்லனாக நடித்தவர். பின்னர் நகைச்சுவைப்பாத்திரத்தில் முத்திரை பதித்தவர். காதலிக்க நேரமில்லை, தில்லானா மோகனாம்பாள், திருவிளையாடல் பாலையாவை மறக்க முடியுமா?

25. “அருள்மொழி அரசு” “திருப்புகழ் ஜோதி” திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் பிறந்த தினம். (ஆகஸ்ற் 25. 1906 - நவம்பர் 7.1993)






# யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361



# நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் கனடா

7வது கோடைகால ஒன்று கூடலும், விளையாட்டுப்போட்டியும் 2013

சிறுவர்களுக்கான போட்டிகள், பெரியவர்களுக்கான போட்டிகள், குடும்பத்தினருக்கான போட்டிகள், கயிறிழுத்தல், தண்ணீர் நிரப்புதல், பந்து பரிமாறல், கை மடித்தல், இன்னும் பல... பழைய மாணவர்கள், அவர்களின் வாரிசுகள், நலன் விரும்பிகள் அனைவரையும் அழைக்கின்றோம்.

Date: August 18, 2013 at 9:30 am to 6:30 pm
Place: Milliken Park, Picnic Area “A”
Scarborough, ON ( McCowan & Steeles)
Contact Number: 416.844.7390 / 416.508.0370

# நினைவுகள்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

அங்குலம் அங்குலமாக விவரிக்கும் வாலியின் வரிகள்தான். 'தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை, தண்ணீரில் பிழைக்க வைத்தான், கரைமேல் இருக்க வைத்தான் பெண்களை, கண்ணீரில் குளிக்க வைத்தான்... ஒரு நாள் போவார் ஒரு நாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம், ஒரு சாண் வயிறை வளர்ப்பவர் உயிரை, ஊரார் நினைப்பது சுலபம்... வெள்ளி நிலாவே விளக்காய் எரியும், கடல் தான் எங்கள் வீடு, முடிந்தால் முடியும் தொடர்ந்தால் தொடரும், இதுதான் எங்கள் வாழ்க்கை...' டி.எம்.எஸ். குரலை உயர்த்திப் பாடும் இந்த வரிகள் அளவுக்கு மீனவர்கள் துயரை வேறு யாரேனும் எழுதியிருக்கிறார்களா? தெரியவில்லை. மீனவ நண்பன் என்று எம்.ஜி.ஆரை சொல்லுவதை விட வாலியைச் சொல்வது பொருத்தமாக இருக்கும்.



தொடர்ந்து வந்த ரஜினி, கமல் காலகட்டங்களிலும், அடுத்து விஜய், அஜித், சூர்யா, விக்ரம், தனுஷ், சிம்பு, சித்தார்த் காலகட்டத்திலும் 'ஊர்வசி ஊர்வசி...', 'அம்மா என்றழைக்காத உயிரில்லையே...' என பல நினைவில் நிற்கும் பாடல்களை படைத்துச் சென்றிருக்கிறார், வாலி. கடைசி-வரை இளைஞர்களும் கொண்டாடும் திரைப் படப் பாடலாசிரியராக இருந்தார். தமிழ் மொழியில், குறிப்பாக வார்த்தைகளில் அவருக்கு அபாரமான அறிவு இருந்தது. எந்தெந்தக் காலத்துக்கு எந்தெந்த வார்த்தைகள் எடுபடும் என்பதை நன்றாக தெரிந்து வைத்திருந்தார். எந்த வார்த்தையை எங்கே பயன்படுத்தவேண்டும் என்பதில் தெளிவாக இருந்தார். தொடர்ந்து சமகாலத்துக்கு ஏற்றவாறு தன்னை தகவமைத்துக்கொண்டே இருந்தார். மிக வேகமாக அவரால் சந்தத்துக்கு ஏற்ற வார்த்தைகளை எழுதித் தரமுடிந்தது. இந்தத் திறமையெல்லாம் சேர்ந்துதான் 15,000 பாடல்கள் வரை அவரை நிற்க வைத்தது. 2007இல் பத்மஸ்ரீ விருதையும் மற்றும் பல தேசிய விருதுகளையும் வாலி பெற்றுள்ளார். எங்கள் தங்கம் (1970), இவர்கள் வித்தியாசமானவர்கள் (1979), வருஷம் பதினாறு (1989), அபூர்வ சகோதரர்கள், கேளடி கண்மணி (1990), தசாவதாரம் (2008) ஆகியப் படங்களில் எழுதிய பாடல்களுக்காக ஐந்துமுறை சிறந்த திரைப்படப் பாடலாசிரியருக்கான மாநில அரசின் விருதுகளையும் பெற்றுள்ளார்.

வாலி தொட்டு எழுதாத சந்தங்களே இல்லை என்று சொல்லலாம். பாலுமகேந்திராவின் 'மறுபடியும்' திரைப்படத்தில் வரும் 'எல்லோரும் சொல்லும் பாட்டு...' பாடலை கேட்ட எவரும் மறந்திருக்க மாட்டார்கள். 'மேடையே வையகம் ஒரு மேடையே, வேசமே அங்கெல்லாம் வெறும் வேசமே, மொத்தத்தில் வந்து கூடும் பின் ஓடும், நாம் கூத்தாடும் கூட்டமே' என்று சாக்ரடீஸ் சொன்ன பெருந்தத்துவத்தையே ஒரு பாடலுக்குள் அடக்கி சொல்லிவிட்டார் வாலி. ஆனால், இப்படி தத்துவமாக, காதலாக உருகி உருகி எழுதிய வாலிதான், 'எப்படி எப்படி சமஞ்சது எப்படி...' பாடலையும் எழுதினார் என்பது ஆச்சரியம்தான். இது தலைமுறைகள் கடந்தும் வாலி, சினிமாவில் நிலைத்து நிற்கவும் வணிக வெற்றிக்கும் காரணமாக அமைந்தது என்றாலும், வாலி என்ற ஆளுமைக்கு பெரிய சறுக்கலும் இங்கேதான் ஆரம்பித்தது. இந்தப் பாடலை ஆராய்ந்தால் பாடல் முழுக்கவே ஒரு மார்க்கமாகத்தான் இருக்கிறது. தேவா – வாலி கூட்டணிக்குப் பின்னர் இதற்குப் பெரிய அளவில் வெகுஜன அங்கீகாரமும் கிடைத்தது. 'பக்கம் வந்த மாமா, இதுக்கு பேரம் பேசலாமா? பாக்குப்பாய போட்டு, நீயும் பயாஸ்கோப்பு காட்டு', 'சின்ன ராசாவே சித்தெறும்பு என்ன கடிக்குதா' என்று வாலி தொடர்ந்து எழுதினார். பெண்களை குளமென்றும் ஆணை அதில் குளிக்க வரும் ஆள் என்றும் எழுதித் தள்ளியிருக்கிறார்.

ஆனால், வாலி இந்த விமர்சனங்களைப் பற்றி எல்லாம் கண்டுகொள்ளவே இல்லை. "நான் காசுக்கு பாட்டெழுத வந்தவன்" என்று சுயவாக்குமூலம் கொடுத்தார். ஆனாலும், உள்ளூர அவருக்கு இது சம்பந்தமான சங்கடங்கள் இருந்திருக்க வேண்டும். 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் 'அவதார புருஷன்' தொடர் எழுதிய போது முதல் வாரத்திலேயே 'காமன் கதை எழுதி காயங்கள் பெற்ற நான், ராமன் கதை எழுதி ரணங்களை ஆற்ற உள்ளேன்' என்று எழுதினார். சமூக அவலங்களை சாடி அவ்வப்போது பேனா பிரித்து தோலுரிக்கும் படைப்பாளியாக தன்னைக் காட்டிக்கொள்ளவும் தவறியதில்லை. ஆனால், அவை எல்லாமே போலியானவை என ஒரு தேர்ந்த வாசகரால் கண்டுகொள்ள முடியும். வாலி மீதான இன்னொரு முக்கிய விமர்சனம், எவ்விதத் தேவையும் இல்லாமலும்கூட தொடர்ந்து ஆங்கில வார்த்தைகளைப் பயன்படுத்திக்கொண்டே இருந்தது. 'அழகு ஒரு மேஜிக் டச், ஆசை ஒரு காதல் ஸ்விட்ச்' என்று எம்.ஜி.ஆர். – சிவாஜி காலகட்டத்திலேயே எழுதிவிட்டார். கடைசிவரை இப்படிப் பாடல்களை எழுதித் தள்ளியிருக்கிறார். பிற்காலங்களில் வரவர இது கூடிக்கொண்டேதான் இருந்தது. இது பற்றி சர்ச்சைகள் வந்தபோதெல்லாம், அவருடைய ஒரே பதில், 'கம்பன் கழகத்தில் மட்டுமே நான் கவிஞன்' என்பதே. ஆனால், கம்பன் கழக கவியரங்களில் அவர் பேசியவை வெற்றுச் சிலேடைகளாகவே மிஞ்சுகின்றன.

பாடல்கள்கள் மட்டுமல்லாது, சில படங்களுக்கு கதை வசனமும் எழுதியுள்ளார் வாலி. 'பொய்க்கால் குதிரை', 'சத்யா', 'ஹே ராம்', 'பார்த்தாலே பரவசம்' உள்ளிட்ட படங்களில் நடிக்கவும் செய்துள்ளார். இருபது நூல்களையும் எழுதியுள்ளார். எம்.ஜி.ஆருக்கு வாலி எழுதிய பாடல்களில் அரசியல் பாடல்கள் மெச்சத்தக்கவை என்றாலும் வாலியின் அரசியலைப் பற்றிப் பேசாமல் இருப்பதே நல்லது. அதிலும் கருணாநிதிக்கு கடைசி காலங்களில் அவர் வாசித்த 'சால்ரா' கவிதைகள் அருவருப்பூட்டுபவை. 'நான் ஆணையிட்டால்' பாடலில் வரும், 'காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன்' என்ற வரியில் வாலி, காக்கைகள் என்று காமராஜரையே சொல்வதாக ஒரு விமர்சனம் உண்டு. எம்.ஜி.ஆரோ அன்றைய அரசியல் சூழலோ இப்படியொரு வரியைக் கேட்டிருந்தாலும், காமராஜர் போன்ற ஒரு பெருந்தலைவரை இப்படிப்பட்ட வார்த்தைக-ளால் பழிக்கமாட்டேன் என வாலி சொல்லியிருக்க வேண்டும் அதுதான்



படைப்பு நேர்மை. இப்படிப்பட்ட விமர்சனங்கள் வழி, திரைப்படப் பாடல்கள் தவிர்த்து, வாலியின் பங்களிப்புகளைப் பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சும். ஆனாலும், தன் பாடல்களின் வரிகள் மூலம் இன்னும் நீண்ட காலம் தமிழர்கள் மனங்களில் வாழ்வார், வாலி.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


# அஞ்சலி ஈஸ்வரமூர்த்தி இன் பரதநாட்டிய அரங்கேற்றம்

ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி City Playhouse Theater, Toronto இல் அஞ்சலி ஈஸ்வரமூர்த்தியின் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. ஆரம்பமுதல் இறுதிவரை அரங்கம் நிறைந்த நிகழ்வாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது. 10 வருடங்களுக்கு மேலான பரதநாட்டியப் பயிற்சிகளில் ஈடுபட்டுவரும் அஞ்சலி தனது பதின்நான்கு வயது ஆரம்பத்திலேயே தனது குரு திருக்கலாலயம் நாட்டியக் கல்லூரி இயக்குனர் திருமதி திருமகள் ரவீந்திரனிடம் கற்ற கலையை மிகச் சிறப்பாக சபையோர் முன்னிலையில் ஆடற்கலை மூலம் நிரூபித்து இருக்கின்றார். நிகழ்ச்சியின் ஆரம்பமுதல் இறுதிவரை அரங்கினுள் ஆடல், பாடல், இசைப் பிரவாகம், கை தட்டல் என்ற சத்தங்களைத் தவிர வேறு எதனையும் கேட்க முடியாத அளவிற்கு நிகழ்ச்சியை மிகவும் ரசிக்கத்தக்க வகையிலும், திறமையாகவும், முழுமையாகவும் வெளிப்படுத்திருந்தார் நாட்டிய நங்கை. மிக நீண்ட உருப்படியான வர்ணம் இவ்வளவு நேர்த்தியாக, திறமையாக அமைந்து எல்லோராலும் ரசிக்கத்தக்கதாக மிகவும் அருமையாக அமைந்திருந்தது. அனைத்து உருப்படிகளும் கடினமான அசைவுகளைக் கொண்டிருந்தும் இவற்றை தனது தேர்ச்சியான ஆடற்கலை மூலம் சபையோரிடம் வெளிப்படுத்தி இருந்தார் அஞ்சலி. ஆடற்கலையிற்கான உடையமைப்புகள் மிக அழகாக, நேர்த்தியாக அமைந்திருந்தது பரதத்திற்கு மேலும் சிறப்பூட்டியது. பக்கவாத்திய இசை வழங்கிய கலைஞர்கள் திறமை வாய்ந்த இளம் கலைஞர்கள் பலரை உள்ளடக்கி கூடவே அனுபவம் நிறைந்த கலைஞர்களையும் உள்ளடக்கி இருந்தது.

ஆதிரை சிவபாலன் ரோஷான் இன் குரல் வளம் பரதநாட்டித்திற்கு மிகவும் சிறப்பூட்டியது. புலவர் ஈழத்து சிவானந்தன் பிரதம விருந்தனராக கலந்து சிறந்தொரு உரையை நிகழ்த்தியிருந்தார். இதற்கு சிகரம் வைப்பது போல் அமைந்திருந்தது கலாநிதி



அழகானந்த நாத் இன் மதிப்பீட்டுரை. ஒரு முழுமையான இனிய பரதநாட்டிய அரங்கேற்றத்தை பார்த்து ரசித்த திருப்தியில் ரசிகர்கள் மண்டப வாயிலை வாழ்த்துக்களுடன் விட்டகன்றதை பார்க்கக் கூடியதாக இருந்தது.
















Free Real Estate Class - Call: 416.321.6969










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

